Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 20.00

ஏப். 19 - 25, 2007

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 708




கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## இந்து சமயப் பொக்கிஷங்கள்

**வேதங்கள்,** உபநிடதங்கள், புராணங்கள் போன்றன இந்து சமயத்தின் பொக்கிஷங்கள். அவற்றைப் பற்றி ஓரளவாவது ஒவ்வொரு இந்துவும் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இந்தப் பூவுலக வாழ்வில் மனிதப் பிறவியெடுத்த நாம் ஆறறிவு பெற்ற மனிதனாக வாழ அவசியம் மேலே கூறப்பெற்ற நூல்களைக் கற்றுணர வேண்டும்.

இல்லாது போனாலும் கூட நல்ல கைதேர்ந்த இந்து சமயக் குருவின் வழிகாட்டலில் வயப்பட வேண்டும். அதுவுமின்றேல் நமது சைவ சமய கலை, கலாசார, ஒழுக்க நெறிகளைப் பின்பற்றி ஒழுகப் பழகிக்கொள்ள வேண்டும்.

விஞ்ஞான ரீதியாக நமது சமயம் விரிந்து பரந்தது. தத்துவ விளக்கங்களுடன் தற்போது புத்திஜீவிகளால் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இந்துமதக் கொள்கைகள் பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. வேற்று நாட்டவர்களால் கூட வியந்து மதித்து போற்றிப் பேசப்படுகிறது இந்து சமய தர்மம். அன்பே பிரதானமானது. எனவே நாம் இந்து தர்ம நூல்களைக் கற்று மனிதனாக வாழப் பழகுவோமாக.

**சிவஸ்ரீ அ.அரசரெட்ணம் ஐயர், சேனையூர்.**



## எமது சமயம் மரிக்க வேண்டும்!

**ஒருவன்** மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

(யோவான் 3:3)

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நிக்கொதேமு என்ற பரிசேயனைப் பார்த்து இப்படிக் கூறுகிறார். இது நமக்கும்தான். மறுபடியும் பிறத்தல், இது எப்படியாகும்? அதற்கு முன்னால் நாம் மரிக்க வேண்டும். அதாவது எமது சுயம் மரிக்க வேண்டும். எமது பெருமை மரிக்க வேண்டும், எமது இச்சை, புத்தி, ஞானம், பலம், என்னால்தான் இது ஆயிற்று என எண்ணுகிற சுபாவம் மரிக்க வேண்டும். இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். (கலாத்தியர் 2:20) என்கிற நிலை எமக்குள் வரும்போது தேவனுடைய ராஜ்யத்தைக் காணக் கூடியவர்களாயிருப்போம்.

மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டக் கடவன் (11 கொரிந்தியர் 10:17) ஆமேன்.

**-சகோ.போல்ஜோன், தெல்தெனிய.**

## உத்தம நபியின் உதயம்

**ஹிஜ்ரி** 1428 ஆண்டுகளுக்கு முன் ரபீயுல் அவ்வல் மாதம் பிறை 12இல் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவதரித்தார்கள். அன்னாரின் பிறந்த தினம் சிற்றூரிலும் பெரு நகரிலும் நினைவு கூரப்படுகிறது.

இயற்கை வளமின்றி, இறை உணர்வின்றி, ஒழுக்கம் எதுவுமின்றி கிடந்த அக்கால மக்களிடையே உத்தம நபியின் உதயம் அளப்பரிய மாறுதலை ஏற்படுத்தியது.

அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகின்றான்.


நிச்சயமாக இறைவனின் தூதரிடம் உங்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது என்று. ஆம் இந்த திருமறையின் விளக்கம் என்றும் மனித குலத்துக்கு வழிகாட்டும் பேரொளி இறை தூதரே என்பதை எமக்கு வலியுறுத்துகிறது.

மேல் நாட்டு பேரறிஞர் ஜோர்ஜ் பெர்னாட்ஷா கூறுகின்றார்; நான் முஹம்மது நபியின் வாழ்க்கையைப் படித்தேன். அவர் மனித இனத்தை அழிவிலிருந்து பாதுகாக்க வந்தவர் என்று.

ஆகவே அகிலமே ஏற்றுக் கொள்ளக்கூடிய அண்ணல் நபியின் வாழ்க்கையை நாளும் நடைமுறையில் நாம் கடைப்பிடித்து உய்வடைவோம்.

**-எம்.சி.கலீல், கல்முனை - 07**

## கவிதைப் போட்டி இல.704



பாராட்டுக்குரியது

### வித்தியாசம்!

புதை குழியில்
நிம்மதியாகத்
தூங்குவார்கள்!...
பதுங்கு குழியில்
நிம்மதியின்றித்
தூ(த)ங்குவார்கள்!

கோட்டைமுனை
ரஷீட்,
பதுளை.

## கவிதைப் போட்டி இல.708

### பரிதாபம்!


பள்ளி சென்று
படிக்க வேண்டிய
பாலர்கள்
பாவம்
பங்கரில்
பதுங்கும்
பரிதாபம்!

*-முஹம்மது ஹஸனி,*
*கல்முனை - 07.*

### ஓடி ஒளி பாப்பா!

'ஓடி விளையாடு பாப்பா'
என்றதோ
அந்தக் காலம்.
பதுங்கு குழியில்
'ஓடி ஒளி பாப்பா'
என்பதோ
இந்தக் காலம்!

*-முஸ்னா றஷிகா,*
*கல்முனை - 07.*



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 24.04.2007.

கவிதைப் போட்டி இல.708
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### சாதனை

நாட்டைப் பிரிக்கப் பார்த்தான்
கின்னஸ்ஸில் தன் பெயர்
வருமென்று வரவில்லை.
அதுதான் எம்மைக் கொன்றாவது
தன் பெயரை கின்னஸில்
பதியப் பார்க்கிறான்
சாதனையென்று!

*-இரா.தாரணி,*
*நுவரெலியா.*

### பயிற்சி

சிறுவர்களை வலை வீசி
சிறையில் அடைத்து வைத்து
இளமையில் பயிற்சி - போருக்கு
இரையாக்கக் கொடுக்கும்
பாதகத் திட்டத்தின்
முதல்படியாய்
பாதாளக் குழிகளுள்
வாழப்பழக்குகின்றார்.

*-சீ.தங்கவடிவேல்,*
*மட்டக்களப்பு.*

### மண்ணறை வாழ்வு

மரித்தபின் மண்ணறையில்
அடங்கச் செய்தான்
இறைவன்;
உயிருடன் மண்ணறையில்
வாழச் செய்தான்
மனிதன்.

*-ஏ.ஜே.பாத்திமா பஸ்னா,*
*கொடிகாவத்தை.*




### எதிரொலி

எதிரிகள் ஒன்றாகக் கூடி
எள்ளி நகையாட,
சர்வ தேசமும் பார்த்துப் பார்த்துக்
காறி உமிழ,
சிறுவர்களைப் பற்றி நீங்கள்
சிந்திக்கவில்லையா?
அநியாயம் செய்வதற்கும் ஒரு
அளவே இல்லையா?
என்றாவது ஒரு நாள்...
மனித உரிமை மீறல் அவலத்தில்
மாட்டித் தவிப்பீர் அகிலத்தில்.

*-ஆர்.இளங்கோவன்,*
*கொழும்பு - 14.*

### துள்ளித் திரியும் பருவத்தில்...!

சுதந்திரமாய்...,
சுகமான சூழலில்...,
துள்ளி ஓடியாடும்...,
விளையாடிடும் வயதில்...,
சுதந்திரம் இழந்து...,
சுற்றம் இழந்து...,
பதுங்கி, பதுங்கி வாழும்...,
நிலைதான் மாறுமா ஓர் நாள்...?

*-ரி.மானு,*
*கொழும்பு - 13.*

### யுத்த அனர்த்தம்

விடாப்பிடித்தனமும்
கொடாக்கரத்தனமும்
அடாவடித்தனத்தில்
அர்த்தமற்ற யுத்தம்
சுத்தித் தொடர்வதால்
ஆட்டிலெறிக்குப் பயந்து
அகழிக்குள் பதுங்கும்
பிள்ளைகள்.

*-கவிக்குயிலன்,*
*சேனையூர் - 06.*

# உங்கள் பக்கம்

## இப்படியும் நடக்கிறது!

**தலைநகரில்** முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்தி பயணம் செய்யும் தமிழ் மக்களுக்கு ஓர் எச்சரிக்கையாக எனது அனுபத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த ஐந்தாம் திகதி இரவு எட்டு மணியளவில் நானும் எனது நண்பரும் தெமட்டக்கொடையிலுள்ள மதுபான விற்பனை நிலையமொன்றில் ஜாலியாக் ஒரு மணி நேரத்தைக் கழித்து விட்டு, வெளியே வந்து முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கு அமர்த்தினோம். நாம் இருவருமே கொழும்பில் பிறந்தவர்களென்பதால் சரளமாகச் சிங்களம் பேசுவோம்.

எனது நண்பரை மாளிகாவத்தையிலுள்ள அவரது வீட்டில் விட்டு விட்டு பொரளையிலுள்ள எனது வீட்டுக்குச் செல்வதற்கு வாடகையைப் பேசி முச்சக்கர வண்டியை அமர்த்திக் கொண்டோம். அப்போது முச்சக்கர வண்டியில் சாரதியின் இன்னொரு நண்பர் அமர்ந்திருந்தார். அந்த நண்பரையும் ஏற்றிக் கொள்ளவா என்று சாரதி கேட்டார். அதற்கு நாம் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. மாளிகாவத்தையில் நண்பரை இறக்கி விட்டு, பொரளையை நோக்கி வண்டி சென்று கொண்டிருக்கையில், பொரளை ரயில்வே கடவைக்குப் பக்கத்து வீதியில் வண்டியைத் திருப்பிய சாரதி, அதனை ஓர் ஒதுக்குப்புறமாகன இடத்தில் நிறுத்தி விட்டு "நீ புலியா, எடு உன்னுடைய அடையாள அட்டை"யை என்று சிங்களத்தில் மிரட்டினான். நான் "நீ யார் எனது அடையாள அட்டையைக் கேட்பதற்கு" என்று சிங்களத்தில் பதிலைக் கூறிவிட்டு வண்டியை விட்டு இறங்க முயன்றபோது, பின்னாலிருந்தவன் கத்தியை நீட்ட, சாரதி கூர்மையான கம்பியொன்றை எனது மார்புக்கு நேரே பிடித்துக் கொண்டு மறு கையால் எனது காற்சட்டைப் பொக்கெற்றுக்குள் கையை விட்டு என்னிடமிருந்த இரண்டாயிரம் ரூபாயை அபகரித்துக் கொண்டு, கை விரல்களிலிருந்த இரண்டு மோதிரங்களையும் உருவி எடுத்துக் கொண்டான். ஆள் நடமாட்டம் இல்லாத அந்தப் பாதையில் கூச்சல் போடுவதில் அர்த்தமில்லை. கூச்சல் போட்டாலும் குத்தி விடுவார்கள் என்ற பயம் எனக்கு. இருந்ததையெல்லாம் இழந்து விட்டு "தலை தப்பினால் தம்பிரான் புண்ணியம் என்று" நினைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். எனது இந்த அனுபவம் மக்களுக்கு ஒரு பாடமாக அமையட்டும். மக்கள் முன்பின் தெரியாதவர்களின் முச்சக்கர வண்டியில் ஏறுவதைத் தவிர்த்துக் கொள்வதுடன், தேவையில்லாமல் வேறு ஒருவரையும் வண்டியில் ஏற்றிக் கொள்ள அனுமதிக்கக் கூடாது என்பதுடன் தாம் பயணம் செய்யும் முச்சக்கர வண்டியின் இலக்கத்தை முன்கூட்டியே குறித்துக்கொள்வது பாதுகாப்பானது.

*பாதிக்கப்பட்ட*
*நலன் விரும்பி.*

# வாசகர் சாலை

## சூடு + சுவை + சுவாரசியம்

பத்திரிகைத் தோட்டத்தில்
பூத்த புது(மை) மலர்!

பத்திரிகை வடிவில்
மிகச்சிறந்த முன்னோடி!

பத்திரிகை வானில்
பூத்த விடிவெள்ளி!

வாசகர் மனங்களைக்
கொள்ளைகொண்ட

அழகான
கொள்ளைக் காரி!
வந்தவெகு வேகத்திலேயே
வாசகர் குழாம்களை
வளைத்துப்போட்ட

புதுவித மந்திரசக்தி!

விடிந்தடித்துக்கொண்டு
விருப்போடு வாங்கவைத்த
தரம் மிகுந்த
விற்பனைச் சரக்கு!

அதிகப்படியான
விற்பனையை எட்டிய
ஒரு வாரப்பத்திரிகை!

அளவுக்கதிகமான
போட்டி அம்சங்களை
அள்ளித்தந்த
ஓரேயொரு பத்திரிகை!

சூடு, சுவை, சுவாரசியம்

என்பவைகளுக்கு
அர்த்தம் கற்பித்த
புதுநாமம்!

பத்திரிகையில்
பேரொளி வீசும்
தனிமுத்து!

அன்றுபோல
இன்றும்
இனி என்றென்றும்
வாச வாசகர்தம்
தனிச் சொத்து!

*-ப்ரியமுடன்,*
*வாசகன்.*

## முரசுக்கு முதற் கண் நன்றி!

வாசக நேயர்களுக்கு நேசக் கரம் நீட்டும் முரசு, என்னால் எழுதப்பட்ட "உண்மைக் காதல்" என்ற சிறுகதையை அதன் 703ஆவது இதழில் பிரசுரித்து என்னை அக மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. முரசுக்கு முதற் கண் நன்றி.

இது ஓர் கற்பனைக் கதையாக இருந்தாலும், நம் நாட்டில் நாளும் நடக்கும் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டது. இக் கதைக்கு வாசகர்கள் எனக்கு அனுப்பிய வாழ்த்து மடல்களுக்கு வாசகர்சாலை மூலம் வந்தனம்.

*- எம்.சி.கலீல்,*
*கல்முனை - 05.*

## சாதனைப் பாடகர்!

தமிழிலும் பிற இந்திய மொழிகளிலும் - பல்லாயிரக்கணக்கான பாடல்களைப் பாடி சாதனை படைத்த பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பற்றிய தகவல்களைத் தாங்கி 'பாடும் நிலாவின் சாதனைப் பயணம்' தொடர்கட்டுரையைப் படித்துப் பரவசமடைந்தேன்.

'பயங்கரவாதத்தின் பங்காளிகளாகும் சிங்களப் புலிகள்' என்ற தலைப்பில் 'மதியூகி' அலசிய விஷயங்கள் மூலம் நாம் அறியாத பல விஷயங்களை அறிந்து கொள்ள முடிந்தது. தகவல் பெட்டி மூலம் பல புதுமையான தகவல்களை அறிந்து கொள்ள முடிந்தது.

*- முஹம்மது ஹஸனி,*
*கல்முனை - 07*

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# மாற்றுத் தமிழ் அமைப்புகளின் பொது இணக்கப்பாட்டு
## தீர்வு யோசனைகளைக் கோருகிறார் யசூசி அகாசி

தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இறுதி யோசனைகள் விரைவில் வெளிவரவிருக்கும் தருணத்தில், மாற்றுக் கருத்துக் கொண்ட தமிழ் அரசியல் கட்சிகள் தமது பொது இணக்கப்பாட்டு யோசனைகள் முன்வைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளன. உடல், உள ரீதியாக வலுவிழந்த உலகளாவிய மக்களின் ஐ.நா.சமவாயத்தில் கைச்சாத்திடுவதற்கென நியூயோர்க் சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு, முன்வைக்கப்பட்ட கருத்துக்களையடுத்தே இந்த முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. நியூயோர்க்கில் ஜப்பானின் விசேட சமாதானப் பிரதிநிதி யசூசி அகாசியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்துப் பேசியிருந்தார். அப்போது இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் ஏற்பட்டிருக்கும் தடங்கல்கள் குறித்து இரு தலைவர்களும் கலந்துரையாடினர். கடந்த காலங்களில் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தை முயற்சிகளை குழப்பியடித்த விதம் குறித்தும் அமைச்சர் தேவானந்தா எடுத்து விளக்கினார். என்றுமே இலங்கையின் அரசியல் யாப்புக்கு விரோதமான கோரிக்கைகளையும் மாற்றுத்தரப்பினால் ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளை புலிகள் விதித்து வந்தமை குறித்தும் அமைச்சர் விலாவாரியாக எடுத்து விளக்கினார். இலங்கை அரசாங்கம் அரசியல் தீர்வுக்கான பொது இணக்கப்பாட்டு தீர்வு யோசனையை முன்வைக்கப்போகிறது.



நியூயோர்க்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் யசூசி அகாசியும் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம்.

இதன் அடிப்படையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் சட்ட வாக்க சபையான பாராளுமன்றம், அரசியல் யாப்பு சீர்திருத்தங்களை முன்வைத்து, தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தீர்வுகளை முன்னெடுக்கப்போகிறது. தமிழீழமென்ற வெளிவாரிச் சுயாட்சியை (நாடு பிரிவினை) வலியுறுத்தியிருக்கும் பிரபாகரன் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் உள்ளக சுயாட்சியை ஏற்றுக் கொள்வாரா என்று நினைக்கிறீர்களா என அமைச்சர் டக்ளஸ் அகாசியைப் பார்த்து கேள்வியெழுப்பினார்.

"சிக்கலான விடயம் தான். புலிகள் சமாதானத் தீர்விற்கு வரத் தவறினால் மாற்று வழியைக் காணவேண்டிய நிலை சர்வதேச சமூகத்திற்கு ஏற்படும். ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்திற்குத் திரும்பிய தமிழ் அரசியல் அமைப்புகளும் குழுக்களும் பொது இணக்கப்பாடொன்றுக்கு வந்து, முன்வைக்கும் மாற்று யோசனைகளை அடிப்படையாக வைத்து தீர்வு முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியேற்படும்" என்று அகாசி பதிலளித்தார்.

அது மட்டுமல்ல தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உட்பட ஜனநாயக வழிக்குத் திருமபிய ஏனைய தமிழ் குழுக்களும் இணைந்து ஒரு பொது இணக்கப்பாட்டினை முன்வைக்க வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார் அமைசசர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈழமககள ஜனநாயகக் கட்சி வடக்குக் கிழக்கில் பரவலாக இயங்கி வருவதால் இதற்கான முன் முயறசிகளை ஈ.பி.டி.பி.மேற்கொள்ள வேணடுமென்றும் அகாசி வலியுறுத்தினார். ஈ.பி.ஆர்.எல.எப். இன் நாபா அணி, புளொட அமைபபின அரசியல் பிரிவு ஆகியவை இது தொடாபான சந்திப்புக்களை விரைவில் ஆரமபிகக இருககின்றன. இதற்கிடையில் இந்தியா சென்றுளள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்குளள அதிகாரிகளுடனும் அரசியல யாபபு நிபுணர்களுடனும் பேச்சுவாாததை நடததி வருகின்றார். மாகாண சபைகளை தேர்தல் மூலம் செயறபட வைதது, கூடுதல் அதிகாரங்களை வழங்கி வடக்கில் காததிரமான உள்ளக சுயாட்சியை முன்னெடுபபதற்கு ஏற்கனவே மூன்று கடட யோசனைகளை அமைச்சரின் ஈழமககள ஜனநாயகக் கட்சி முன்வைத்திருக்கிறது. இரணடு தசாப்தங்களுக்கு மேற்பட்ட யுத்தததால பாதிககப்பட்டு, அதன் கோர வடுககளை சுமநது கொண்டிருக்கும் வடக்கு, கிழககை ஒனறிணைத்து அதற்கு சமசசீரறற அதிகாரப் பகிர்வு (Asymmetrical Debolution) வழஙகப்பட வேண்டுமெனறு வலியுறுத்தப்பட்டு வருகின்றது. அதாவது கூடுதலான இழப்புகளைச் சந்தித்த வடக்கு கிழக்கிலேயே அகதிகள், விதவைகள், அனாதைகள, வாழ்வில் ஊனமுற்றோர் அதிகளவில் வாழகின்றனா். அத்துடன் உட்கட்டமைபபு வசதிகள் பெருமளவிற்கு சீரழிந்து போயிருக்கின்றன. எனவே வடக்கு, கிழக்கு பிரச்சினைககுச் சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வே சாவலோக நிவாரணியாக அமையுமென்றும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

# ரெலோ எம்.பி.க்கள் இந்தியா பயணம்

செல்வம் அடைக்கலநாதன், சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா ஆகிய மூன்று தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்களும் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கின்றனர். தமிழகத்திலுள்ள தமிழ் தேசிய இயக்கம், பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள் போன்ற புலிச்சார்பு கட்சிகளுடன் இவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். தமிழக முதலமைச்சர் கருணாநிதியை தனிப்பட்ட ரீதியில் சந்தித்துப் பேசுவதற்கு இவர்கள் முயற்சி எடுத்து வருவதாகவும் தமிழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புலிகள் இயக்கத்திற்கு எதிரான எதிர்ப்பு அலைகள் புதிய வேகத்தில் தமிழகத்தில் எழுந்திருப்பதால் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து தாஜா பண்ண முனைகிறார்களென்றும் செய்திகள் கூறுகின்றன. ஆனால் முதல்வரைச் சந்திக்கும் முயற்சிகள் பூஜ்ஜியமாகப் போய் விடுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கிடையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் ரெலோ எம்.பி.க்களின் இந்த இந்திய விஜயம் குறித்து மனத்தாங்கல் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமக்குத் தெரியாமல் தனிப்பட்ட வகையில் கூட்டாக ரெலோ எம்.பி.க்கள் இந்திய விஜயத்தை மேற்கொண்டிருப்பது சந்தேகத்தை எற்படுத்தியிருக்கிறது.

# கனடியப் பிரதமர் வெளியிட்ட புத்தாண்டு
## வாழ்த்துச் செய்தியால் இலங்கையில் பெரும் சர்ச்சை!

இந்து தமிழ் மக்களின் சித்திரைப் புத்தாண்டை வாழ்த்தி கனடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹார்பரின் சார்பாக கனடியப் பிரதமரின் அலுவலகம் வெளியிட்ட வாழ்த்துச் செய்தி கனடாவிலும் இலங்கையிலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ் புதுவருடமான சித்திரைப் புத்தாண்டை கொண்டாடும் அனைவருக்கும் மனம் கனிவான வாழ்த்துக்கள் என்று பிரதமரின் அலுவலகம் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வார்த்தைகளே இந்த சர்ச்சைக்கு காரணமாக அமைந்திருக்கிறது. தமிழர்களெல்லோரும் இந்துக்களல்லர் இந்துக்கள் எல்லோரும் தமிழர்களுமல்லர் என்பதே இந்த சர்ச்சையின் அடிநாதமாக விளங்குகிறது. அதாவது தமிழர்களுக்கென்று சித்திரைப் புத்தாண்டு இல்லையென்பதே இவர்களின் வாதமாகும். அந்தக் கருத்து உண்மைதான் என்ற போதிலும் கனடியப் பிரதமர் அலுவலகம் தெரியாமல் விட்ட ஒரு தவறை ஊதிப் பெருப்பிக்கக் கூடாது என்று கொழும்பைச் சேந்த பிராமண குருவான தில்லையம்பல குருக்கள் தெரிவித்தார். இந்தியா, இலங்கை, நேபாளம் ஆகிய நாடுகளிலெல்லாம் வாழும் இந்து மக்கள் அனைவருமே தமிழர்கள் அல்லர் என்பதே விமர்சிப்பவர்களின் வாதமாகும். இந்தியாவின் தமிழ்நாடு, கன்னடம், கேரளம், மணிப்பூர், வங்காளம், அசாம், ஒரிசா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் எல்லாம் வாழும் இந்துக்கள் தமிழர்கள் அல்லர் என்பது உண்மைதான்.

பாரம்பரியமாக இலங்கையில் வாழ்ந்து வரும் சிங்கள பௌத்த மக்களும் தமிழ் இந்து மக்களும் சித்திரைப் புத்தாண்டை ஒரே நாளில் கொண்டாடுகின்றனா். இவாகளின் பழக்கவழக்கங்களிலும் கிரியைகளிலும் வித்தியாசங்கள் காணப்பட்டாலும் சமய கலாசார பிணைபபுகள் இருப்பதை மறுத்துவிட முடியாது என்கிறார் தில்லையம்பல குருககள், கண தெய்யோ (பிள்ளையாா்), பத்தினி தெய்யோ என்ற தமிழ் இந்துக்களின் கடவுளாகளையும் பௌததா்கள் கோயில் கட்டி பூஜிக்கின்றனா். தமிழ் நாட்டில் சைவம், சாக்தம், சமணம், வைணவம் போன்ற பிரிவுகள் இருந்த காலத்தில் தமிழாகள் புதத சமயத்தையும் தழுவி வாழ்ந்திருக்கிறார்கள். சிங்களப் புத்தாண்டு என்ற வார்த்தையையும் சேர்த்துக் கொள்ளத் தவறியதாலேயே சில சிங்களத் தேசியவாதிகள் இதனைப் பெரிதுபடுத்துகின்றனா் என்றும் கூறுகிறாா் தில்லையம்பல குருக்கள்.

# சிறந்த ஆய்வுப் பத்திரிகையாளருக்கான
## சர்வதேச விருது இலங்கையருக்கு!



றிச்சர்ட் டீ சொய்சா

இலங்கையரான தாலிப் டீன் என்ற பத்திரிகையாளருக்கு கடந்த வருடத்திற்கான சுதந்திர பத்திரிகைத் துறைத் திறமைக்கான றிச்சர்ட் டீ சொய்சா விருது வழங்கப்பட்டிருக்கிறது. ஐ.பி.எஸ்.என்ற செய்தி நிறுவனத்தின் ஐ.நா.பிரிவு தலைவராகவும் பிராந்தியப் பணிப்பாளராகவும் டீன் பணியாற்றி வருகின்றார். புலனாய்வுப் பிரிவுத் துறையின் சிறந்த பத்திரிகையாளருக்கான விருதே இவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஐ.பி.எஸ்.நிறுவனத்தின் முன்னாள் பத்திரிகை ஆசிரியராக விளங்கிய ரிச்சர்ட் டீ சொய்சா, 1990ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி இலங்கையில் ஆயுதக்குழுவொன்றினால் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சி உச்சம் பெற்றிருந்த 1988 - 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறந்த பத்தி எழுத்தாளராகத் திகழ்ந்தவர் றிச்சர்ட் டீ சொய்சா. தொலைக்காட்சி நாடக நடிகராகவும் திகழ்ந்த இவர் கொல்லப்பட்ட போது அவருக்கு 32 வயது. டாக்டர் மனோராணி சரவணமுத்துவின் புதல்வரான இவர், சர்வதேசத்தில் அறியப்பட்ட பத்திரிகையாளராகத் திகழ்ந்தார். இவர் கொல்லப்பட்ட பின்னர் 1990ஆம் ஆண்டு ஐ.பி.எஸ்.விருது இவருக்கு வழங்கப்பட்டது. ஜனநாயகம், மனித உரிமைகள், பன்முகத்தன்மை ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்லும் சிறந்த சர்வதேசப் பத்திரிகையாளர்களை கௌரவிக்கும் முகமாக இந்த விருது ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருட ஐ.பி.எஸ்.விருதை தட்டிச் சென்றிருக்கும் தாலிப் டீன் லேக்கவுஸ் பத்திரிகை நிறுவனம் வெளியிடும் ஆங்கிலத் தினசரியான டெயிலி நியூஸின் பிரதி செய்தி ஆசிரியராக பணியாற்றியவர். இவர் நியூயோர்க்கிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றவரென்பதும் குறிப்பிடத்தக்கது. 'ஆசியன் ட்ரிபியூன்' என்ற இணையதளத்தின் ஐ.நா.வுக்கான நிருபராகவும் இவர் தற்போது பணியாற்றி வருகிறார்.

# ஆங்கில மொழி மூல
## ஆசிரிய மாணவர்கள் இடமாற்றம்

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆங்கில மொழி மூல பயிற்சி நெறிகளில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் பலர், மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து வசதி, தங்குமிட வசதி உட்பட தாம் எதிர் நோக்கும் அடிப்படை வசதிக் குறைபாடுகள் குறித்து சமூக சேவைகள் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு மகஜரொன்றினை சமர்ப்பித்திருந்தனர். இவர்களில் 34 மாணவிகளும் அடங்குவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொண்டு வந்ததையடுத்து, அவர்கள் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தமது பயிற்சி நெறிகளைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இம் மாணவ, மாணவிகள் பட்டிருப்பு, கல்குடா பகுதிகளைச் சேர்ந்தவர்களென்பது குறிப்பிடத்தக்கது.

# வீதிப் போக்குவரத்து
## குற்றங்களுக்கு கடும் தண்டனை!

புத்தாண்டையொட்டிய காலப்பகுதியில் சுமார் 30இற்கு மேற்பட்டோர் வீதி விபத்துக்களினால் மரணமாகியுள்ளனரென்றும், 240 பேர் காயமடைந்துள்ளனரென்றும் கொழும்பிலுள்ள வீதிப் போக்குவரத்து தலைமையகம் தெரிவித்தது. கொஸ்கொட இந்துருவவில் இரு வாரங்களுக்கு முன்னர் இடம் பெற்ற லொறியொன்றும் பஸ் ஒன்றும் மோதிக் கொண்ட விபத்தில் 23 பேர் உடல் கருகி மாண்டமை பாரிய விபத்தென்றும்



பொலிஸார் தெரிவித்தனர். கடந்த மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட இந்த விபத்துக்கள் வீதி போக்குவரத்து விதிகளைக் கடுமையாக அமுல்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்துவதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் வாகனச் சாரதிக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும்போது கடுமையான பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் வீதிப் போக்குவரத்துக் குற்றங்களுக்கு கடும் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

# முழந்தாளில் இருத்தி
## ஐவர் சுட்டுக் கொலை

செங்கலடியிலுள்ள கணபதிப்பிள்ளை நகர் என்ற இடத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் சித்திரைப் புத்தாண்டு பிறப்பதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. மூன்று வயது பையன், 15 வயதுச் சிறுமி, 60 வயது முதியவர் உட்பட ஐவரையே ஆயுததாரிகள் மிலேச்சத்தனமாக சுட்டுக் கொன்றுள்ளனர். சின்னமுத்துக்குமார் சுதர்சன் (வயது 3), செந்தமிழ்ச்செல்வி (வயது 15), வல்லிபுரம் இரட்ணசிங்கம் (வயது 60), நடராஜா ஸ்ரனிஸ்லாஸ் (வயது 27), குணசெல்வம் (வயது 22) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். வீட்டிற்கு வெளியே இவர்களை இழுத்துச் சென்ற ஆயுததாரிகள் முழந்தாளில் இருத்தி சுட்டுக் கொன்றனரென்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மூவரில் இருவர் அங்கு மரணமானார்கள். ஏனையோர் இன்னமும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தமக்கு எதிரான தமிழ் அரசியல் குழுவைச் சேர்ந்தவர்களென்பதால் புலிகளே இவர்களைச் சுட்டுக் கொன்றனர் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# முரசம்

## போர் வெற்றிகளை மக்கள் வரவேற்கமாட்டார்கள்!

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

**பிறந்திருக்கும்** சித்திரைப் புத்தாண்டு இலங்கையில் விபரீதங்களையே ஏற்படுத்தும் என்று சொல்லப்படுவது உண்மையா? பொய்யா? என்பது வேறு விடயம். நாட்டின் தற்போதைய போக்கும், நாட்டு மக்கள் மனதில் காணப்படுகின்ற அவநம்பிக்கைகளையும் புலிகளின் போர் அறைகூவல்களையும் படையினரின் தொடர் நடவடிக்கைகளையும் பார்க்கின்றபோது, தற்போதைய போக்கில் சென்று ஒரு திருப்பத்தில்தான் நாடு திரும்பப் போகிறது என்பதை ஊகிக்க முடிகிறது. கிழக்கு மாகாணத்திலிருந்து புலிகள் விரட்டியடிக்கப்பட்ட நிலையில் தொப்பிக்கல காட்டுப் பகுதியில் சிக்கியிருக்கும் புலிகளுக்குள்ளும் உள் முரண்பாடுகள் தோன்றியுள்ளதாக அறிய முடிகிறது. இதே நிலையின் தொடர்ச்சியாக வடக்கிலும் புலிகளைப் பின்னடைவு காணச் செய்யும் படை நகர்வுகள் தொடர வாய்ப்புக்கள் அதிகரித்து வருகிறது.

புலிகளுக்கான பின்னடைவு என்று நடத்தக்கூடிய தாக்குதல்களையும் அதன் விளைவுகளையும் ஓரம் கட்டிவிட முடியாது. ஏனெனில் இருதரப்பு தாக்குதல்களிலும் தாக்கப்படுபவர்களில் பெரும்பாலானோர் பொதுமக்களாகவே இருக்கின்றார்கள். கிழக்கு மாகாணத்தை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடிந்ததற்காக சுமார் 165000 மக்கள் தமது சொந்த இருப்பிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். வடக்கிலிருந்து சுமார் 55000 பேர் வெளியேறியிருக்கிறார்கள். நாடு முழுவதும் சுமார் 2 இலட்சத்து 45 ஆயிரம் பேர் அநாதரவாகியுள்ளனர். இந்த மக்களுக்கு உரிய உதவிகளையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தாத நிலையில் மேலும் மக்களை சொந்த இருப்பிடங்களிலிருந்து இடம் பெயர்த்து அவர்களை வீதியில் இறக்குவது ஏற்கக்கூடியதாக இல்லை.

எனவே இரு தரப்பும் போருக்கான தயாரிப்புக்களை கை விட்டு எஞ்சியிருக்கும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். இராணுவ நெருக்கடிகள் அதிகரித்துள்ள நிலையில், புலிகளுக்கு ஒரு பேச்சு வார்த்தை கால அவகாசம் தேவைப்படுவது கடந்த கால அனுபவம். அந்த வகையில் தற்போதைய நெருக்கடியில் பேச்சுக்கான வாய்ப்பு ஏற்பட்டால் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள அரசும் - புலிகளும் முயற்சிக்க வேண்டும். பலப்பரீட்சை நடத்தக் கூடிய நிலையில் இரு தரப்பு சமநிலையில் இல்லை என்பதை நாட்டு மக்களும், சர்வதேசமும் நன்கு அறிவார்கள். யுத்தம் செய்வதை விடவும் சமரசமடைவது மிகவும் கடினமானது என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

ஆகவே பேச்சுவார்த்தைகளுக்கான எண்ணத்தை வெறும் செய்திகளாகக் கூறி மக்களை ஏமாற்றாமல் உண்மையாக சமாதானத்துக்காகப் பாடுபடவேண்டும். போர் வெற்றிகளையோ, வீர சாகஸங்களையோ வரவேற்கும் மன நிலையில் இலங்கை மக்கள் இல்லை. போர் ஒருபோதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது என்பதை நன்கு புரிந்து கொண்டும், அதன் மீதான விருப்பத்துடன் செயற்படும் எந்தத் தரப்பையும் மக்கள் விரோதிகளாகவும், தேசத் துரோகிகளாகவுமே வரலாறு பதிவு செய்யும்.

இரத்தக்கறை படிந்த யுத்தப் பிரியர்களாக இல்லாமல், உதவும் கரங்களாக, மக்களின் நண்பர்களாக இருக்க விரும்புங்கள். ஒவ்வொரு தடவையும் ஆயுதம் தூக்கப்படும் போதும் ஒரு உயிர் இந்த மண்ணில் சுட்டுச் சரிக்கப்படுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் மக்களின் துரோகிகளா? நண்பர்களா? என்பதை உங்களையே கேளுங்கள்!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# மற்றுமொரு பேச்சுக்கு அரசும் புலிகளும் தயார்!



கடந்த வருடம் அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையிலான ஜெனீவா பேச்சுவார்த்தைக்கு முன்னர் தமிழ்ச்செல்வனும், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் கை குலக்கியக் கொண்ட போது படிக்கப்பட்ட படம்.

**மற்றுமோர்** பேச்சுவார்த்தைக்குத் தயாரென்று அரசாங்கமும் புலிகள் இயக்கமும் மீண்டும் பச்சைக்கொடி காட்டியுள்ளன. இரு தரப்புகளுமே விசுவாசமாகவும் நேர்மையுடனும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்வருகின்றனவா? இல்லையா? என்பது குறித்த பரவலான சந்தேகங்கள் மக்கள் மத்தியில் நிலவுகின்றன. பண்டைத் தமிழர்களின் பாரம்பரிய வழக்கப்படி 60 ஆண்டுகளை ஒரு காலச்சுற்றாக வகுத்து வைத்திருக்கும் நிலையில், தற்போதைய சர்வஜித் ஆண்டு 21ஆவது வருடமாகப் பிறந்துள்ளது. சகல சௌபாக்கியங்களும், சர்வசித்திகளும் இந்த ஆண்டிலாவது கிடைக்குமென்ற நம்பிக்கை பெரும்பாலான தமிழர்களின் உணர்வுகளில் இழையோடுவதைக் காணக் கூடியதாகவிருக்கிறது. இனப்பிரச்சினை, இந்த நாட்டின் அனைத்து மக்களையும் ஏதோவோர் அளவில் பாதித்தாலும், துயரங்களால் அதிகம் துடித்துக் கொண்டிருப்பவர்கள் மக்கள் என்பதை யாரும் மறுத்து விட முடியாது.சொந்த வாழ்விடங் களை விட்டு, வேரோடும் வேரடி மண்ணோடும் கிள்ளியெறி யப்பட்டு, சொந்த நாட்டிலேயே இடம்பெயர்ந்து வாழும் கிழக் கிலங்கைத் தமிழ் மக்களின் அவலங்கள் சொல்லுந்தரமன்று. வடக்கில் அப்பாவித் தமிழ் மக்களை துப்பாக்கிகள் அச்சுறுத்து கின்றன. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆட்கடத்தல்கள், மிரட்டிப் பணம் பறித்தல் போன்ற அடாவடித்தனங்களுக்கு ஆப்பு வைக்க அரசாங்கத்தினால் முடியவில்லை என்பத னையும் ஏற்றுக் கொண்டுதானாக வேண்டும்.

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் தமிழ் வர்த்தகர்களை வேட்டையாடும் ஆட்கடத்தல்கள் அளவுக்கு மீறி தொடர்ந்து செல்கின்றன. அண்மைக் காலங்களில் கிட்டத்தட்ட 90 பேர் வரை கடத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 1983ஆம் ஆண்டு இனக் குழப்பத்தின்போது சிங்கள இன வெறியர்களும் அவர்களின் தொங்கு சதைகளும் மேற்கொண்ட அதே இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பித்து விட்டனவா என்ற சந்தேகங்கள் தமிழர் தரப்புகளில் எழுந்திருப்பது நியாயமானதுதான். இலங்கை, இந்திய தமிழ் - முஸ்லிம் வர்த்தகர்களின் கோட்டை, கொத்தளமாக விளங்கும் புறக்கோட்டை, செட்டியார் தெரு, வெள்ளவத்தை, முகத்துவாரம், கொட்டாஞ்சேனை போன்ற இடங்களில் தமிழ் வர்த்தகர்கள் இலக்கு வைக்கப்படுவதால் இச் சந்தேகம் எழுகிறது. நாட்டின் நாலா பகுதிகளுக்கும் அத்தியாவசிய மற்றும் உணவுப் பொருட்களை விநியோகிக்கும் வர்த்தக மையமாக விளங்கும் புறக்கோட்டை நான்காம் குறுக்குத் தெரு இன்றும் கூட தமிழ் - முஸ்லிம் வர்த்தகர்களின் வசமேயுள்ளது. பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் தங்கச் சந்தையின் வர்த்தக மையமாகத் திகழும் கொழும்பு செட்டியார் தெருவும் முழுக்க முழுக்க தமிழர்களின் கைகளிலேயே உள்ளது.

தமிழ் - முஸ்லிம்களின் வர்த்தக மேலாதிக்கத்தை தகர்ப்பதற்கான ஒரு திட்டத்தின் நிறைவேற்றுச் செயற்பாடே இக் கடத்தல் நாடகமென்றும் கருதப்படுகின்றது.

காலம் சென்ற சாமுவேல் ஞானத்திற்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்களுக்கு கொழும்பின் சுற்றுப்புறப் பகுதியொன்றில் சில சிங்களக் காடையர்கள் அச்சுறுத்தல் விடுத்திருக்கின்றனர். இதேபோன்று அதே பகுதியில் நளீம் ஹாஜியாரின் பைரஹா கோழி இறைச்சி விற்பனைக் கடைகளுக்கும் அதே காடையர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது. இதனால்தான் வர்த்தகத் துறையில் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் சில திட்டமிட்ட சக்திகள் ஈடுபட்டிருக்கின்றனவா என்ற சந்தேகம் எழுப்பப்படுகின்றது.

இத்தகைய அனைத்து சமூக விரோத நடவடிக்கைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென்பதே அனைத்து மக்களினதும் அபிலாஷை. அது நிறைவேற வேண்டுமானால், யுத்தத்தில் ஈடுபடும் இரு தரப்புகளும் இதய பூர்வமாக சமாதான மேசைக்கு வருவதே ஒரேவழி. இதனால்தான் பேச்சுவார்த்தைக்குத் தயாரென அரசும் புலிகளும் அவ்வப்போது அறிவித்து வருவதை மக்கள் ஆவலோடு வரவேற்கிறார்கள். பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகள் விதிக்கப்படக் கூடாதென்று அரச தரப்பில் கூறப்படுகின்றது. அதே போன்று புலிகளின் தமிழ்ச்செல்வனும் அவ்வப்போது கூறி வருகிறார். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துவது பற்றியே பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென்பது தமிழ்ச்செல்வனின் வாதம். எந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி ஆயுதப் படைகள் மீது புலிகள் தாக்குதல்களைத் தொடுத்தார்களோ, அதே ஒப்பந்தத்தை அமுல்படுத்துமாறு கோருவது வேடிக்கையானது தான். படையினர் பதிலடி கொடுத்து புலிகளை தொப்பிகல காட்டுக்கு விரட்டியடித்த பின்னர் தான் தமிழ்ச்செல்வனுக்கு ஞானோதயம் பிறந்திருக்கின்றது. இதனால் தமிழ்ச்செல்வன் பல்லை இளிக்கும் தனது "ட்ரேட் மார்க்கை வெளிக்காட்டிக் கொண்டு யுத்த நிறுத்தம் பற்றிப் பேச வேண்டுமென்று தாழ்பணிந்து கேட்டிருக்கிறார். புலிகளின் வரலாற்றுப் பக்கங்களைத் திருப்பிப் பார்ப்பவர்களுக்கு தமிழ்ச்செல்வனின் இந்த சுடலை ஞானத்தை இலகுவில் புரிந்து கொள்ள முடியும். பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதும் அதிலிருந்து ஓடிவிட்டு, தாக்குதல்களைத் தொடுப்பதும் புலிகளின் பாரம்பரியம். இதனால்தான் நிபந்தனையற்ற விதத்தில் பேச்சுக்கு வரவேண்டுமென்று அரசாங்கம் நிபந்தனை விதிக்கிறது. புலிகளும் தமது பங்குக்கு நிபந்தனையற்ற பேச்சுக்கே தயாரென்று கூறி வருகின்றனர். ஆக, இரு தரப்புகளுமே நிபந்தனையற்ற பேச்சுக்கு வருமாறு கூறி, நிபந்தனை விதிப்பதைப் பார்த்து மக்கள் ஏமாளிகளாக ஒதுங்கி நிற்கிறார்கள்.

பேச்சுக்கு வருவதும் பின்னர் சண்டை பிடிப்பதும், வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியிறங்கும் கதைபோல் ஆகிவிட்டது. வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியிறங்கினாலும், சளைக்காமல் தன் பணியைச் செய்யும் விக்கிரமாதித்தன் கதையைப் போல, சர்வதேச சமூகமும் வாய் கூசாமல் இரு தரப்புகளுமே பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டுமென்று சொல்லி வருகின்றது. ஜப்பானின் விசேட சமாதானப் பிரதிநிதி யசூசி அகாசி இதற்காக விரைவில் இலங்கை வரவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் இலங்கை விவகாரத்தில் ஈடுபாடு காட்டி வருபவருமான எரிக் சொல்ஹெய்மும் இது தொடர்பாக விசேட ஆலோசனைக் கூட்டமொன்றினை நடத்தவிருப்பதாகவும் தெரிய வருகிறது. இணைத் தலைமை நாடுகளும் தமது பங்கிற்கு தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. பேச்சுவார்த்தைக்குத் தயாரென கூறிவரும் இரு தரப்புகளும் மேசைக்கு வருகின்றனவோ, இல்லையோ அதற்கான முஸ்தீபுகளில் ஈடுபட்டு வரும் சர்வதேச சமூகம் தனது முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

இன்னொரு வார்த்தையில் சொல்வதானால், ஆலகால விஷத்தை உண்ட சிவபெருமானின் நிலையில் சர்வதேச சமூகம் இருக்கின்றது. பாற்கடலைக் கடைந்த போது, வாசுகி என்ற பாம்பு கக்கிய ஆலகால விஷத்திலிருந்து அசுரர்களையும் தேவர்களையும் காப்பாற்றுவதற்காக அதனைத் தானேயுண்ட சிவனின் நிலைதான் இந்தச் சர்வதேச சமூகத்திற்கு. சிவபிரான் ஆலகால விசத்தை உண்டதும் அலறித் துடித்த உமாதேவியார், விஷம் கீழிறங்காமல் தடுப்பதற்காக சிவபிரானின் தொண்டையை அழுத்திப் பிடித்தாரென்றும் அதனாலேயே ஆலகால விஷம் தொண்டையில் தங்கி விட்டதென்றும் புராண இதிகாசங்கள் கூறுகின்றன. இலங்கையின் யுத்தத் தரப்புகள் விசிறியிருக்கும் விஷத்தை சர்வதேச சமூகம் தொண்டைக்குள் விழுங்கி வைத்துக் கொண்டு, இலங்கை மக்களைப் பாதுகாக்கும் ஆபத்பாந்தவர்களென்ற பாத்திரத்தைத் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகிறது. இது பாராட்டப்பட வேண்டியது தான். ஏனென்றால், வழிக்கு வராதவர்களோடு தொடர்ந்தும் மாரடித்துக் கொண்டிருக்க முடியாத நிலைக்கு சர்வதேச சமூகம் வந்துவிட்டிருக்கிறது. எடுத்த முயற்சிகளெல்லாம் தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் தோல்விகளைச் சந்தித்து வரும் நிலையில், இனியும் விக்கிரமாதித்தனின் பாத்திரத்தை வகிக்க சர்வதேச சமூகம் தயாரில்லையென்ற நிலைக்கு வந்திருக்கின்றது. சர்வதேச சமூகம் கொடுத்த அழுத்தத்தின் விளைவாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பொது இணக்கப்பாடொன்றினை முன்வைக்கும் இறுதிக் கட்டத்தை அரசாங்கம் எட்டியிருக்கிறது. இனப்பிரச்சினைத் தீர்வில் அக்கறை காட்டி வரும் இந்தியாவும் அரசியல் தீர்வு யோசனை முன்வைக்கப்பட வேண்டுமென்று அடித்து வலியுறுத்தி வந்ததும் இங்கு குறிப்பிடத் தக்கது.

அநேகமாக இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் பொது இணக்கப்பாட்டு யோசனையை அரசாங்கம் முன்வைத்து விடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சர்வதேச சமூகத்தின் அழுத்தத்திற்கு ஏற்ப, அரசு அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைத்த பின்னர் புலிகள் என்ன செய்யப் போகிறார்களென்பதே அடுத்த கேள்வியாகும். ஓடிக்கொண்டிருக்கும் முற்றுப்புள்ளியைப் போன்று, இழுபட்டு வந்த இனப்பிரச்சினைத் தீர்வுக்கு, ஓர் ஆரம்பப் புள்ளியாக யோசனைகள் முன்வைக்கப்படப்போகின்றன.

அனைத்துச் சிறுபான்மைச் சமூகங்களினதும் அபிலாஷைகளை உள்ளடக்கியே இந்த யோசனைகள் முன்வைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. ஜெனீவாவில் அரசாங்கத்திடம் அரசியல் தீர்வைக் கோரிய புலிகள் - ஏ-9 பாதையை திறக்க வலியுறுத்திய புலிகள் இனி என்ன செய்யப்போகிறார்கள்? பிரச்சினை நிலவும் எந்த நாட்டிலும், எந்த அரசாங்கத்தினாலும் நூற்றுக்கு நூறு சதவீதமான தீர்வு யோசனைகளை ஒரேயடியாக முன்வைத்துவிட முடியாது. எனவே புலிகள் இதனை ஒரு ஆரம்பப் புள்ளியாகப் பாவித்து பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டும். தமிழீழம்தான் புலிகளின் இலக்கென்றால், அது சாத்தியப்படக் கூடிய நிலை இன்றில்லை. 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முன்னர் தமிழீழம் கோரி ஆயுதமேந்திப் போராடிய அனைத்துத் தமிழ்க் குழுக்களின் சப்தநாடிகளையும் புலிகளின் துப்பாக்கிகள் அடக்கிவிட்டன. மாற்றுக் கருத்துக் கொண்ட அத்தனை தமிழ்க் குழுக்களும் பிரிந்து செல்லும் வெளிவாரி சுயாட்சியை இன்று கோரவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு நீதியான, கௌரவமான தீர்வுடன் கூடிய உள்ளகச் சுயாட்சியையே கோரி நிற்கின்றன.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

இந்த நிலையில் புலிகள் வழிக்கு வராவிட்டால், சர்வதேச சமூகத்தினதும் இலங்கை அரசினதும் பார்வை மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட தமிழ் அமைப்புகளின் பக்கத்தை நோக்கித் திரும்புவது தவிர்க்க முடியாததாகி விடும்.

உடல், உள ஊனமுற்றோரின் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா.சமவாயத்தில் கைச்சாத்திட நியூயோர்க் சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேசிய ஜப்பானின் விசேட சமாதானப் பிரதிநிதி யசூசி அகாசி, இது தொடர்பாக கலந்துரையாடியிருக்கிறார். அரசாங்கம் பொது இணக்கப்பாட்டுத் தீர்வு யோசனைகளை முன்வைக்கவிருக்கும் இவ்வேளையில், மாற்றுத் தமிழ்க் குழுக்கள் தமது பொது இணக்கப்பாட்டுத் தீர்வு யோசனைகளை முன்வைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். புலிகள் தொடர்ந்தும் தடம் புரண்டு கொண்டிருப்பார்களேயானால், அது சர்வதேச சமூகத்தின் பார்வையை மாற்று வழிக்குத் திருப்பி விடும் புலிகளின் பாதையில் மிகச் சமீபமாக சிவப்புக்கொடி காட்டப்படுவதை இனியாவது ஓர் எச்சரிக்கையாக புலிகள் எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல், யுத்தத்தால் அவதியுறும் தமிழ் மக்கள், துரோகிகளென்று அவர்கள் மீது காறி எச்சில் உமிழப்போவது மட்டும் சர்வ நிச்சயம்.

## ஊரிலிருந்து....




சமாதான ஒப்பந்தம் எண்ட பேரில ஊருக்குள்ள நுழைஞ்சவை செய்த அரசியல் பணி இப்ப சர்வதேச மட்டத்தில புகழடைஞ்சிருக்குது.
புலிகளிண்ட யாழ் அரசியல் பொறுப்பாளர் எண்ட பேரில் ஒரு லட்சம் முஸ்லிம் சனத்தை உடுத்த உடுப்போடை அடிச்சுவிரட்டி சொத்துக்களை கொள்ளையடிச்ச இளம்பரிதியிண்ட பேரும் பிரான்ஸ் பொலிஸில பாரதூரமான குற்றவாளிகளிண்ட பேரில சேர்க்கப்பட்டிருக்குது.
காரணம் என்ன தெரியுமோ? பிரஞ்சு பாஸ்போட்டோடை சமாதான காலத்தில யாழிற்கு போனவையளிட்ட பொற்பதியில வைச்சு பாஸ்போட்டை பறிச்சு வைச்சுக்கொண்டு காசு பறிச்ச விஷயம்தானாம்.
எப்படி இருக்குது அரசியல் பணி?

# வன்னியில் விழுந்த வெடிகுண்டுகளின் எதிரொலி தென்னிலங்கையில் கேட்கும்?

**புலிகளால்** மார்ச் 26ஆம் திகதி கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதலுக்குப் பிறகு, தாக்குதல் குறித்த எதிர்பார்ப்புக்கள் தென் இலங்கையில் முன்னர் எப்போதையும் விட அதிகரித்தது. இதற்குக் காரணம், விமானத் தாக்குதல் நடத்தியதாகக் கூறிய புலிகள் தமது பகுதிகள் மீது இலங்கை விமானப்படையினர் தாக்குதல் நடத்தினால் தாமும் பதில் தாக்குதல்களை நடத்தப் போவதாகத் தெரிவித்திருந்தனர். புலிகள் இவ்வாறு அறிவித்து விமானப் படையணி என்றும், விமானத்தின் புகைப்படம் என்றும் முழுமையாக இல்லாத புகைப்படங்கள் சிலவற்றையும் வெளிப்படுத்திய பின்னர், அதாவது மார்ச் 26ஆம் திகதி 12.45க்கும் 1.00 மணிக்குமிடையில் சுமார் ஐந்து நிமிடங்களில் இரண்டு குண்டுத்தாக்குதல்களைப் புலிகள் நடத்தியதன் பின்னர் அதே நள்ளிரவு 2.00 மணிக்கு வன்னியில் புலிகளின் நிலைகள் மீது இலங்கையின் விமானப்படையினர் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். அன்று தொடங்கி இக் கட்டுரை எழுதப்படுகின்ற நாள் வரை தொடர்ச்சியாக விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இத் தாக்குதல்களின் போது புலிகளின் முகாம்கள், கடற்படைக் களம் முகாம், எண்ணெய் சேகரிப்பு நிலையம் என்பன தாக்கி அழிக்கப்பட்டதாக பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்து வருகிறது. இது குறித்துப் புலிகள் எதுவும் கூறவும் இல்லை. அவர்கள் சொன்னது போல் பதில் விமானத் தாக்குதல் எதையும் நடத்தவும் இல்லை.

ஏன் புலிகள் தங்களிடம் விமானப்பலம் இருப்பதை மீண்டும் நிரூபிக்கவில்லை. உண்மையில் புலிகளிடம் இருப்பதாகக் கூறப்படும் இலகு விமானங்கள் குண்டுகளுடன் பயணிக்குமா என்ற சந்தேகங்கள் மீண்டும் எழத் தொடங்கியுள்ளன. மார்ச் 26ஆம் திகதி கட்டுநாயக்கா விமானத் தளம் மீது புலிகள் நடத்திய தாக்குதல் மோட்டார் ரகத் தாக்குதல் என்று கண்டறியப்பட்டுள்ளது. அப்படியாயின் அந்தத் தாக்குதல் கடல் மார்க்கமாக ஊடுருவிய புலிகள், விமானத்தளத்துக்கு கடல் பக்கமாக அமைந்துள்ள களப்புப் பகுதியில் வைத்து புலிகளால் நடத்தப்பட்டிருக்கலாமா அல்லது படகிலேயே பொருத்தப்பட்டு மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாமா என்ற கேள்விகளைத் தோற்றுவித்துள்ளன. இந்தக் கேள்விகளை மறுதலிக்கும் விடயங்களாக இருப்பவை புலிகள் உடனடியாக வெளியிட்ட விமானப் புகைப்படங்கள்.



இந்த முரண்பாடுகளுக்கிடையில் புலிகளின் இன்னொரு தாக்குதல் எதிர்பார்ப்புக்களைத் தோற்றுவித்துள்ளது. புலிகளிடம் விமானப்பலம் குறிப்பிடும்படியாக இல்லை. ஒரு வகையில் அது பூச்சாண்டிதான். ஆனால் புலிகள் விமானப்படைப் பலத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பான எல்லா முறைகளிலும் முயற்சிக்கின்றார்கள் என்பதை இந்தியாவின் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. மறு பக்கத்தில் புலிகளிடம் விமானம் இருந்தால் அது ஆபத்து என்று சொல்லும் அமெரிக்கா போன்ற நாடுகள் இது பிராந்தியம், இறைமை என்று கூறும் இந்தியாவுக்குச் சவாலானதும், அவமானமானதும் என்பதில் மகிழ்ச்சி கொண்டிருப்பதை உணர முடிகிறது. இதே நிலைதான் இலங்கை அரசின் நெருங்கிய நட்பு நாடுகளாகவுள்ள சீனா, பாகிஸ்தானுக்கும் என்று கூறப்படுகின்றது. இவ்வாறு சர்வதேச ரீதியாக புலிகள் ஏற்படுத்தியிருக்கும் எண்ண அலைகள் எத்தகைய விளைவுகளைத் தரப் போகின்றது என்பதை இந்தியா தென் பிராந்தியத்தில் முடுக்கி விட்டிருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளும், அமெரிக்காவின் புலனாய்வு ஊடுருவல்களும், சீனா பாகிஸ்தானின் கவலையும் அமைந்துள்ளது. இதன் கால ஓட்டம் புலிகளுக்கு நிச்சயம் பொறியாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்த நிலையில் புலிகள் தமது பக்கம் பார்வையைத் திசை திருப்ப இன்னொரு தாக்கத்தைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அத்தகைய எதிர் தாக்கமானது பெரும்பாலும் தென் இலங்கையிலேயே நடத்தப்படுவதற்கான முன் தயாரிப்புக்களைச் செய்திருப்பதாக புலிகளின் தகவல் பரிமாற்றங்களினூடாக வெளிப்படுகின்றன. ஆனாலும் புலிகள் தாமதிப்பது ஏன் என்பதற்குப் பிரதான காரணமாக இருப்பது, தற்போது நாட்டில் நடைபெறும் கிரமமான மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசை சர்வதேச அமைப்புக்கள் ஒரே குரலில் கண்டித்து வருவதாகும். இது இலங்கை அரசின் மீதான குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்த வேண்டிய நேரம்.

அதுமட்டுமல்லாமல், களத்தில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் அதிகரிக்கும்போது அதை இலாவகமாக பயன்படுத்தி அதற்கு வலுச்சேர்க்க வேண்டும். அப்படியான சூழலில் என்னதான் தாக்குதலுக்குரிய வாய்ப்புக்கள் இருந்தபோதும் தந்திரமாகப் பின்வாங்கி பொறுமைகாத்து எதிரியை தலை குனிய வைக்க வேண்டும் என்ற போரியல் தந்திரோபாயங்கள் காரணமாகவும் புலிகள் இதைப் பார்க்கின்றனர். இந்த நேரத்தில் தாம் தாக்குதல்களை நடத்தி அதில் உயிரிழப்புக்கள் ஏற்படுமாக இருந்தால், இலங்கை அரசு தன் மீதான குற்றச்சாட்டுக்களை நியாயப்படுத்தவும் தனது செயற்பாடுகளை பயங்கரவாதத்திற்கு எதிரானதாகக் காட்டிக் கொள்ளவும் முற்படும். அப்போது குற்றம் சாட்டிக் கொண்டிருக்கும் மனித உரிமைகள் தொடர்பான அமைப்புக்கள் புலிகள் மீது பாய்ந்துவிடும். எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் அமைதி காப்பதே சரியானது என்று புலிகள் கருதுகின்றனர். தாக்குதல் நடத்தக் கூடாது, உயிரிழப்புக்கள் இடம் பெறக்கூடாது என்பது புலிகளின் விருப்பம் அல்ல என்று புலிகளின் போரியல், தந்திரோபாயங்களைத் தொடர்ந்து அவதானித்து வரும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

புலிகளின் இன்னொரு தாக்குதல் எதிர்பார்ப்புக்களைத் தோற்றுவித்துள்ளது. புலிகளிடம் விமானப்பலம் குறிப்பிடும்படியாக இல்லை. ஒரு வகையில் அது பூசாண்டிதான். ஆனால் புலிகள் விமானப்படைப் பலத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பான எல்லா முறைகளிலும் முயற்சிக்கின்றார்கள் என்பதை இந்தியாவின் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. மறு பக்கத்தில் புலிகளிடம் விமானம் இருந்தால் அது ஆபத்து என்று சொல்லும் அமெரிக்கா போன்ற நாடுகள் இது பிராந்தியம், இறைமை என்று கூறும் இந்தியாவுக்குச் சவாலானதும், அவமானமானதும் என்பதில் மகிழ்ச்சி கொண்டிருப்பதை உணர முடிகிறது. இதே நிலைதான் இலங்கை அரசின் நெருங்கிய நட்பு நாடுகளாகவுள்ள சீனா, பாகிஸ்தானுக்கும் என்று கூறப்படுகின்றது. இவ்வாறு சர்வதேச ரீதியாக புலிகள் ஏற்படுத்தியிருக்கும் எண்ண அலைகள் எத்தகைய விளைவுகளைத் தரப் போகின்றது என்பதை இந்தியா தென் பிராந்தியத்தில் முடுக்கி விட்டிருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளும், அமெரிக்காவின் புலனாய்வு ஊடுருவல்களும், சீனா பாகிஸ்தானின் கவலையும் அமைந்துள்ளது. இதன் கால ஓட்டம் புலிகளுக்கு நிச்சயம் பொறியாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

தென் இலங்கையில் புலிகள் நடத்தத் திட்டமிட்டுள்ள தாக்குதல்கள் இரண்டு வகையாகத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்கொலைதாரிகளைப் பயன்படுத்தி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும், முக்கியஸ்தர்களையும் தாக்குவது, மறு பக்கத்தில் பொது மக்களின் போக்குவரத்து போன்ற பொது இடங்களைத் தாக்குவதுமாகும். இத் தாக்குதல்கள் இலங்கை அரசின் படை பலத்தை இலக்கு வைப்பதாக இருப்பதை விடவும் பொருளாதாரத்தையும் மக்களின் எதிர்ப்பையும் ஏற்படுத்துவதாகவே திட்டமிடப்பட்டுள்ளது.

தென் இலங்கையில் ஸ்திரமற்ற அரசியல் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். புலிகளின் இந்தத் திட்டத்தில் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானாலும் அது இல்லாமல் வேறு எவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் தொடரும். இதைப் புரிந்து கொள்ளாமல் மக்கள் குழப்பமடைந்து தமது அரசியல் தலைமைகளை மாற்றிக் கொண்டிருக்க வேண்டும். அத்தகையதொரு நிலையைத் தோற்றுவிப்பதற்காகவே தாக்குதல் இலக்குகளாகப் பொது மக்கள் இருக்கின்றனர். இதற்காகக்


அலசுவது

**- மதியூகி -**

கூறப்படப்போகின்ற ஒரு நியாயமானது தமிழ் மக்கள் இந்த யுத்தத்தில் அனுபவிக்கும் வேதனை, துன்பம் என்பவற்றின் வலியை தென் இலங்கை சிங்கள மக்களும் அனுபவிக்கட்டும் என்பது மட்டும்தான்.

இதில் துரதிர்ஷ்டம் புலிகளின் இந்த நிலைப்பாட்டை வரவேற்கவும், தட்டிக் கொடுக்கவும் சொகுசு வாழ்க்கையில் திளைத்துக் கொண்டு புளிச்சல் கதை பேசும் சில அரசியல்வாதிகளும், ஊடகவியலாளர்களும் இருப்பதுதான். இத்தகையவர்கள் புலிகளை விட ஆபத்தானவர்கள்.

# அதிரடி அய்யாத்துரை



**முன்னம்** அடிக்கடி நாட்டுக்கு வந்து போன அகாசி ஐயா மீண்டும் நாட்டுக்கு வரப் போறார் எண்டதைக் கேள்விப்பட்டு, வருகையின்ர நோக்கம் என்னவாம் எண்டு கேட்டனுங்கோ. முன்னம் அவர் வரேக்க சமாதானத் தூதுவர் எண்ட அடைமொழி வைச்சுச் சொன்னவை, இப்ப அவர் வரப்போறார் எண்டதை சுருதி குறைச்சுத்தான் சொல்லினம். உதுக்குக் காரணம் பேச்சு வார்த்தை இல்லை. யார் பலமானவை எண்டதை நிருபிச்சுத் தங்கட பலம்தான் கௌரவம் எண்டு ரெண்டு தரப்பும் சண்டை பிடிச்சுக் கொண்டிருக்கேக்க, உவர் வந்து ஒண்டும் ஆகப்போவதில்லை எண்டதாலைதான் சிலர் சுருதி குறைச்சிட்டினமாம்.

ஆனால் பாருங்கோ, அகாசி ஐயா இந்த முறை வந்து போகேக்க முன்னரைப் போலல்லாமல் ரெண்டெழுத்தாருக்கு ஒரு மெசேஜையும் வெளிப்படுத்தும் விதமாக சில நிகழ்ச்சி நிரல்களை செய்வாராம். உதை ஏன் சொல்லுறன் எண்டால், வன்னிக்கு அடிக்கடி போய் களைச்சுப் போய் கொஞ்சநாளாக ஓய்வில இருந்த அவர் முக்கியமானவர்களைச் சந்திக்கும் போது, ரெண்டெழுத்தாரைப் பற்றி சொல்லேக்க பயங்கரவாதத்தை வழிக்குக் கொண்டு வரலாமெண்டு படாதபாடு பட்ட நாங்கள், ஆனால் பயங்கரவாதம் தன்ர குருதி வடியிற கோரப் பற்களை காட்டிப் போட்டுது எண்டதை நல்லாப் புரிஞ்சு கொண்டோம். அதாலை இனிமேல் எங்கட மூவ்மெண்டில வித்தியாசம் இருக்கும். அதிலை ரெண்டெழுத்தாருக்கு நிச்சயம் ஒரு மெசேஜ் இருக்கும் எண்டும் சொன்னாராம்.

உதைச் சொல்லேக்க இன்னொரு ஞாபகமும் வருகுது. கிட்டடியில உவர் 'நோர்வேத் தம்பி எரிக் வரப்போறார் எண்டும் ஒரு கதை வெளியாகினது. அவர் தன்ர பயணத்தை ரத்துச் செய்து போட்டாராம். ஏன் எண்டால் அவருக்கு முன்னரைப் போல் முக்கியத்துவம் ஒண்டும் இனிமேல் இலங்கையில கிடைக்காதாம். அழையா விருந்தாளியாக வேணுமெண்டால் வந்து போகட்டும் எண்டு சொல்லிப்போட்டினமாம். பாத்தியளோ, பக்க வாத்தியம் வாசிச்சதாலை வந்த வினையை. ஒரு காலத்திலை பாக்கு வெத்திலை வச்சு அழைச்ச காலம் போய், போயா வெளியாலை எண்டு அனுப்புற காலமாக் கிடக்குதுங்கோ...வ்....

**தலை** நகரில ஆட்கள் காணாமல் போறதையும், கொலை செய்யப்படுகிறதையும் எதிர்த்துக் குரல் குடுத்துக் கொண்டிருக்கிறம் எண்டு சொல்லிக் கொண்டு திரிஞ்சவைக்குள்ளேயே, பிச்சல் பிடுங்கல்கள் இருக்குது எண்டதை அடிக்கடி ஆளுக்கு ஆள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கினமுங்கோ. தொலைக் காட்சியிலை தங்களுக்கு கதைக்க நேரம் கிடைச்சிருக்குது எண்டதுக்காக கண்டதையும் கதைக்கினம். கணேசனார் பொம்பிளை பிடிச்சார் எண்டும் அதிகாரத்தரப்பைத் தாஜா பண்ணிக் கொண்டு மண்ணெண்ணையார் பிஸினஸ் பண்ணுறார் எண்டும் கதைக்கத்தான் தொலைக்காட்சியில தூளம் அமைச்சுக் கொடுக்கினம். வேணாமுங்கோ, பல்லைக் குத்தி மணந்தால் மணக்கத்தான் செய்யும். அதையே ஒரு நிகழ்ச்சியாகவும், அதுக்கு ஒரு தயாரிப்பாளராகவும், தமிழ் மக்களின்ர வரலாறு தெரியாத வெட்டிப்பயலுமாக போகுதுங்கோ அந்த நிகழ்ச்சி. ஒரு காலத்திலை மின்னினது உண்மைதானுங்கோ. இப்ப எப்புடிப் போகுது தெரியுமோ. தலை நகரில தனக்கும் தன்ர வீட்டுக்காரிக்கும் ஸ்டார் ஹொட்டலிலை டினர் தாறவைக்கு கிழமையில ஒரு தடவை தொலைக்காட்சியிலை முகம் காட்ட வாய்ப்புத்தார நிகழ்சியாயிட்டுதுங்கோ.

அவர் யாரையும் கூட்டிக் கொண்டு டினர் போகட்டும். வார்த்தையிலயாவது ஒரு சமூக அக்கறை வேண்டாமோ எண்டு சிலபேர் கேக்கினம். என்னங்கோ செய்யிறது, "பானையில இருக்கிறது தானே அகப்பையில வரும்" எண்டுவினமெல்லோ. அதுபோலை அவர் ருசி பார்த்ததற்கு ஏற்றமாதிரியும், அவரிட்ட இருக்கிற சரக்குக்கு ஏற்ற மாதிரியும் தானேங்கோ வார்த்தையும், வாதமும் வெளிப்படும் எண்டு நினைச்சுக் கொண்டு போக வேண்டியதுதான் எண்டு நான் சொல்ல இல்லையுங்கோ. "இதே வேளை" சனம் சொல்லினமுங்கோ...

**இந்த** வருஷம் புத்தாண்டுக் கொண்டாட்டங்களின் போது காயப்பட்டவையளின் விகிதம் குறைவு எண்டு சொல்லினம். அது சந்தோசம்தான். அதுக்குப் பின்னாலை இருக்கிற கதைதான் நகைச்சுவையானதுங்கோ. மதுவைத் தடை செய்ததாலையும் அனர்த்தம் குறைஞ்சிருக்கும் எண்டினம். ஏன் எண்டால் குடியைக் கோட் வேட்டில "குரங்கு" எண்டினம். குரங்கை அடிச்சுப் போட்டு நல்லது கெட்டது தெரியாமல் செய்யிறதாலைதான் அதிகமான அனர்த்தங்கள் நடக்குது. இந்த வருஷம் குரங்குக்குத் தடையெண்டவுடன் அண்ட கிரவுண்ட் குரங்கு வியாபாரிகள் எல்லாம் போத்தல்களை விட்டுப்போட்டு சொப்பிங் பைகளில அளவெடுத்து விற்று வெற்றி கண்டிருக்கினம். வீட்டுக்குப் போறவை ஏதோ சாப்பாட்டுப் பார்சல் கொண்டு போரார் எண்டு நினைச்சால் பார்சலில பையில கட்டின குரங்குங்கோ. சில பேரின்ர இடுப்பிலையும் குரங்கு ஒழிஞ்சு கொண்டு வீட்டுக்குப் போயிருக்குது. அதிலையும் சுமார் 250 பேர் குரங்கும் கையுமாகப் பிடிபட்டிருக்கினம் எண்டு காவல்துறை சொல்லியிருக்கு.

குரங்கடிக்கிற சிலபேர் என்ன சொல்லினம் தெரியுமோ. குரங்கடிக்காமல் என்னங்கோ கொண்டாட்டம் இருக்கப்போவுது. கிடைச்ச லீவிலை குரங்கடிச்சுப் போட்டு நாலு ரவுடித்தனம் பண்ணினாத்தானே நாலு பேர் மதிப்பான் எண்டினம். எதுங்கோ சரி. குரங்கடிச்சு குழப்படி பண்ணுறதோ, குடும்பத்தோடை குதூகலமாக இருக்கிறதோ. எனக்கென்ன தெரியுதெண்டால் நாட்டு நிலை போகிற மோசத்தில் அநேகம் பேர் கொண்டாட்டங்களைத் தொடாமலே தூர விலகிப் போட்டினம். எப்பவும் போலை அமைதியாக இருந்தாலே போதுமடா சாமி எண்டு இருந்திருப்பினம் எண்டதாலைதான் வீதி அனர்த்தம், வெடி அனர்த்தம் எல்லாம் குறைஞ்சிருக்குது. சரியோ, பிழையோ.

**அண்டைநாட்டுக்காரர்** ரெண்டெழுத்தாரின்ர வெளிநாடுகளுடான தொடர்புகளைத் துப்புத் துலக்கி வருகினமாம். அதுகளுடாக கிடைக்கிற தகவல்களைக் கண்டு அதிர்ச்சியும் அடையினமாம். ஒரு அமைப்பு பயங்கரவாதமாக உருவாவதற்கு என்னென்ன வசதிகள் வேணும், அந்த வசதிகளை அந்த அமைப்பு எப்படியெல்லாம் ஏற்படுத்திக் கொள்கிறது, அந்த இலக்கை அடைவதற்காக எதையெல்லாம் செய்கிறது எண்டதை எல்லாம் தெரிஞ்சு கொள்ளும் போது புதுமையாகவும், ஆச்சரியமாகவும் இருக்குது எண்டு துப்புத்துலக்கிறதில ஈடுபடுகிற அதிகாரிகள் சொல்லினமாம். சின்ன நாட்டில இருக்கிற ரெண்டெழுத்தாரே உப்புடி நெட்வேர்க்கில இயங்கின மெண்டால் பெரிய நாடுகளில இருந்து கொண்டு பெரிய அளவில இயங்குற மற்ற பயங்கரவாதிகள் எப்புடி இயங்குவினம் எண்டு யோசிக்கவே அதிர்ச்சியாக இருக்குதாம் எண்டதாலை ரெண்டெழுத்தார் தொடர்பாக இன்னும் முடியுமான வரைக்கும் துப்புத் துலக்கி அதுகளை எப்புடி "லொக்" பண்ணலாம் எண்டு பார்க்கினமாம். இதுவரைக்கும் பதினெட்டுக்கும் அதிகமான நாடுகளில துப்புத் துலக்கியிருக்கினமாம்.

இதுக்கெல்லாம் காரணம் ரெண்டெழுத்தார் தங்களிட்ட விமானம் இருக்குது எண்டு சொன்னதும், அதுவும் அண்டை நாட்டுக்கு தங்களாலை ஆபத்து இல்லை எண்டும் சொன்னதுதானாம். இவை எடுப்பில சொல்லிப் போட்டினம். இவையை நம்பி அசண்டையீனமாக இருக்க அண்டை நாடென்ன முல்லைத்தீவே எண்டு வாத்தியார் கேக்கிறாருங்கோ. ரெண்டெழுத்தார் சொல்லுறதுக்கும் செய்யிறதுக்கும், ரொம்பத் தூரம் எண்டதை அண்டை நாடு நல்லாத் தெரிஞ்சு இருக்குதெண்டதை ரெண்டெழுத்தார் தெரிஞ்சு கொள்ளவேணும் எண்டு வாத்தியார் சொல்லுறாருங்கோ.

# மரத்தோடு மரம் பேசுகின்றது!

**கண்ணும்** கண்ணும் பேசுவது பெண்ணால் என்று பாடுவார்கள். தமிழ் வசப்பட்டால் காதுகளில் தேன் பாயும். அறிவியலில் நாக்கினால் பார்க்கலாம். நாக்கு இல்லாமலே உண்ணலாம். பேசலாம். மனிதர்களும் சரி, விலங்குகளும் சரி, தங்களுக்குள் பல்வேறு சமிக்ஞைகளால் கருத்துப் பரிமாறிக் கொள்கின்றன. ஆனால் இன்று மரங்களும் தங்களுக்குள் பேசிக் கொள்வது தான் அல்ல; கணனிக் குறியீடுகளும் அல்லவே அல்ல. சின்னச் சின்ன வேதிம மூலக்கூறுகள். ஆவியாகும் கரிம மூலக்கூறுகள். ஆங்கிலத்தில் வி.ஓ.சி.என்கிறார்கள். ஆனால் விடுதலைப் போராட்டச் செம்மல் வ.உ. சிதம்பரனார் அல்ல. தமிழில் ஆ.க.கூ என்று சுருக்கமாக மொழிபெயர்க்கலாம். ஆகாத கட்சிக் கூட்டணி அல்ல. ஆவியாகும் கரிமக் கூட்டுப் பொருள்கள்.

**புலன் அறிவாக உணரப்பட்டு அந்த உணர்வால் ஏதேனும் ஒரு தகவல் புரிந்து கொள்ளப்பட்டால் அதுதானே தகவல் சமிக்ஞை. அப்புறம் மரங்களும் தங்களுக்குள் சமிக்ஞைகள் பரிமாறிக் கொள்வதில் என்ன சந்தேகம்? ஆனால் இந்த சமிக்ஞைகள் எழுத்துகள் அல்லரூ சொற்களும் அல்லரூ கணனிக் குறியீடுகளும் அல்லவே அல்ல. சின்னச் சின்ன வேதிம மூலக்கூறுகள்.**



புதிய கண்டுபிடிப்பு.


புலன் அறிவாக உணரப்பட்டு அந்த உணர்வால் ஏதேனும் ஒரு தகவல் புரிந்து கொள்ளப்பட்டால் 'அதுதானே தகவல் சமிக்ஞை. அப்புறம் மரங்களும் தங்களுக்குள் சமிக்ஞைகள் பரிமாறிக் கொள்வதில் என்ன சந்தேகம்? ஆனால் இந்த சமிக்ஞைகள் எழுத்துகள் அல்ல; சொற்களும்

அரசமா தேவியின் கூந்தலுக்கு மணம் உண்டா இல்லையா என்று தேசிய அளவில் மணப்பொருள் ஆராய்ச்சி மேற்கொண்டார் பண்டைய வேந்தர் ஒருவர்.

உண்மையில் இன்று தாவரம் சார்ந்து மணம் பரப்பக்கூடிய கிட்டத்தட்ட 7000 ஆ.க. கூட்டுப்பொருள்கள் உண்டு. தக்காளியில் மட்டும் 400 மணப்பொருள்கள். அவற்றில் அடர்த்தியான வாசனைக்குக் காரணம் மீத்தைச் ஹெப்டினோன் என்னும் ஒருவகை காரோடீனாய்டு. இது ஏ-விட்டமினின் தாய். ஆயிரம் லிட்டர் தொட்டியில் ஒரு கடுகளவு போட்டாலே வாசம் மூக்கைத் துளைக்கும்.

தேநீர் அல்லது புகையிலை வாசத்துக்கு காரணம் விளம்பரக் கம்பெனி அல்ல. அதில் இயற்கையாகக் கலந்து உள்ள டைக்ளோரோ அக்டினிடையோலைட் என்கிற வாயில் நுழையாத வேதிப்பொருள். மஞ்சள் வாசம் அதில் அடங்கிய குக்குமின் உபயம். வெள்ளைப் பூண்டில் அல்லிசின். இப்படி ஒவ்வொரு வாசனைக்கும் அர்த்தம் உண்டு.

பொதுவாக, தாவரப் பொருள்கள் மக்கிப் போகும். பழம்,' இலை போன்ற எதுவானாலும் அழுகி நாறும். காரணம் அதில் இருந்து வெளிப்படும் துர்கந்த வேதிமங்கள். அவற்றை உண்ட தாவரப் பட்சிணிகள் பொதுவாக நோயூக்கி கிருமிகளைப் பரப்புகின்றன. தம்மை உண்ண வரும் விலங்குகளைக் காட்டிலும் அவை பரப்பும் நோயூக்கிகளைத் தாவரங்கள் முழுவதும் உணர முற்படுகின்றனவாம். தழை தின்ன வருவதை முன்கூட்டியே அறிந்து சில செடிகள் அண்டைப் புதருக்குச் சிக்னல் கொடுத்துவிடுமாமே! இருந்தாலும், தாவரங்களைப் பாதுகாக்கும் .: பீனாலிக்ஸ் (பினாயில் வகை), காரமங்கள், டெர்ப்பீன்கள் (ஒருவகை கொழுப்பு) போன்ற



பொருள்கள் தாவரப் பட்சிணிகளுக்குத் தெரியும்.

எப்படியோ, ஆண்டுதோறும் வளிமண்டலத்தின் கரியமில வாயுவில் அடங்கியுள்ள கரி அணுக்களில் 36 சதவீதம் பெரும்பாலும் ஆவியாகக் கூடிய சிறு மூலக்கூறுகளாக மீண்டும் காற்றில் வந்து கலந்து விடுகின்றன. இருந்தாலும் சூரிய வெளிச்சத்தையும் ஏனைய நுண்சத்துத் தனிமங்களையும் போட்டி போட்டுக் கொண்டு உறிஞ்சுவதில் தாவரங்கள் சுயநலவாதிகள் தாம்.

சூரியனைப் பார்த்து சில பூக்கள் முகம் திருப்புகின்றன. காரணம் ஒளிச் சேர்க்கைக்கு சூரிய ஒளி அவசியம். அதாவது தாவரங்கள் காற்றில் கலந்து உள்ள அசுத்தமான கரியமில வாயுவை உறிஞ்சி நிலத்தில் இருந்து தண்ணீரையும் உட்கொண்டு சூரிய வெளிச்சத்தில் உணவு தயாரிக்கின்றன. இதற்குப் பச்சையம் என்கிற குளோரோ.'.பில் ஒத்துழைக்கிறது. தாவரங்களின் பச்சையம் என்பது விலங்குகளில் ரத்தத்தில் சிகப்பு அணுக்கள் மாதிரி. ரத்தத்தில் இரும்பு அணு நடுநாயகம். பச்சையத்தில் மக்னீசியம். நிழலில் வளரும் செடிகள் இருண்ட பச்சை நிறமாய்த் தோன்றும். காரணம் அதில் கூடுதல் பச்சையம் சூரிய ஒளியை ஏற்பதற்கு வசதியாகச் செறிவாக உள்ளது. ஆக, சூரிய ஒளி நிறமற்ற தண்ணீர், அசுத்தமான கரியமில வாயு, பச்சை நிற குளோரோ.'.பில் ஆகிய நான்கு பொருள்களின் கூட்டணியில் கார்போஹைடிரேட்டு எனும் மாவுப் பொருள் தயார். அதுதான் உங்கள் உலையில் ரூபாய்க்கு அரைக்கிலோ அல்லது இலவசமான அரிசியாக வெந்து கொண்டிருக்கும்.

உணவு மட்டுமா? மனிதனுக்கு மூச்சுக் காற்று இலவசமாக வழங்குவதும் மரங்கள் தாம். கார்போஹைடிரேட்டு தயாரிப்பின்போது ஒக்சிஜன் வெளியிடப்படுகிறது. ஆனாலும் காற்றி 10 சதவீத ஒக்சிஜனை மட்டுமே நிலத் தாவரங்கள் விநியோகிக்கின்றன. எஞ்சிய ஒக்சிஜன் கடற்பாசிகளின் பங்களிப்பு. அதனால் வனம் வளர்க்கிறோமோ இல்லையோ கடல் காக்க வேண்டும்.

விலங்குகளும் மனிதர்களும்தான் இந்தப் பச்சையத் தாவரங்களை உண்கின்றன என்றால் சில தாவரங்களோ விலங்குகளைத் தின்னும் மாமிசப் பட்சிணிகள் ஆகவும் விளங்குகின்றன. தாவர இயலில் தமிழ்ப்பெயர்கள் என்னவோ, ஆனால் பனித்துளிகள், கூஜாச் செடிகள், குடுக்கை, ஈசல் பொறி போன்ற தாவரங்களுக்கு உணவுத் தயாரிப்பில் சூரிய ஒளி, கரியமில வாயு, தண்ணீர் மட்டும் போதாது. கொஞ்சம் மாமிசமும் வேண்டும். செடிகளில் அசைவம். அதனால் ஜாடி போன்ற பூக்களுக்கு தும்பிகளையும், வண்டுகளையும் சிறைப்பிடித்து உண்ணும்.

தொட்டால்வாடி இலைகளோ இதற்கு நேர் எதிர். யார் கை தன்மீது பட்டதுமே முகத்தைத்

**பார்லி உற்பத்தியிலும் இனம்புரியாத ஆ.க.கூட்டுப்பொருள் ஒன்று வேர்களிலும் மொட்டுகளிலும் உணவு அளவு மாறுபடச் செய்கிறதாம். சுற்றுச்சூழல் சார்ந்து ஒவ்வொரு தாவரமும் பக்கத்துச் செடிகொடிகளின் சமிக்ஞைகளை எதிர்பார்த்தே வாழ்கின்றன என்பது மாக்ஸ் பிளாங்க் வேதிமச் சூழலியல் நிறுவனத்தின் மூலக்கூறு சூழலியல் துறை ஆய்வு முடிவு.**

தொங்கப்போட்டுக் கொள்கின்றன. அந்தச் செடியின் இலை நரம்பு நடுமுண்டுகளில் கட்டி நிற்கும் தண்ணீர் வடிந்துவிடுவதால் இலை விறைப்பு இழந்து தலை தாழ்த்துகிறது. ஆனால் கொஞ்ச நேரத்தில் சவ்வூடு பரவல் என்கிற உத்தியில் தண்ணீர் தலைக்கு ஏறி மீண்டும் கழுத்து நிமிர்கிறது.

மரங்கள் மனிதர்களுடன் மட்டுமின்றி மரங்களுடனேயும் ஊடாடும். பக்கத்துச் செடிகள் தம் நீல நிறப் போர்வை வழியாக வெளியிடும் கதிர்வீச்சினைப் புரிந்து கொள்ளக்கூடியது புகையிலைச் செடி. தொலைவு அகச்சிவப்பு அலைகளாக அது உணரப்படும். அதிலும் எத்திலின் ஆவியினை உணர்ந்து கொள்ள இயலாத புகையிலையால் அந்தக் கதிர்வீச்சைப் புரிந்து கொள்வது கடினம்.

பார்லி உற்பத்தியிலும் இனம்புரியாத ஆ.க.கூட்டுப்பொருள் ஒன்று வேர்களிலும் மொட்டுகளிலும் உணவு அளவு மாறுபடச் செய்கிறதாம். சுற்றுச்சூழல் சார்ந்து ஒவ்வொரு தாவரமும் பக்கத்துச் செடிகொடிகளின் சமிக்ஞைகளை எதிர்பார்த்தே வாழ்கின்றன என்பது மாக்ஸ் பிளாங்க் வேதிமச் சூழலியல் நிறுவனத்தின் மூலக்கூறு சூழலியல் துறை ஆய்வு முடிவு.

எத்திலின், மெத்தனோல், ஐசோப்ரீன், அக்ரோலீன், மெத்தாக்ரோலீன் போன்றவை ஆவியாகக் கூடிய எளிய மூலக்கூறுகள். மீத்தைல் ஜாஸ்மோனேட், மீத்தைல் சாலிசிலேட் மற்றும் பச்சை இலை ஆவிப் பொருள்கள் போன்ற டெர்ப்பீன் ஆல்கஹால் ரகங்கள் கனத்த மூலக்கூறுகள். தாவரங்கள் தங்களுக்குள் கிசுகிசுக்க உதவும் இரசாயனச் சொற்கள் இவை.

உள்ளபடியே குட்டைக் காட்டுப் புகையிலைக்கும் முனிப் புதர் செடிக்கும் இடையே தகவல் பரிமாற்றம் நடந்தது. பரிசோதனை ரீதியில் நிரூபணம் ஆகி இருக்கிறது. இந்தப் புதர்ச்செடி அருகில் இருந்தால் புகையிலையை ஆடு மாடுகள் சீண்டாதாம். காரணம் அந்தப் புதரில் இருந்து கிளம்பும் மெத்தாக்ரோலீன் கூட்டுப்பொருள் புகையிலைக்குப் பாதுகாப்பு சமிக்ஞை ஆகி விடுகிறது என்கின்றனர் விஞ்ஞானிகள். ஏனைய சிறு மூலக்கூறுகள் அதற்கு உதவிற்றாம்.

மரங்களின் உரையாடல் இருக்கட்டும். அதற்காக நீங்கள் மரத்தின் முன் தனிமையில் பேசிக்கொண்டு நிற்காதீர்கள்.


நிருபித்து காட்டும் என் மலையாள மந்திர சக்தி
அதிசயம் ஆனால் உண்மை





46 வருட காலமாக என் புகைப்படத்தை பத்திரிகையில் அறிமுகப்படுத்துவது எனது உண்மையான சேவை என்பதற்கு எடுத்து காட்டாகவும் மேலும் எனது மாந்திரீக ஜோதிடம் கலந்த நாளாந்த சேவையைக் கண்டறிய இதோ எனது வெப்தளம் www.drpksamy .com

குறிப்பாக மாந்திரீக துறையில் வாங்கும் பணத்திற்கு ரசீது கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே

வெளிநாட்டவருக்கு விஷேச 24 மணித்தியால தொலைபேசி வசதி உண்டு.

ஜேர்மனி அன்பரின் மடல் மனித தெய்வமாகிய ஐயாவுக்கு ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையால் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 700KM அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

லண்டன் அன்பரின் மடல் எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள் பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம் பெருமதிப்பும் மரியாதையும் கொண்டஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்

குருணாகல் அன்பரின் மடல் நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப் பட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

பண்டாரவளை அன்பரின் மடல் தீராத தலைவலி தீர்த்துவிட்டது மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத தலைவலியைக் குணமாக்கி என்னைப் பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்.

சுவிஸ் அன்பரின் மடல் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாட்டுக்கு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தைக் கைகூட வைத்த உங்களுக்குப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்.

இத்தாலி அன்பரின் மடல் சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் நானும் கணவரும் பிரிய நேர்ந்த சமயம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

பதுளை அன்பரின் மடல் போதை அடிமைதனத்திலிருந்து விடுபட்டவர் அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதை பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்தில் புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

கனடா அன்பரின் மடல் ஜாதகத்தில் கூறியது பலிதம் மரியாதைக்குரிய ஐயா உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் என கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்.

யாழ்ப்பாணம் அன்பரின் மடல் அதிசய அக்னி குண்டல பூஜை மதிப்பு, மரியாதை கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதம் தோறும் விசேஷமாக நடைபெறும் அக்கினிகுண்டல பூஜையில் சக்தி பெற்ற வீபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகின்றோம் ஐயா.

Prof.P.K.SAMY(J.D.G.A.N.) JP ஐயா
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO-162 KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO-13
011-2470615,011-2342463,011-2342464, FAX-0094-11-2344831
நுவெரலியா கிளை-33 Daily Fair Complex 052-2222508-

## இன்னொருவர் பார்வையில்

"பயங்கரவாதம், ஒரு சார்க் யதார்த்தம்" என்ற தலைப்பில் கடந்த 16ஆம் திகதிய டெயிலி மிரர் ஆங்கிலப் பத்திரிகையில் வெளியான கட்டுரையின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன. இந்திய அரசியல் சமூகத்தின் நிபுணர் குழுவை உள்ளடக்கிய 'அவதானிப்பு ஆய்வு நிறுவனத்தின்' சென்னைப் பிரிவு பணிப்பாளரான என்.சத்யமூர்த்தி என்பவரால் இக் கட்டுரை எழுதப்பட்டிருந்தது.

# பயங்கரவாதம், ஒரு சார்க் யதார்த்தம்

**வேறெந்த** ரீதியிலாவது ஏதாவது சாதிக்கப்பட்டதோ இல்லையோ, இரு வாரங்களுக்கு முந்திய புதுடில்லி உச்சிமாநாடு, உலகப் பயங்கரவாதத்தின் முக்கிய அம்சத்தை சார்க் பிராந்தியம் எடுத்துக் காட்டியுள்ளதென்பதை புரிந்து கொள்ள முடிகிறது. பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய அமைப்பில் (சார்க்) ஆப்கானிஸ்தான் சேர்த்துக் கொள்ளப்பட்டமை ஒரு வகையில் வரவேற்புக்குரியது. அல்குவைதா, தலிபான் ஆகியவற்றோடு ஆப்கானிஸ்தானின் இறுதியான சம்பந்தம், சார்க் அமைப்பு ஏனைய பிராந்தியக் குழுக்களை விட பயங்கரவாதத்தின் ஆபத்தை மிக அதிகமாக எதிர் கொள்ளும் பிராந்தியமாக மாற்றியுள்ளது. இதே காரணத்திற்காகத்தான் பதின்னான்காவது உச்சி மாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்ட சார்க் பிரகடனத்தில் முன்வைக்கப்பட்ட மொத்தம் 30 விடயங்களில் குறைந்தளவு அக்கறை செலுத்தப்பட்ட அபிவிருத்தி தொடர்பான ஏனைய விடயங்களோடு சேர்த்து பயங்கரவாதத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. இந்த நாடுகளின் கூட்டான தன்மைகளிலிருந்து பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு ஒத்துழைக்க வேண்டிய தேவையையும் அவசரத் தன்மையையும் உணர்ந்து கொள்வதற்கு இது ஒருவகையில் வழி வகுத்துள்ளது.

இந்திய புராண வரலாறான மகாபாரதத்தில், சண்டையில் ஈடுபட்ட கௌரவர் சேனையின் மகாராணி கந்தகாரிலிருந்து வந்ததாகக் கூறப்படுகின்றது. தற்போது ஆப்கானிஸ்தானிலிருக்கும் கந்தகாரிலிருந்து ராணி வந்ததால் கந்தாரியென்று அழைக்கப்பட்டார். நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுவிலிருந்து இந்திய விமான சேவைக்குச் சொந்தமான விமானமொன்றினைக் கடத்தி, அதிலிருந்த பயணிகளையும் ஊழியர்களையும் தலிபான்களின் மையப் பகுதியில் பணயக் கைதிகளாக வைத்திருந்தனர். அப்போது இந்திய சிறைச்சாலைகளில் பிடித்து வைக்கப்பட்டிருந்த தமது சகாக்களை விடுவிப்பது தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் தலிபான்கள் பேச்சு வார்த்தை நடத்தியதையடுத்து கந்தகார் செய்திகளில் பரவலாக அடிபட்டது.

இதற்கு முன்னர் கூட ஆப்கானிஸ்தான் என்ற பெயர் செய்திகளில் அடிபட்டது. செப்டம்பர் 11ஆம் திகதிய தாக்குதலுக்கு முன்னர், வானளாவ உயர்ந்து நின்ற பமியான் புத்தர் சிலையை தலிபான் ஆட்சியாளர்கள் தகர்த்தபோது ஆப்கானிஸ்தானின் பெயர் அடிபட்டது. ஜிகாத்தி பயங்கரவாதத்தின் விளைநிலமாக ஆப்கானிஸ்தான் திகழ்ந்தது. பாலஸ்தீன் அல்லது காஷ்மீர் பயங்கரவாதிகளைவிட புறம்பானது ஜிகாத்தி பயங்கரவாதம்.

அல்குவைதாவிற்கும் தலிபான்களுக்கும கீழ் ஆப்கானிஸ்தான், முகம் தெரியாத தலைவரைக் கொண்ட நாடற்ற மக்களின் தேசமாக உருவெடுத்தது. இதுதான் முதலில் ஒசாமா பின்லேடனாகவும், பின்னர் முல்லா ஓமராகவும் உருவெடுத்தது. ஆப்கானிஸ்தானை சோவியத் ஆக்கிரமித்த நாட்களிலிருந்து முல்லா ஓமர் பாகிஸ்தானிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகவிருந்தார். இன்று தமது நாட்டில் பயங்கரவாதத்தைப் பேணி வளர்ப்பதாக பாகிஸ்தான் மீது ஆப்கானிஸ்தான் குற்றம் சாட்டி வருகின்றது. ஒசாமா பின்லேடனும் முல்லா ஓமரும் ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லைப்புறத்தில் மறைந்து வாழ்வதாக நம்பப்படுகின்றது.

சார்க் குடும்பத்தைச் சேர்ந்த இந்தியா தனது அயல் நாடான பாகிஸ்தான், ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதத்திற்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கி வருவதாக இந்தியா காத்மண்டுவுக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கவில்லையென்ற போதிலும், கடந்த தசாப்த காலமாக நேபாளத்தில் பரவி வரும் மாவோயிஸ்ற் தீவிரவாதம் இந்தியாவில் கவலையுடன் நோக்கப்படுகிறது. இந்தியாவில் இடதுசாரி தீவிரவாதம் இரு வித்தியாசமான மார்க்கங்களில் உருவெடுத்துள்ளது. ஒருபுறத்தில் வடக்கு - தெற்கு மார்க்கத்திலும் மறுபுறத்தில் கிழக்கு - மேற்கு மார்க்கத்திலும் உருவெடுத்துள்ளது.

நேபாளத்தில் மாவோயிஸ்ற் தீவிரவாதம் பற்றி பொதுவாக அறியப்படுவதற்கு வெகு காலத்திற்கு முன்னதாகவே இந்தியாவில் நக்சலைட்டுக்கள் செயற்படத் தொடங்கி விட்டனர். தற்போது ஆந்திரப் பிரதேசமென்று அழைக்கப்படும் இந்திய மாநிலத்தில் வித்தியாசமான தன்மை கொண்ட இடதுசாரித் தீவிரவாதம் எப்போதோ ஆரம்பித்து விட்டது. 1967ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்திலுள்ள நக்சல்பாரி என்ற கிராமத்தில் நக்சலைட் என்ற தீவிரவாத இடதுசாரி இயக்கம் தோற்றம் பெற்றது.

சார்க் பிராந்தியத்தின் ஏனைய பகுதிகளில் மதமும் சித்தாந்தமும் பயங்கரவாதத்தினதும் தீவிரவாதத்தினதும் ஆணி வேராக இருக்கையில், சார்க் பிராந்தியத்தின் தெற்கே இலங்கையில் இனப் பிரச்சினையாக அமைந்தது. உலகெங்கிலுமுள்ள பெரும்பாலான தீவிரவாத, பயங்கரவாத அமைப்புக்களில் மிகவும் சக்தி வாய்ந்த இயக்கமாக புலிகள் இயக்கம் இருந்து வந்துள்ளது. இந்து சமுத்திரத்திலுள்ள மாலைதீவைத் தவிர ஏனைய சார்க் நாடுகளோடு இந்தியா எல்லைகளைக் கொண்டுள்ளது. சகல தரப்புகளிலுமிருந்து தீவிரவாதத்தையும், பயங்கரவாதத்தையும் எதிர்கொண்ட ஆப்கானிஸ்தான் சார்க் அமைப்பில் இணையும் வரை இதுவே நிலையாக இருந்தது.

சார்க் குடும்ப நாடுகளின் தென் புறத்தே இயங்கி வந்த புலிகள் இயக்கத்தின் பெயர் என்றுமே செய்திகளில் அடிபட்டு வந்தது. ராஜீவ் காந்தி படுகொலை இதன் உச்ச கட்ட அம்சமாக அமைந்திருந்தது. சம்பிரதாயபூர்வ, கெரில்லா மற்றும் பயங்கரவாத அமைப்புக்களையும் கொண்ட புலிகள் இயக்கம், பெரும்பாலான பகுதிகளில் தகர்க்க முடியாத உலகளாவிய நிதி மற்றும் விநியோக வலைப்பின்னல் ஒன்றினையும் கொண்டுள்ளது. இதற்குமப்பால், வான வெளியில் அத்துமீறிப் பறக்கின்ற குற்றச் சாட்டுக்கு இலக்காகியிருக்கும் ஒரேயொரு ஆயுத தரப்பாகவும் புலிகள் இயக்கம் இருந்து வருகின்றது. புலிகள் இயக்கம், தனது செய்மதி தொலைக்காட்சி வலைப்பின்னலை ஆரம்பித்துப் பல வருடங்கள் கழிந்த பின்னரும், இன்ரர்சற் என்ற நிறுவனம் செய்ததெல்லாம், பல்லை இளித்துக் கொண்டு புகார் தெரிவித்ததுதான். இந்த கள்ளத் தொலைக்காட்சி சேவை பற்றிய குற்றச்சாட்டை புலிகள் இயக்கம் மறுத்ததானது, அந்த அமைப்பு தமது ஒருதலைப்பட்ச யுத்தப் பிரசாரத்திற்கு சட்டபூர்வ முகமூடியொன்றினைப் பெறுவதற்கு எடுத்த முயற்சிகளின் துயரத்தை எடுத்துக் காட்டுகின்றது.

மேற்கு நாடுகளிலும் மேற்கத்தைய ஜனங்களின் மத்தியிலும் அல்குவைதா அமைப்பைப் போன்று, பயங்கரவாத வலைப்பின்னலை கட்டவிழ்த்து விட புலிகள் இயக்கம் முனையாததால், அதற்கெதிராகச் சர்வதேச சமூகம் செயல்படுவதற்கு, செயல்படாமல் விடுவதற்கு ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. தொடர்ச்சியாக பதவிக்கு வந்த கொழும்பு அரசாங்கங்கள், அந்த நாட்டின் முக்கிய பிரச்சினையாகத் திகழும் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு முற்றுமுழுதாக முயற்சி எடுக்காதது மற்றொரு காரணமாகும். எந்தவொரு காலகட்டத்திலும் புலிகளின் இராணுவ வாய்ப்புக்கள் எப்படியிருந்தாலும் இனப்பிரச்சினையின் முக்கிய அம்சத்தைக் கையாள்வதற்கு கொழும்பு அரசாங்கங்கள் அசிரத்தைக் காட்டி வந்திருக்கின்றன.

சமயத்தைப் போலன்றி, இனப்பிரச்சினைக்கு மட்டுப்படுத்தப்பட்ட புலிகளின் இலட்சியத்திற்கு, அனுதாபமும் ஆதரவும் தெரிவிக்கும் புலம் பெயர் இலங்கைத் தமிழர்கள், தம் சார்பாக தூரத்தேயிருக்கும் இலங்கையில் யுத்தத்தை நடத்துவதற்கு புலிகளுக்கு நிதி மற்றும் ஆயுதங்களை வழங்குவதில் தம்மை மட்டுப்படுத்திக் கொண்டுள்ளனர். இதற்குப் புறம்பாக அல்குவைதா உலகின் பல பாகங்களில், குறிப்பாக சார்க் பிராந்தியத்தின் தென் கிழக்காசிய அயல் பிரதேசங்களில் உள்ளூர் ஜிகாத்தி குழுக்கள் தோன்றுவதற்கு ஊக்கமளித்துள்ளது. பல்வேறு ஜிகாத்தியக் குழுக்களுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பு நிலவிய பல சம்பவங்கள் இருந்தாலும், அல்குவைதா அமைப்புக்கு பொதுவான ஆணையும் கட்டுப்பாடும் வழங்கும் ஒரு பொறிமுறை கிடையாது.

பயங்கரவாதம் கையாளப்படும் விதத்தைப் பார்க்கையில், சார்க் அமைப்பு சகலவற்றையும் இழந்து விட்டதாகக் கருத முடியாது. ஆயினும் அதனிடம் சகலரும் இழந்து போய் விட்டனரென்றும் கருத முடியாது. பங்களாதேஷ், ஜிகாத்தி பயங்கரவாதத்தை அடக்குவதில் உதாரணமாகவும் திகழ்ந்தது. அசாமில் இயங்கி வரும் உல்பா தீவிரவாதிகள் பூட்டானில் தஞ்சமடைவதைத் தவிர்ப்பதில் இந்தியாவிற்கு உதவியாக அந்த நாடு செயற்பட்டு வருகிறது.

எதிரிகளாகத் திகழ்ந்த தீவிரவாதிகளை பாரிய முயற்சிகளின்றி பிரதான நீரோட்டத்திற்குள் கொண்டு வருவதற்கு எவ்வாறு முடிந்ததென்பதை அண்மைக்கால நேபாள அனுபவம் எடுத்துக் காட்டுகிறது. இதுகாலவரை மன்னராட்சியின் கீழ் நேபாளம் இருந்து வருவதைக் கவனத்தில் கொள்ளுகையில், பிரதான நீரோட்டத்தில் இணைந்துள்ள அரசியல் சமூகம் உடனடியாக ஏற்றுக் கொண்டமை எதனால் நிகழ்ந்தது என்பது குறித்து விவாதிக்க வேண்டியிருக்கின்றது. நேபாளத்துக்கும், அதன் புதிய ஆளும் வர்க்கத்துக்கும் கஷ்டமான பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கும் திடசங்கற்பத்தை எடுத்துக் காட்ட வேண்டிய தேவையிருக்கின்றது. இருந்த போதிலும் மாவோயிஸ்ற் தீவிரவாதிகள் பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டமை குறித்தும் ஆராய வேண்யிருக்கிறது.

ஐ.நா. மேற்பார்வையின் கீழ் இராணுவமும் மாவோயிஸ்ற்றுக்களும் ஆயுதங்களைப் பூட்டி வைக்க எடுத்த நேபாளத்தின் முன்னுதாரணம், இலங்கையில் இன யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தரப்பினர், சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய ஓர் அம்சமாகும். இலங்கையில் இடதுசாரித் தீவிரவாதிகளான ஜே.வி.பி.யினர், தேர்தல் ஜனநாயகத்தை ஏற்றுக் கொள்ளும் தமது விருப்பை இலகுவாகவே வெளிப்படுத்தியுள்ளனர். இருந்தபோதிலும் அவர்களின் அரசியல் பாணியும் பொது நிலைப்பாடுகளும், ஆளும் அதிகார வர்க்கத்தினால் ஏற்றுக் கொள்வது கஷ்டமானதாக இருக்கிறது.

இன்று ஆப்கானிஸ்தானும் இலங்கையும் தொடர்ந்தும் கொதி நிலையில் இருக்கின்றன. பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் அவர்களைச் சார்ந்த பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த நிலையில் தீவிரவாதத்தை சாத்தியமாக்குகின்ற, பயங்கரவாதத்தை நியாயப்படுத்துகின்ற ஏதாவது பாரிய பிரச்சினைகள் இருக்குமேயானால் அவற்றைக் கையாள்வதற்கான வழி வகைகளைக் கண்டறிய வேண்டிய தேவை சார்க் போன்ற அமைப்புகளுக்கு இருக்கின்றது. உண்மையில் பிரச்சினைகள் வித்தியாசமானவை. எனவே இதற்கான அணுகுமுறைகளும் வித்தியாசமானவையாகவே இருக்கும். உதாரணத்துக்கு மாலைதீவில் அரசியல் மற்றும் நிர்வாக வழிமுறைகளை ஜனநாயக மயப்படுத்த வேண்டுமென்று பெரும் குரல்கள் எழுப்பப்படுகின்றன. ஆனால் அங்கே இது தீவிரவாதத்திற்கு வழிவகுக்கவில்லை. மாறாக பூட்டானில் பாரம்பரியமாக இருந்து வரும் மன்னராட்சி, அரசியல் சமூகத்தையும் சிவில் சமுதாயத்தையும் எவரும் கூறாமலேயே ஜனநாயக மயப்படுத்துவதற்கான வழிவகையை அறிவித்துள்ளது.

சார்க் மாநாட்டின் இறுதி நாளன்று, பயங்கரவாதத்தை எதிர்ப்பது தொடர்பான சகல சர்வதேச சாசனங்களையும் அமுல் செய்வதென்ற தமது கடப்பாட்டை அங்கத்துவ நாடுகள் மீள உறுதி செய்து கொண்டன. அதாவது பெருமளவில் இந்தப் பிரச்சினையைக் கையாள்வதற்கு ஐக்கியப்பட்ட அல்லது ஒருமுனைப்படுத்தப்பட்ட அணுகுமுறையைக் கையாளா விட்டாலும், ஒருங்கிணைந்த நடவடிக்கையை எடுக்க அது வலியுறுத்துகின்றது.




புதுடில்லி சார்க் உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்கள்.




**இதற்கு** பெயர்தான் கந்தன் கருணை இல்லம். புலிகள் அமைப்பினர் சக இயக்க போராளிகளை கைதிகளாக அடைத்து வைத்திருந்த இடம். நல்லூர் பின் வீதியில் இருந்த கந்தன் கருணை இல்லத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் அங்கிருந்து யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள இடமொன்றிற்கு மாற்றப்பட்டிருந்தனர்.

இடம் மாறிச்சென்று ஒரு வாரகாலத்திற்குள் தமிழர் வாழும் பிரதேசங்களெங்கும் அதிர்ச்சி தரும் அவலச்செய்தி ஒன்று பரவியது!

புலிகளால் சிறைப் பிடிக்கப்பட்ட சக இயக்க போராளிகள், வர்த்தகர்கள், பொது மக்கள் என 60 பேர்கள் யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் இருந்த புலிகளின் சிறையில் வைத்து புலிகளாலேயே கொல்லப்பட்டதுதான் அந்தச் செய்தி!

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் இருந்த கிறவுண் பேக்கறி உரிமையாளரான மட்டக்களப்பைச் சேர்ந்த தவராஜா, யாழ். லலிதா நகைமாளிகை உரிமையாளர் ஆகியோரும் அந்த சிறைப்படுகொலையில் ஆகியோரும் கொல்லப்பட்டிருந்தார்கள்.

புலிகளின் வதைமுகாமில் கொல்லப்பட்டவர்களில் ஈஸ்வரனும் ஒருவர். கடந்த வாரத்தோடு ஈஸ்வரன் போன்ற ஆற்றல் மிக்க போராளிகளை இழந்து இருபது ஆண்டுகள் கழிந்திருக்கிறது.

ஈஸ்வரன், புளொட் மெண்டிஸ், கபூர், மலையகத்தை சேர்ந்த டாக்டர் பெஞ்சமின் என குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய போராளிகளை இந்த இடத்தில் ஞாபகப்படுத்துவது பொருத்தமானது. இதில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய ஒருவர் பெஞ்சமின்.

**யார் இந்த பெஞ்சமின்?....**

இவர் மலையகத்தைச் சேர்ந்த ஒரு முற்போக்கு சிந்தனையாளர். துடிப்புள்ள இளைஞன். ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் மருத்துவ பிரிவிற்கு பொறுப்பாக இருந்தவர். மருத்துவக் கல்லூரி மாணவன்.

அப்போது ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற அமைப்புகளில்தான் மலையக

> அரச படையினரை யுத்த கைதிகளாக பிடித்து வைத்திருக்கும் புலிகள், அவர்களின் பெற்றோர்கள் அவர்களைப் பார்வையிடுவதற்கான அனுமதியினையும் அளித்து வந்திருக்கின்றனர். யுத்த கைதிகளாக நிபந்தனைகளின் அடிப்படையில் சிலரை விடுவித்தும் இருக்கின்றார்கள். ஆனால் புலிகள் கோருகின்ற அதே தமிழீழத்திற்காக போராடிய போராளிகளில் சின்ன மெண்டிஸும் ஒருவர். அவரின் பெற்றோர்கள் அவரை பார்வையிடுவதற்கான அனுமதி அவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்தது.

இளைஞர்கள் இணைந்திருந்தினர். அதற்கான காரணம் குறிப்பிட்ட இந்த அமைப்புகள்தான் மலையக மக்கள் குறித்தும் கருத்தில் எடுத்து செயற்பட்டிருந்தன.

அந்த ஈர்ப்பினால் உந்தப்பட்ட ஒருவர்தான் பெஞ்சமின். ஈழப்போராட்ட வரலாற்றில் மறக்கப்பட முடியாத ஒருவர் இவர். ஈழ மருத்துவ சேவை என ஒரு அம்புலன்ஸ் வண்டியை உருவாக்கி சேவை செய்து வந்தவர். அப்போது படைமுகாம்களில் இருந்து செல்கள் வந்து விழும். அதில் பொது மக்கள் காயமடைவார்கள்.

படையினரின் செல்வீச்சுக்களையும் பொருட்படுத்தாது பெஞ்சமின் தான் பெற்றிருந்த இராணுவப் பயிற்சியைப் பயன்படுத்தி ஊடுருவிச்சென்று காயப்பட்டு இரத்த வெள்ளத்தில் இருக்கும் மக்களைத் தனது ஈழ மருத்துவ சேவை அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றுவார்.

அந்த வாகனத்திற்கு உள்ளே பெஞ்சமினால் பயிற்றுவிக்கப்பட்ட முதலுதவி சிகிச்சைப் போராளிகள் இருப்பார்கள். மருத்துவமனைகளை நோக்கி ஈழ மருத்துவ சேவை வாகனம் வேகமாக செல்லும்.

மருத்துவ மனைகளில் டாக்டர்களுக்கான பற்றாக்குறை இருப்பது வழமை. பெஞ்சமின் தானும் மருத்துவக் கல்லூரி மாணவன் என்பதால் டாக்டர்களோடு இணைந்து காயப்பட்ட மக்களைக் காப்பாற்றும் பணிகளில் சுறு சுறுப்பாகவும் விவேகமாகவும் இயங்கிக்கொண்டிருப்பார்.

தமிழ் நாட்டில் கும்பகோணத்தில் பெஞ்சமின் இருந்த போதும் இதே போன்ற சேவையை நடத்தியிருந்தவர். கும்பகோணம் வறிய மக்களை கொண்ட ஒரு பிரதேசம். அங்குதான் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் பயிற்சி முகாம் இருந்தது.

அப்போது அதன் தலைவவர்களாக இருந்த பத்மநாபா, டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் அனுசரணையோடு ஒரு இலவச மருத்துவ மனையை பெஞ்சமின் நடத்தி வந்தவர். இதனால் தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் அந்த அமைப்பின் மீதான விருப்பங்கள் அதிகரித்திருந்தது.

இவ்வாறான ஒருவர்தான் பெஞ்சமின். இவரும் புலிகளின் அந்த சிறையில் வைத்து கொல்லப்பட்டிருந்தார். அடுத்த ஒருவர் சின்ன மெண்டிஸ்!

**யார் இந்த சின்ன மெண்டிஸ்?....**

சின்ன மெண்டிஸ் புளொட் அமைப்பின் முக்கிய உறுப்பினர். யாழ். உடுவிலைப் பிறப்பிடமாக கொண்டவர். அந்த அமைப்பின் தளத்திற்கு பொறுப்பாக இருந்தவர்.

ஆற்றல் மிக்கவர். அரசியல் இராணுவ வழிகாட்டியாக இருக்க முடிந்தவர்.

புலிகளின் சிறையில் மிக மோசமான சித்திர வதைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தவர். சின்ன மெண்டிஸின் விரல் நகங்கள் பிடுங்கப்பட்டு, கால்கள் அடித்து நொறுக்கப்பட்டு நடக்க முடியாத நிலையில் கைகளை ஊன்றி தவழ்ந்துதான் அவரால் எதையும் செய்ய முடிந்திருந்தது.

அரச படையினரை யுத்த கைதிகளாக பிடித்து வைத்திருக்கும் புலிகள், அவர்களின்

**தேடனார்**

பெற்றோர்கள் அவர்களைப் பார்வையிடுவதற்கான அனுமதியினையும் அளித்து வந்திருக்கின்றனர். யுத்த கைதிகளாக நிபந்தனைகளின் அடிப்படையில் சிலரை விடுவித்தும் இருக்கின்றார்கள். ஆனால் புலிகள் கோருகின்ற அதே தமிழீழத்திற்காக போராடிய போராளிகளில் சின்ன மெண்டிஸூ ம் ஒருவர்.

அவரின் பெற்றோர்கள் அவரை பார்வையிடுவதற்கான அனுமதி அவர்களுக்கு மறுக்கப்பட்டிருந்தது. அவரை கொன்று வீட்டு அவர் அணிந்திருந்த மோதிரத்தை மட்டும் அவரின் பெற்றோர்களிடம் புலிகள் கொடுத்திருந்தனர்.

சின்ன மெண்டிஸ் 87 இல் தைப்பொங்கல் தினத்திற்கு முதல் நாளே கொல்லப்பட்டு விட்டார். அவரது நினைவுநாள் தைப்பொங்கல் தினத்திற்கு முதல் நாள் என்பதை உறுதியாகக் கூறமுடியும். அடுத்த ஒருவர் கபூர்.

**யார் இந்த கபூர்?......**

பாலசுப்பிரமணியம் இவரது சொந்தப் பெயர். இவரது சகோதரரான ரவி என்பவர் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் மாணவர் அமைப்பில் செயற்பட்டு வந்தவர். இவரும் இந்தியப்படை காலத்தில் சாதாரண குடும்ப வாழ்வில் ஈடுபட்டிருந்த போது புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தவர்.

கபூர் அந்த அமைப்பின் யாழ். பிராந்திய படைத்தளபதியாக இருந்தவர். 83 யூலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்டு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்திருந்தது இவரது குடும்பம்.

கொழும்பில் அந்த அமைப்பின் மாணவர் அமைப்பான ஈழ மாணவர் பொது மன்றம் செயற்பட்டுக்கொண்டிருந்த போது கபூரின் வீடும் அவர்களுக்கு தளமாக இருந்தது.

அப்போது கொழும்பில் தங்கியிருந்து அரசியல் ஆரம்ப வேலைகளில் ஈடுபட்டிருந்தவர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள். கபூரின் வீட்டில் அடிக்கடி இவர்கள் சந்தித்து தீர்மானங்களை எடுப்பது வழமை.

(சாட்சிகள் தொடரும்...)

---




**ஹவானாவுக்குத்** திரும்பிய பிடல் சனசந்தடியற்ற விடுதி ஒன்றில் தங்கினார்.

லெஸ்னிக்கு மட்டும் முதலில் தகவல் அனுப்பினார். பிடலின் வருகை அறிந்து ஓடிவந்த லெஸ்னின், இருக்கின்ற ஆபத்து புரியாமல் அவசரப்பட்டு பிடல் வருகை தந்ததைக் கூறி கோபித்துக் கொண்டார். அந்த கோபத்துக்குக் காரணம் தன்மீதான அன்பும், உயிருக்கு ஆபத்து எதுவும் நடந்து விடக்கூடாது என்ற அக்கறையும்தான் என்பதைப் புரிந்து கொண்டவர் போல் பிடல் லெஸ்னின் கைகளைப் பிடித்து, அடுத்து நடக்க வேண்டியதைப் பற்றி யோசிப்போம் என்றார். முதலில் இந்த விடுதியிலிருந்து வெளியேற வேண்டும் என்று கூறிய லெஸ்னின், பிடலை அழைத்துக் கொண்டு அதே பகுதியில் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்து அங்கு தங்க வைத்தார். தவணை முறையில் வீட்டுப் பொருட்களும் வாங்கப்பட்டது. இந்தச் செய்தியை மனைவி மிர்தாவுக்குத் தெரிவிக்கும்படி பிடல் கூறினார். அதன்படியே லெஸ்னிக்கு செய்தி கொடுக்கப்பட்டது. பிடலைப் பார்க்கின்ற ஆவல் மிர்தாவுக்கு தொற்றிக் கொண்டது. உடனடியாகப் பிடலைப் பார்க்க வேண்டும் எனக் கேட்டார். மிர்தாவையும், மகனையும் இரகசியமாக அழைத்துக் கொண்டு வந்த லெஸ்னின், பிடலிடம் சேர்த்தார். பிடலை கட்டிப் பிடித்துக் கொண்ட மிர்தா, சொல்ல நினைத்த வார்த்தைகளையெல்லாம், பட்ட துன்பங்களையெல்லாம் அழுகையினாலேயே வெளிப்படுத்தினார். மிர்தாவின் அழுகை அவரின் மன நிலையையும், எண்ணங்களையும் பிரதிபலிப்பதாகவே இருந்தது. மிர்தா முடியுமானவரை அழுது விடட்டும் என்று பிடல் மிர்தாவை மார்பில் சாய்த்தபடியே சிலை போல நின்றார்.

லெஸ்னின் கையில் இருந்த குழந்தை பிடலைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது. அழுது முடித்து தேம்பிக் கொண்டிருந்த மிர்தாவை ஓரமாக இருந்த கதிரையில் இருத்தி விட்டு குழந்தையை கையில் ஏந்திக் கொண்ட பிடல், குழந்தை முகம் பார்ப்பதையும், சிரிப்பதையும் ரசித்துக் கொண்டிருந்தார்.

லெஸ்னின் அவசரவேலை இருப்பதாகச் சொல்லிவிட்டு



புறப்பட்டார். தொடர்ந்து பிடலுடன் இருக்க விரும்புவதாக மிர்தா கூறினார். பிடலும் சம்மதித்தார். பிடலுக்கு இருக்கக்கூடிய பொருளாதாரப் பிரச்சினையை லெஸ்னின் பிடலின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரான அஸ்பியாகோவிடம் தெரிவித்தார். இதேவேளையில் தவணை முறையில் பொருட்களை வழங்கியவர்களுக்கு முறையாகப் பணம் தராதபடியால் அவர்கள் வந்து பொருட்களை ஏற்றிக் கொண்டிருந்தனர்.

அந்த நேரத்தில் லெஸ்னினுடன் வருகை தந்த அஸ்பியாகோ, அந்தப் பணத்தைக் கட்டி பொருட்களை மீட்டுக் கொடுத்தார். வெளியில் நிலைமை படிப்படியாக வழமைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது. பிடல் படிப்பைத் தொடரவிரும்பினார். மாணவர்கள் முன்னை விடவும் கூடுதல் பாதுகாப்பு வழங்குவதாகக் கூறினார் பிடல். சட்டப்படிப்பைத் தொடர்ந்தார்.

வழமைபோல் பிடல் வெளியில் சென்று திரும்பும்போது, வீட்டில் புதிய கதிரைகளும் மேசைகளும் இருப்பது கண்டு ஆச்சரியப்பட்டார். அவற்றை நண்பர் அஸ்பியாகோதான் கொடுத்து விட்டுப் போனார் என்று மிர்தா கூறவும், நண்பனின் எண்ணங்களில் நிறைந்துள்ள தூய்மையை நினைத்துக் கொண்டார். இரண்டு ஆண்டுகளில் படிக்கவேண்டியதை ஆறு மாதங்களில் படித்தார். தேர்வையும் எழுதினார். நிறைவான தேர்ச்சியாக இல்லாத போதும் தேவையான தேர்ச்சியைப் பெற்றார். கூடவே மூன்று டாக்டர் பட்டங்களையும் பெற்றார். பிடலின் இந்த அபாரமான முயற்சியும், பெற்றுக் கொண்ட வெற்றிகளும் சக மாணவர்களுக்கு வியப்பை அளித்தது. வழக்குரைஞராக தொழில் செல்வதென முடிவெடுத்தார். எனினும் அரசியல் செய்வதற்கு வழக்குரைஞர் தொழில் இடையூறாக இல்லாமலும் பார்த்துக் கொண்டார்.

வழக்குரைஞராக முதலில் வாதாடியது தனக்காகத்தான் என்பது பிடலின் வாழ்வில் நடந்த சுவாரஷ்யமான நிகழ்வுகளில் ஒன்று.


ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்து கொண்ட பிடலை கைது செய்து நீதி மன்றத்தில் நிறுத்தினார்கள். நீதிமன்றத்தில் நின்ற பிடல் நீதிபதியைப் பார்த்துச் சொன்னார், "நான் ஒரு வழங்குரைஞர். ஆகவே எனக்காக நானே வழக்காடுவேன்" என்றார். பிடலின் தன் நம்பிக்கையான பேச்சைக் கேட்ட நீதிபதி "அப்படியென்றால் வழக்குரைஞர் உடையில் மன்றில் தோன்றித் தாராளமாக வாதாடலாமென்றார்."

அப்போது பிடலிடம் கறுப்பு மேலாடையோ, குல்லாவோ இருக்கவில்லை. கூடவே ஐந்து சென்ட் பணமும் மன்றுக்குக் கட்ட வேண்டியிருந்தது. பிடலின் துணிச்சலுக்கு இழுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக, மன்றிற்கு வருகை தந்திருந்த சக மாணவர்கள் நீதிமன்ற வளாகத்துக்குள்ளேயே துண்டு ஏந்தி பணம் தேடிக் கொண்டு பிடலுக்கு வாடகைக்கு கறுப்பு அங்கி கொண்டு வந்து கொடுத்தனர். அந்த வாடகை உடையை அணிந்து கொண்டு பிடல் மன்றுக்குள் நுழைந்தார்.

ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டியிருந்த காரணத்தையும், அவசியத்தையும் குறிப்பிட்டுப் பேசி "இந்த அரசை குற்றம் சாட்டுவதாக சொன்னார். அவரின் விவாதம் அரசியல் சொற்பொழிவு போல் அமைந்திருந்தது. பிடலின் வாதத்தையும் நியாயத்தையும் நிராகரிக்க முடியாத நீதிபதி பிடலையும், கைதான ஏனைய மாணவர்களையும் விடுதலை செய்தார். பிடலின் நீதிமன்ற உரை பத்திரிகையில் முக்கிய செய்தியாகப் பிரசுரமாகி இருந்தது.

**தருவது**
**எம். கேஷிகன்**

வழக்குரைஞர் தொழிலை தனிமையாகச் செய்ய முடியாது என்பதால், தன்னுடன் விசுவாசமாக இருக்கக் கூடிய இருவரைத் தேடிக் கொண்டிருந்தார். பண்ணையார் வீட்டுப் பிள்ளைகள், பணக்கார வீட்டுப் பிள்ளைகள் என்பவர்களைத் தனக்கு நெருக்கமாக வைத்துக் கொள்ள விரும்பவில்லை. ஆகையால் பேருந்து ஓட்டுநராக இருந்து பின்னர் வழக்குரைஞராக பட்டம் பெற்ற நண்பரான ஒன்பது வயது மூத்தவரான ஜோர்ஜ்



ஆஸ்பியோவை தன்னுடன் சேர்த்துக் கொண்டார். இன்னொருவராக ஏழைக் குடும்பத்தில் பிறந்து, பலவித நெருக்கடிகளைச் சந்தித்து வழக்குரைஞர் பட்டம் பெற்ற ரபேல் ரசேண்டே என்பவரையும் இணைத்துக் கொண்டார். மூவருமாக இணைந்து ஒரு அலுவலகத்தைத் தேடுவதற்கு உத்தேசித்துத் தேடலாயினர். யாரும் இடம் தருவதாக இல்லை. சிலர் இடம் தருவதற்கு சம்மதித்த போதும் அவர்கள் வாடகையாகக் கேட்கும் பணம் இவர்களுக்குக் கட்டுப்படியானதாக இருக்கவில்லை.

இறுதியாக ரொசாரியோ கட்டிடத்தில் ஒரு அறை கிடைத்தது. அதற்கு முற்பணமாக 120 பிசோ கொடுக்க வேண்டும்.

(அசத்தல் தொடரும்)




ரிக்கினை உடனடியாக ஆட்சியாளனாகப் பதவி உயர்வு அளித்து எல்லா ஊடகங்களுக்கும் அப்போதே செய்தி அனுப்பியிருந்தார் ஜனாதிபதி.

அத்துடன் ரிக்தான் இனி அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை வியட்நாமில் நிர்ணயிப்பான் என்றும் அறிவித்தார். அவரின் அறிவித்தலால் ரிக் மிகவும் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்தான். அவன் அது போன்ற பதவியைக் கனவிலும் நினைத்திருக்கவில்லை. அவனால் இப் பதவியை வகிக்க முடியுமா என்று கூட யோசித்தான். ஆனாலும் முயற்சி செய்வோம் என்று ஜனாதிபதியிடம் பதவிப் பிரமாணம் செய்து கொண்டான்.

**அதே** வேளை ஜனாதிபதி தரை வழியாக கிளம்பிவிட்டார் என்பதை அறிந்த வியட்கொங் இராணுவத்தினர், அவர் செல்லும் பாதையை நோக்கி எறிகணைகளை ஏவிவிட்டனர். சில எறிகணைகள் பக்கத்தில் விழுந்து வெடித்த போதும் வாகனத் தொடரணியைப் பாதிக்கவில்லை. அதற்கிடையில் தலைநகரில் ஜனாதிபதி தரையிறங்கியிருந்தார். தனக்கருகில் இருந்து ரிக் இராணுவத்தினருக்கு தகவல்களை கொடுத்துக் கொண்டே வந்தான். அத்துடன் வாகனத் தொடரணி தாக்கப்படுகிறது என்பதையும் அறிந்தான். ஆனாலும் வாகனத் தொடரணியைத் தலைநகருக்கு வரும்படி கட்டளையிட்டான். ஒருவாறு ஜனாதிபதியைப் பாதுகாப்பாகக் கொண்டு வந்து சேர்த்த ரிக், ஜனாதிபதியிடம் வழியில் வாகனத் தொடரணிக்கு நடந்ததையெல்லாம் விபரித்தான். அவரும் மிகவும் வியப்பாக ரிக்கின் புத்திக் கூர்மையை எண்ணி வியந்தார். அவனின் செய்கையில் ஏதோ காரணம் இருக்கிறது என்பதை அறிந்து கொண்டார்.

ரிக்கினை ஜனாதிபதி மிகவும் நம்பினார். அந்த நம்பிக்கையை இன்னும் வலுப்படுத்தும் விதமாக அவனின் செய்கைகள் அமைந்திருந்தன. இதனால் அவனுக்குப் பதவி உயர்வு மற்றும் இதர எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க ஜனாதிபதி முன் வந்தார்.

அத்துடன் ரிக்கிற்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவனின் பாதுகாப்புக்காக அமெரிக்காவிலிருந்து விஷேட பயிற்சி பெற்ற மெய்க்காப்பாளர்கள் வந்திறங்கினார்கள். அவர்கள்தான் ரிக்கினை இனி கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி கட்டளையிட்டிருந்தார். படைத் தரப்பில் ரிக் என்ன வேண்டுமானாலும் தன்னிடம் கேட்கும்படி கூறியிருந்தார். ஜனாதிபதி மிகவும் சந்தோசத்துடன் காணப்பட்டார். அத்துடன் அவர் மனம் குளிரும் படி நல்ல விருந்துபசாரம் ஒன்றையும் ரிக் நடத்தியிருந்தான். காலையில் ஜனாதிபதி விஷேட விமானம் மூலம் அமெரிக்க பயணமானார். பயணமாகும் போது, அவர் ரிக்கினை கட்டித் தழுவி விடைபெற்றார்.

சில நாட்கள் சென்ற ரிக், தனது போக்கில் எந்த வித மாற்றத்தையும் காட்டிக் கொள்ளவில்லை. முன்பு போலவே சகஜமாக அனைவரிடமும் கதைத்துப் பழகினான். அத்துடன் ஜனாதிபதி வரும் போது கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்தான். அவர்களை அவர்களின் சொந்தக் கிராமங்களுக்கு அனுப்பி வைத்தான். ஆனால் வியாகியையும் அவனின் கூட்டாளிகளையும் மட்டும் இன்னும் பிடியில் வைத்திருந்தான் ரிக். அவர்களிடம் இன்னும் சில விடயங்களைக் கேட்டறிந்து கொள்ளும் முகமாக அவனை ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்த்தி அவனிடம் விடயங்களைக் கேட்டறிந்து கொள்ளும் முகமாக வைத்தியர்களின் உதவியுடன் அவனிடம் இருந்து அவர்களின் முகாம் எங்கிருக்கிறது என்பதையும், முகாம் அமைக்கப்பட்டிருக்கின்ற விதத்தினையும் யார் யார் அவற்றைக் காவல் காக்கிறார்கள், யார் யார் அவர்களுக்கு உதவி வழங்குகிறார்கள் என்பதையெல்லாம் விலாவாரியாகக் கேட்டு அறிந்து கொண்டான். அத்துடன் அவர்களை எப்படி அணுகுவது போன்ற பயனுள்ள தகவல்களையும் பெற்றுக் கொண்டான். அவர்களிடம் அமெரிக்கப் படையினர் கைதிகளாக இருக்கிறார்களா என்றும் கேட்டான். அவர்களிடம் அமெரிக்கப் படைகள் ஒருவரும் இல்லை என்பதை அறிந்து கொண்டான். அத்துடன் தாக்குதல் திட்டங்களை முன்நின்று நடத்தியவன் வியாகி என்பதையும் அறிந்து கொண்டான். மிகவும் நல்ல வீரன், அவனை வெளியில் விட்டால் வியட்கொங் இராணுவம் பலம் அடைந்து விடும். ஆகையால் அவனை கொலை செய்யலாம் என்றும் நினைத்தான். ஆயினும் நல்ல வீரன் ஒருவனைக் கொலை செய்யவும் ரிக் விரும்பவில்லை. அவனை சிறைக்காவலில் வைக்குமாறு கட்டளையிட்டான்.

(தொடரும்)


# பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம், நடுக்கம், நித்திரைக் குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத் திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப்பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனின் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

**பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்**

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மைச் சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது.கனவிலும், நினைவிலும், சிறுநீரிலும் விந்து வெளியாவது, (2) உடல் பலவீனம், (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது, (4) உறவின்போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். வாழ்வு வீணாகிவிட்டதே என்று பயப்படாதீர்கள்!

மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில் பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளைப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.


**பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களைச் சந்திக்கும் நாட்கள்**

**கொழும்பில்...**
2007 ஏப்ரல் 22 - 28 வரை..
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
Tel No: 5368426, 2368427.
ஏனைய நேரங்களில்... Hot Line : 0777 569205

**வவுனியாவில்...**
2007 மே 05 - 07 வரை..
Vanni Inn 2 ஆம் குறுக்குத் தெரு,
வவுனியா. Tel No. 0242222074
Hot Line : 0777 569205
பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Sri lanka.Resident Tel No. 065 2224019 Hot Line : 0777 569205





உங்களுடைய வெற்றி
சுகம், சந்தோசத்துக்கு
சேவை செய்வேன்
இன்றே
அழையுங்கள்.
057-2224591-92

முழு உலக வாசிகளுக்கும்
வெற்றியை ஈட்டித்தந்த
பண்டாரவெல
**கலாநிதி ஷர்மா சுவாமிகள்**

உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.

நாம் வாழும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். சதியிருந்து விடுபடுவதே எங்களின் நோக்கம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுபட இருதடவை. யோசிக்காமல் என்னை சந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்கிறேன்.

**பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.**

இன்றே சுவாமியவர்களைச் சந்தியுங்கள்
தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் கூடிய கடித உறையொன்றை அனுப்புங்கள்.

**சந்திப்பு**
பண்டாரவளையில்
செவ்வாய் முதல் வெள்ளிக்கிழமை வரை
காலை 8.00 மாலை 6.00
நெடுஞ்சாலை காரியாலயத்திற்கருகில்
IDL நேர்சிங் ஹோம் மேல் பாதை
தெஹிவளையில் சனி ஞாயிற்றுக்கிழமைகளில்
தொ. பே. +94-572232441 +94-773227005
திங்கள் விடுமுறை கவனிக்கவும்.

**சகலவிதமான வசிய மாந்திரீகம்**
- வீடு, வியாபார விருத்தி
- விவசாய விருத்தி
- நோய் நொடி சுகப்படுத்தல்
- விட்டுபிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் ஒன்று சேர.
- தாமதிக்கும் திருமணம் விரைவில் நிறைவேற
- குழந்தைப் பாக்கியம் கிட்ட
- விலைபோகாத காணிகள் விற்பனையாக
- எல்லா பரீட்சைகளிலும் சித்திபெற
- ஜாதகம் பார்ப்பது முதல் சகல ஜோதிட விடயங்கள்
- மண் பரீட்சை செய்தல்
- பிராணிகளை அகற்றுதல்

சகல பரீட்சைகளுக்கு சக்திமிக்க சரஸ்வதி யந்திரம்.

**DR. K.A.S. SHAARMA SWAAMI**


HEAD OFFICE : 18A, SENANAYAKE MAWATHA, BANDARAWELA, SRI LANKA.
TEL: 057-2224591-92, FAX: 057-2232441, MOB. 077-3227005

9A, COUNCIL AVENUE, DEHIWALA.
TEL: 057-4902050, 077-3227005
நாளையும் நேரத்தையும் ஒழுங்குபடுத்திக் கொள்ளவும்

Website: sharmasami.org E-mail: sribathrakaliamman_temple@yahoo.com


# குளிரும் பாலைவனம்!

**பாலைவனம்** என்றால் உடனே சகாரா பாலைவனம்தான் நினைவுக்கு வரும். அத்துடன் சுட்டெரிக்கும் வெயிலும், தகிக்கும் மணலும்தான் நம் கண் முன்னே நிற்கும். உலகில் சகாரா மட்டுமின்றி பல பாலைவனங்கள் உள்ளன. இந்தியாவில் உள்ள தார் பாலைவனமும் இதில் அடங்கும். பாலைவனங்கள் எல்லாமே கடும் வெயில் வீசுவதாக இருக்க வேண்டும் என்பதில்லை. எப்போதும் கடும் குளிர் வீசுகின்ற பாலைவனமும் உண்டு. தவிர, பாலைவனம் என்றால் ஒரு கோடியில் இருந்து மறு கோடி வரை ஒரே மணலாக இருக்க வேண்டும் என்பதில்லை. பாலைவனத்தில் உயிரினங்களோ, தாவரங்களோ இருக்க முடியாது என்பதில்லை.



எது பாலைவனம் என்பதற்கு விஞ்ஞானிகள் பொதுப்படையாக ஓர் அளவுகோல் நிர்ணயித்துள்ளனர். ஆண்டொன்றில் சராசரி மழை அளவு 250 மில்லிமீற்றருக்கும் (10 அங்குலம்) குறைவாக உள்ள பிராந்தியம் பாலைவனம் என்று அவர்கள் கூறியுள்ளனர். வெயில், குளிர், மணல் பற்றி அவர்கள் குறிப்பிடவில்லை.

உலகிலேயே மிகப் பெரிய சகாரா பாலைவனம் கிழக்கே எகிப்து நாட்டில் தொடங்கி மேற்கே மொராக்கோ வரை 4,800 கிலோ மீற்றர் நீளத்துக்கு அமைந்துள்ளது. அகலம் சுமார் 2,000 கிலோமீற்றர். பாலைவனம் மொத்தமும் ஒரே மணலாக உள்ளதாக நினைத்தால் அது தவறு. சகாராவில் 30 சத விகிதப் பரப்புதான் மணல். மிகுதிப் பிராந்தியம் சரளைகள், பாறைகள் ஆகியவற்றால் ஆனது. இத்துடன் ஒப்பிட்டால் உலகில் வேறு எங்கும் இல்லாத வகையில் அரேபியப் பாலைவனத்தில்தான் மிக நீண்ட தூரத்துக்கு இடையறாது மணல் பிராந்தியம் உள்ளது.

நிபுணர்கள் பாலைவனங்களைப் பல வகைகளாகப் பிரித்துள்ளனர். எனினும் இவை அனைத்துக்கும் பொதுவான அம்சம் மழையின்மையே. ஆகவே அவை மக்கள் வசிக்க லாயக்கற்றவையாக உள்ளன. இருந்த போதிலும் சில பாலைவனங்களில் நாடோடிகள் எனப்படும் மக்கள் அங்குமிங்கும் வசிக்கத்தான் செய்கின்றனர். அரேபியப் பாலைவனம் இதற்கு உதாரணம். அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் பாலைவனப் பகுதி என்று சொல்லத்தக்க அளவில் உள்ள பகுதியில் பீனிக்ஸ், டூசான் ஆகிய நகரங்கள் இருக்கத்தான் செய்கின்றன. டூசான் நகரில் ஆண்டு சராசரி மழை அளவு 11 அங்குலம்.

சகாரா, அரேபியப் பாலைவனம், தார் பாலைவனம் போன்றவற்றில் கோடையில் வெயில் மிகக் கடுமையாகவே இருக்கும். சகாராவில் (லிபியா நாட்டில் உள்ள அசிசியா எனும் நகரில்) சாதனையாக - கோடைகாலத்தில் - 136 டிகிரி பரன்ஹைட் வெயில் பதிவாகியது. எனினும் இப்படி வெயில் அடிக்கிற பாலைவனங்களில் கோடைக்காலமாக இருந்தாலும் இரவு நேரங்களில் கடும் குளிர் நிலவும். அதற்குக் காரணங்கள் உண்டு. காற்றில் ஈரப்பசை இல்லாததால் பகலில் அடித்த வெயிலின் வெப்பத்தைக் காற்றினால் இருத்தி வைத்துக் கொள்ள முடிவதில்லை. தவிர, பாலைவன மணல் விரைவில் வெப்பத்தை இழந்து விடுகின்றது. பாலைவனங்களில் வானில் மேகங்கள் அனேகமாக இராது என்பதால், தரையிலிருந்து வெப்பம் எளிதில் உயரே சென்று விடுகின்றது. உங்கள் ஊரிலும் சரி, நல்ல குளிர் காலத்தில் வானில் மேகமூட்டம் இருந்தால் குளிர் அவ்வளவாக இராது. வானம் மிகத் தெளிவாக இருந்தால் குளிர் நன்றாகத் தெரியும். வெயில் காலத்தில் இதே போல வானில் மேகங்கள் இருந்தால் புழுக்கம் அதிகமாகத் தெரியும்.

சகாரா போன்ற பாலைவனங்களுக்கு நேர் மாறாக எப்போதும் கடும் குளிர் வீசுகின்ற பாலைவனம் உண்டு. இதற்கு உதாரணம் தென் துருவப் பகுதியில் அமைந்த அண்டார்டிகா கண்டத்தில் உள்ள பாலைவனமாகும். இது எப்போதும் பனிக்கட்டியால் மூடப்பட்ட பிராந்தியமாகும். இங்கு பனிப்பொழிவு குறைவு. சகாராவில் புழுதிப் புயல் வீசுவது போலவே இங்கு பனிப் புயல் வீசும். இப்படியான பனிப்புயலின் போது நுண்ணிய பனித் துகள் ஊசி குத்துவது போல தாக்கும். தரையில் உறைந்த பனிக்கட்டியில் பள்ளம் தோண்டி, அதில் பதுங்குவதைத் தவிர வேறு வழியில்லை.

பெரும்பாலான பாலைவனங்களில் சிறு பிராணிகள் வசிக்கத்தான் செய்கின்றன. இவை பகலில் வெயிலின்போது எங்காவது ஒண்டிக்கொள்ளும். இவற்றில் சில, கொஞ்சநஞ்ச ஈரப்பசையை தங்களுக்கு வேண்டிய நீராக மாற்றிக் கொள்ளும் திறன் படைத்தவை.

பாலைவனங்களில் எப்படியாவது சமாளித்துக் கொள்ளும் திறன் படைத்த தாவரங்களும் உள்ளன. பாலைவனங்களில் காணப்படும் சில பூண்டு வகைத் தாவரங்களின் வேர்கள் நிலத்துக்கு அடியில் பக்கவாட்டில் சில நூறு மீற்றர் தூரம் வரை செல்லும். அமெரிக்காவில் அரிசோனா, மெக்சிக்கோ ஆகிய இடங்களில் பரவி அமைந்த பாலைவனத்தில் சவோரா என்னும் கற்றாழை வகைத் தாவரம் சுமார் 50 அடி உயரம் வரை வளரக்கூடியது. ஆக, பாலைவனம் என்பது உயிரற்ற ஒன்று அல்ல.



> ஏழ்கட லோடியுமோர் –பயன்
> எய்திட வழியின்றி இருப்பதுவும்,
> வீழ்கஇக்கொடு நோய்தான் – வைய
> மீதினில் வறுமையோர் கொடுமை யன்றோ?
> – சுப்பிரமணிய பாரதியார்

# பாப்பா முரசு

# நியாயம்!

**உத்தமன்,** அதமன் இருவரும் அண்ணன் தம்பிகள். ஒரு நாள் இருவரும் தாய் தந்தையிடம், எங்களுக்கு வாலிப வயதாகி விட்டது. நாங்கள் கிணற்றுத் தவளையாக இந்தக் கிராமத்திலேயே இருக்க விரும்பவில்லை. நாங்கள் நாடு, நகரங்களை சுற்றிப் பார்த்து பல விஷயங்களை அறிந்து வர ஆசைப்படுகிறோம். எங்களை மகிழ்ச்சியோடு அனுப்பி வைக்க வேண்டும் என்றனர்.

உத்தமா! அதமா! உங்களை வெளியிடங்களுக்கு அனுப்பி வைக்க எங்களுக்கும் மகிழ்ச்சிதான். ஆனால் உத்தமனோ பொறுமைசாலி. எதையும் தீர்க்க ஆராய்ந்து முடிவெடுப்பான். அவனால் எந்த பிரச்சினையும் ஏற்படாது. நீயோ மூர்க்கன் உன் மூக்கின் மீது கோபம் உட்கார்ந்து கொண்டிருக்கும். வெளியிடம் போனால் பொறுமை வேண்டுமடா மகனே. அப்போதுதான் நல்லபடியாக ஊர் திரும்ப முடியும் இல்லையெனில் சமயத்தில் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டு விடுமடா அதமா அதனால்தான்டா எங்களுக்குப் பயமாக இருக்கிறது என்றனர்.

அம்மா என்னைப் பற்றி கவலைப்படாதேம்மா என்னை காப்பாற்றிக்கொள்ள எனக்குத் தெரியும். எங்களை மறுக்காமல் அனுப்பி வையுங்கள் என்றான் அதமன்.



நல்ல நாளில் உத்தமனும், அதமனும் தங்கள் கிராமத்தை விட்டு கிளம்பி குதிரையில் பயணத்தைத் தொடர்ந்தனர். பகல் முழுவதும் பயணம் செய்து இரவு நேரத்தில் ஒரு நகரத்தின் சத்திரத்தை அடைந்தனர்.

சத்திரக் காவல்காரனை அணுகி, ஐயா இரவு தங்க சத்திரத்தில் இடம் வேண்டும் என்றான் உத்தமன். சத்திரக் காவல்காரனோ சத்திரம் நிரம்பி விட்டது. இங்கு இடமில்லை. வேறு இடம் போய் பாருங்கள் என்றான்.

என்னடா அதமா இப்படி மூர்க்கமாக பதில் சொல்கிறானே காவல்காரன்? என்றான் உத்தமன் வருத்தத்துடன்.

இரு அண்ணா சிறிது நேரம் பார்க்கலாம் என்றான் அதமன்.

ஏன்யா நான்தான் இடமில்லை என்று கூறிவிட்டேனே. இன்னும் ஏன் நிற்கிறீர்கள். இடத்தை காலி செய்யுங்கள். இல்லையெனில் வீரர்களை விட்டு குதிரைகளை விரட்டி விடச் சொல்லுவேன். அப்புறம் குதிரைகள் பின்னாடி தான் நீங்கள் ஓடவேண்டும் எனக் கூறிச் சிரித்தான் காவல்காரன்.

அதே நேரம் இரண்டு வியாபாரிகள் சத்திரக் காவல்காரனை நெருங்கினர். ஐயா சத்திரத்தில் தங்க இடம் வேண்டும் என்றனர்.

இடம் காலி இல்லையே என்றான் காவல்காரன். உடனே வியாபாரிகள் இடுப்பிலிருந்த கச்சையை அவிழ்த்து சில பொற்காசுகளை எடுத்து காவல்காரன் கையில் கொடுக்க, சிரித்தபடியே வாங்கியவன் பணியாளைக் கூப்பிட்டு, டேய் அய்யாமார்களை உள்ளே கூப்பிட்டுப் போய் நல்லா கவனிங்கடா என்றான். அதோடு நின்றால் கூட பரவாயில்லை உத்தமனையும், அதமனையும் பார்த்து ஏளனமாகச் சிரித்தான்.

அதமனுக்கு கோபம் மூக்கின் மீது எகிறியது. ஏன்யா இது அரசாங்க சத்திரம். இலவசமாக தங்க அனுமதின்னு போர்டு வச்சிட்டு தங்க இடமில்லைன்னு எங்கள விரட்டிட்டு வேறு ஆளுக்கு லஞ்சம் வாங்கிக் கொண்டு தங்க அறை விடுகிறாயா? உன்னை சும்மா விடமாட்டேன் என்று கத்தியபடியே காவல்காரன் சட்டையை பிடித்து உலுக்க ஆரம்பித்தான்.

காவல்காரன் குய்யோ முறையோவெனக் கத்த, போவோர், வருவோர் கும்பல் கூடிவிட, அச்சமயம் அங்கு வந்த அரசாங்க ஊழியர்கள் சத்திர காவல்காரனையும், உத்தமனையும், அதமனையும் அரசாங்க நீதி மன்றத்திற்கு அழைத்துச் சென்றனர்.

நீதிமன்ற அதிகாரிகள் வீரர்களிடம், என்ன

**பாப்பா முரசு சிறுகதை**

வழக்கு? என விசாரிக்க, அதமன் சத்திரக்காரனை அடிக்கப் போன விஷயத்தை வீரர்கள் சொன்னார்கள்.


உத்தமனிடம் என்ன நடந்தது என கூறும்படி கேட்க கோபமாக உத்தமன் நடந்ததையெல்லாம் ஒன்று விடாமல் கூறினான்.

அதமா நீ செய்ததில் தவறே இல்லை! இந்த காவல்காரன் சத்திரத்திற்கு வருவோரிடம் கையூட்டுப் பெற்றுக்கொண்டு தங்க அனுமதிப்பதாக எங்களுக்கு ஏற்கனவே நிறைய தகவல் வந்தது. ஆனால் காவல்காரனை கண்டித்ததோடு இல்லாமல் பயப்படாமல் அவனுடன் நேர்மையாக போராடியிருக்கிறாய். உன்னை மாதிரி நேர்மையான ஆட்கள்தான் அரசாங்க ஊழியத்திற்குத் தேவை. எனவே நாளை முதல் சத்திரக்காவலன் பொறுப்பை நீயே ஏற்றுக்கொள். உன் அண்ணன் உத்தமன் பொறுமையாகவும், நேர்மையாகவும் இருப்பதால் அரசாங்க கஜானாவிற்கு அதிகாரியாக நியமிக்கிறோம் என உத்தரவிட்டனர்.

காவல்காரன் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். உத்தமனும், அதமனும் மகிழ்ச்சியில் தங்கள் தாய், தந்தையரை நகரத்திற்கு வர வழைத்தனர்.

உத்தமா பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு! அது மீறப்படும் போது நியாயத்துக்காக போராடுவதில் தவறில்லை. அதமன் அதைத்தான் செய்திருக்கிறான். அதமா நீ செய்தது சரிதான். வாய் உள்ள பிள்ளைதான் பிழைக்கும் என்பதை நன்றாகவே நீ நிரூபித்து விட்டாய். உங்கள் இருவரையும் பிள்ளையாகப் பெற்றதற்கு நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும் எனக் கூறி மகிழ்ந்தனர் பெற்றோர்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 24.04.2007

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 690**
தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 688

**பரிசுக்குரியவர்:**
கா. பிரசாந்தி
பாபாபதி இல்லம் 89, ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| முஸ்னா றஷிகா, தரம் -6சி, ம/மூத் மகளிர் கல்லூரி, கல்முனை -07 | க.ஹரினி, 19, பன்சல வீதி, இராகலை, ஆள்கரனோயா. |
| டி.ஆர்.ஆன். டிலுக்ஷி, 82, புதுச்செட்டித்தெரு, கொழும்பு -13 | ந.சுஜீதா, இல.42, பிரதான வீதி, வத்தளை. |
| ஆ.ஜெயதீபன், தரம்-6, மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம், பாசிக்குடா. | அருண்பிரசாந் ரெங்கராஜ், இல.04A, பிரதான வீதி, கலஹா 20420. |
| எம்.வதனா, கடற்கரை வீதி, புத்தளம். | எஸ்.கவிதா, மாறம்பைக்குளம் வவுனியா. |

# ஆத்திசூடி


## பெரியாரைக் கணைக்கொள்

**நீ அறிவு சார்ந்த ஒழுக்க சீலர்களைக் கணையாகக் கொண்ட ஐயங்களை அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு தெளிந்து வாழ்கையில் கடைப்பிடி.**

–ஔவையார்

*எஸ். நிரஞ்சலா, கண்டி.*

# ஒன்பது கிரகம்



**ஈர்ப்பு** சக்தியால் நவகிர கத்தை
இயக்கும் கிரகம் சூரியனாம்!
ஆர்ப்பரிக்கும் சூரியனை
அழகாய் பார்ப்பது புதனதுவாம்
வார்ப்பு வெள்ளி அதையடுத்து
இரண்டாம் இடத்தில் இருப்பதுவாம்!
ஏற்புடைய பூமியதோ
மூன்றாம் இடத்துக் கிரகம்தாம்!
கார்ப் புழுதி புயல் வீசும்
செவ்வாய் கிரகம் சிறியதுவாம்!
ஓர் கிரகம் வியாழனது
ஒளிபிர காசம் உடையதுவாம்!
மேற்படி கிரகம் அடுத்ததுதான்
வெளிவளைய முள்ள சனியாகும்!
நீர்ப்புடைய புளூட்டோவோ
நிரம்ப உள்ள பனிக் கோளம்!
கோர்ப்பான் யூரேனஸ்
மீதேன் வாயு உள்ளதுவாம்!
சீர்ப்பு மிகுந்த வாயுரூபம்
சிறப்பாய் கொண்டது நெப்டியூனாம்!
பார்க்கப் பார்க்க பரவசமாம்
படைப்பின் அதிசயம் நவக்கிரகம்
படித்து அறிவோம் குழந்தைகளே
படிப்பினை தருவது நவகிரகம்!

# உலக அதிசயம்

## விலையுயர்ந்த வயலின்




**17ஆம்** நூற்றாண்டில் இத்தாலியில் தயாரிக்கப்பட்ட வயலின் ஒன்று 1988ஆம் ஆண்டு ஏலத்தில் விடப்பட்டது. அப்போது இந்த வயலின் ஒரு கோடியே 11 லட்சத்து 59 ஆயிரத்து 400 அமெரிக்க டாலர்களுக்கு ஏலம் போனது. (ஒரு டாலரின் மதிப்பு அன்றைய காலகட்டத்தில் 45 ரூபாய் என்றால் மொத்தம் எவ்வளவு மதிப்பு என்பதை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள். உலகிலேயே அதிக விலைக்கு ஏலம் போன வயலின் இசைக்கருவி இதுதான்.) இன்று வரை இதன் சாதனையை வேறு எந்த இசைக் கருவியாலும் முறியடிக்க முடியவில்லை.

## அடடே...



**ஹொங்கொங்** பொலிஸுக்கென்று விசேஷ உடை உண்டு. இவர்கள் இரண்டு விதமான உடைகளை அணிகிறார்கள். கோடை காலத்தில் இளம் பச்சை நிறத்திலும் குளிர்காலத்தில் நீலநிறத்திலும் சீருடை அணிகிறார்கள். ஆங்கிலம் பேசத் தெரிந்த பொலிஸ்காரர்கள் தங்களின் உடையில் சிவப்பு நிற பட்டையைச் சேர்த்து பொருத்தியிருப்பார்கள். சிவப்பு நிற பட்டை இல்லாதவர்களுக்கு சீன மொழியைத் தவிர வேறு எந்த மொழியும் தெரியாது.

## பைசாதான்!




**நமது** நாட்டில் தபால் அட்டை 1879ஆம் ஆண்டு அறிமுகம் ஆனது. அன்றைய இந்திய போஸ்ட் ஆபீஸ்ஜெனரலாக இருந்த மான்டியத் என்ற ஆங்கிலேயர்தான் தபால் அட்டையை கொண்டுவந்தவர். அன்றைய நாளில் தபால் அட்டையின் விலை 3 பைசாதான். வெளியிடப்பட்ட 9 மாதங்களில் 80 லட்சம் தபால் அட்டைகள் விற்றுத் தீர்ந்தன. அப்போது இந்திய மக்கள் தொகை 12 கோடிதான்.

## வெட்டுக்கிளி உணவு



**ஆபிரிக்க** நாடுகள் சிலவற்றில் வறுக்கப்பட்ட வெட்டுக்கிளி உணவுகள் மக்களால் விரும்பிச் சாப்பிடப்படுகின்றன. தாய்லாந்து மக்கள் கரப்பான் பூச்சி பொரியல் சாப்பிடுகிறார்கள். மொராக்கோ, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் வசிக்கும் பழங்குடி மக்கள் வெட்டுக்கிளி சீசனின் போது அவற்றை மொத்தமாக வேட்டையாடி பொரித்து தேனுடன் கலந்து சாப்பிடுகிறார்கள்.

## ஞாபக மன்னன்




**சீனாவைச்** சேர்ந்த நேன்யாங் என்பவர் சீனாவில் குறிப்பிட்ட சிலரது பெயர்களையும் ஊரையும் சொல்லி டெலிபோன் நம்பர் கேட்பவர்களிடம் நம்பரைச் சர்வசாதாரணமாகச் சொல்லி விடுகிறார். இவருக்கு 15 ஆயிரம் டெலிபோன் நம்பர்களும் அந்த நம்பர்களுக்குரிய முகவரியும் அத்து படி என்பது இதில் ஆச்சரியம் தரும் விஷயம்.

# சில விடுகதைகள்

1. காலையில் அண்ணனும் இரவில் தம்பியும் வருவார்கள் அவர்கள் யார்?
2. நான் சொன்னதையே எனக்கு திருப்பி சொன்னான் அவன் யார்?
3. பூ பிஞ்சானது காயானது ஆனால் கனியாகவில்லை அது என்ன?
4. தடி போல் வளர்ந்தான் கடித்தபோது இனித்தான் அவன் யார்?
5. மூலையில் கிடந்தாலும் முழு சுத்தத்துக்கும் அவன்தான் பொறுப்பாளி அவன் யார்?
6. உப்பைத் தின்றவன் உறங்காமல் திரிகிறான் அவன் யார்?
7. ஏறுவான் இறங்குவான் வாழ்க்கைத் தத்துவம் சொல்வான் அவன் யார்?
8. தோட்டா இல்லாமலே வெடிப்பான் திம்மப்பன் அவன் யார்?
9. கறுப்பன் வெள்ளையான போது கண்டதில்லை அப்படியொரு வருத்தம் அது என்ன?
10. நிறுத்தாமல் ஓடிக்கொண்டிருப்பான் நின்று போனால் திரும்ப வரமாட்டான் அவன் யார்?

**விடைகள்**
1. சூரியன் - சந்திரன்
2. எதிரொலி
3. பஞ்சு
4. கரும்பு
5. துடைப்பம்
6. கடல்
7. ராட்டினம்
8. தும்மல்
9. தலைமுடி
10. உயிர்





**மேற்கத்தேய** நாடுகளில் சீஸ் கட்டிகளைக் கொண்டு சீஸ்பார்க்கர் என்ற உணவுப் பண்டத்தைத் தாயரிக்கிறார்கள். உலகிலேயே அதிக எடை கொண்ட சீஸ்பார்க்கர் என்ற உணவுப் பண்டம் அமெரிக்காவின் நியூஜெர்ஸி என்ற மாநிலத்திலுள்ள கிறிண்டன் இரவு போசன சாலையில் சமைக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது. இதன் எடை 105 இறாத்தல்களாகும். இதுவே இதுகாலவரை உலகில் தயாரிக்கப்பட்ட அதிக எடைகொண்ட சீஸ்பாக்கர் என்பது குறிப்பிடத்தக்கது.




**சாண்டி** அலன் என்ற குழந்தை பிறந்தபோது அதன் எடை 6.5 இறாத்தல். 1955ஆம் ஆண்டு ஜுன் மாதம் 5ஆம் திகதி பிறந்த சாண்டி அலன் படபடவென வளரத் தொடங்கினார். இவருக்கு 10 வயதானபோது அவரது உயரம் 6 அடி 3 அங்குலம். அவருக்குப் 16 வயதானபோது 7 அடி 1 அங்குலம் வரை வளர்ந்து விட்டார். அவருக்கு கல்யாணப் பொருத்தம் என்பதும் பிரச்சினையாகவே இருந்தது. 1974ஆம் ஆண்டு உலக சாதனை நூலான கின்னஸை வெளியிடும் நிறுவனத்திற்கு முதல் முறையாக கடிதம் ஒன்றினை எழுதினார். கிட்டத்தட்ட எனது உயரமுள்ள ஒரு ஒருவரை சந்திக்க நான் விரும்புகிறேன். எனது வாழ்க்கை நடைமுறையில் அர்த்தமற்றுப் போயிருக்கிறது. எனது உயரம் குறித்து நீங்கள் வெளியிடும் தகவல் சில வேளைகளில் என் வாழ்க்கையை பிரகாசமடையச் செய்யலாம்" என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அமெரிக்காவின் இந்தியானா மாநிலத்தில் காரியதரிசியாகப் பணியாற்றி வந்த இந்தப் பெண்மணிக்கு கடிதம் வெளியானதையடுத்துப் பல அதிர்ஷ்டங்கள் தேடி வந்தன. திரைப்பட இயக்குநர் பெடரிக்கோ பெலினி 1975ஆம் ஆண்டு தனது கனனோவா என்ற படத்தில் நடிப்பதற்கு இவருக்குச் சந்தர்ப்பம் வழங்கினர். இன்லினொய்ஸ் மாநிலத்தைச் சேர்ந்த 7 அடி மனிதர் ஒருவரைச் சந்தித்து அவருடன் காதல் வசமானார். 1977ஆம் ஆண்டு ஜுலை 17ஆம் திகதி தனது வளர்ச்சியைக் குறைக்கும் நோக்குடன் வைத்தியசாலையொன்றினை நாடினார். இப்போது இரத்தோட்டக் குறைவினாலும் கால் தசைகள் பலவீனமடைந்ததாலும் சக்கர நாற்காலியொன்றில் வாழ்நாளை கழித்துக் கொண்டிருக்கிறார்.




**உலகிலேயே** மிகப் பெரிய பட்டை தீட்டப்பட்ட இரத்தினக் கல் பெல்ஜியத்திலுள்ளது. சிறிய சிவப்பு இரத்தினக் கற்களைக் கொண்ட இதன் எடை 555.55 கரட்டுகளாகும். பல வருடங்கள் எடுக்கப்பட்ட முயற்சியின் பேரில் 2004 ஆம் ஆண்டு ஜுன் மாதம் பட்டை தீட்டி முடிக்கப்பட்டது. சமய, சாத்திர நம்பிக்கை கொண்டவர்கள் குறித்த நிறம் கொண்ட இரத்தினக் கற்களை அணிந்தால் தமக்கு அதிர்ஷ்டம் கிட்டும் என்று நம்புவது வழக்கம். இப்படி நம்பிக்கை கொண்டவர்கள் கீழைத்தேய நாடுகளில் மட்டுமல்ல மேற்கு நாடுகளிலுமுள்ளனர். இதனால் பெல்ஜியத்திலுள்ள இந்த இரத்தினக் கல்லின் உரிமையாளரான ரான் கொரன்ஸ்ரீனிடமிருந்து இந்த இரத்தினக் கல்லைப் போட்டி போட்டுக் கொண்டு வாங்க பலர் முனைந்த போதும், இன்று வரை அவர் அதனை விற்கவில்லை.




**எங்கள்** நாட்டில் ஒரு கிலோ எலுமிச்சம்பழம் வாங்கினால் அதில் 30 - 40 காய்கள் வரை இருக்கும். உலர் வலயப் பிரதேசங்களில்தான் எலுமிச்சை மரங்கள் பயிரிடப்படுகின்றன. இஸ்ரேலிலுள்ள கெபார் செய்ரிம் என்ற பண்ணையில் விவசாயி ஒருவர் 5.265 கிலோ (11 இறாத்தல் 9.7 அவுன்ஸ்) எடையுள்ள எலுமிச்சம் பழம் ஒன்றை 2003 ஆம் ஆண்டு ஆய்ந்தெடுத்தார். அதாவது, எமது நாட்டில் எலுமிச்சம் பழங்களோடு ஒப்பிட்டால் கிட்டத்தட்ட 200க்கு மேற்பட்ட எலுமிச்சம் பழங்களை இந்த பெரிய எலுமிச்சம் பழத்திற்கு சமனான எடையுள்ளதாக வைக்க முடியும். அகாரோன் செமோயல் என்ற பெயரிலுள்ள இந்த விவசாயியிடமிருந்து குறித்த எலுமிச்சம் பழத்தை அதிக விலை கொடுத்து வாங்குவதற்கு பலர் போட்டி போட்டுக் கொண்டு முன் வந்தனர். அகாரோனின் வீட்டில் வைக்கப்பட்ட எலுமிச்சம் பழத்தைப் பார்ப்பதற்கு ஆயிரக் கணக்கில் மக்கள் திரண்டனர். இறுதியில் இந்த எலுமிச்சம் பழத்தை நூற்றுக்கு மேற்பட்ட துண்டுகளாக வெட்டி அயலவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார் அந்த விவசாயி.

**உலகிலேயே** அதிக நீளமான நாகபாம்பு மலேசியாவில் 1987 ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. இந்த நச்சுப் பாம்பு பிடிக்கப்பட்ட போது அதன் நீளம் 18 அடி 2 அங்குலமாக இருந்தது. இந்த ராஜ நாகம் லண்டனிலுள்ள மிருகக் காட்சிச் சாலைக்குக் பின்னர் கொண்டு சென்று வைக்கப்பட்டது. மிருகக்காட்சிச் சாலையிலிருந்தபோது இது மேலும் 7 அங்குலம் நீளத்திற்கு வளர்ந்தது. இந்தப் பாம்பு இறந்த போது அதன் நீளம் 18 அடி 9 அங்குலமாக இருந்தது. தாய்லாந்தின் தலை நகரான பாங்கொக்கிலுள்ள குத்துச் சண்டை மேடையொன்றில் ராஜ நாகம் ஒன்றுடன் மனிதன் ஒருவன் சண்டை போடுவதைப் படத்தில் காணலாம்.





ஜெய்வர்மா - மேனகை
தீக்குச்சி

# "நானா ரொம்ப கூல்யா" – ஸ்ரேயா சிலிர்ப்பு!

**இந்த** நடிகைகளையே நம்ப முடியாது. உள்ளூரில் ஒன்று சொல்வார்கள். அதையே வெளியூரில் வேறொன்றாக திரித்து விடுவார்கள். ஸ்ரேயா இதில் செம கில்லாடியாக இருப்பார் போல.


சின்ன கேப் கிடைத்தாலும் சிவாஜி, ரஜினி, ஷங்கர் என்று ஓயாமல் பரவசப்படுகிறார் ஸ்ரேயா. ரஜினியின் ஸ்டைல், எளிமை, பணிவு, நேரந் தவறாமை, நடிப்பு என்று அக்கு வேறு ஆணி வேறாக பிரமிக்கிறார். ஆனால் இதெல்லாம் தமிழக எல்லையை தாண்டும் வரைதான். ஹைதராபாத்துக்கோ, மும்பைக்கோ பிளைட் ஏறினால் ரஜினி போயே போச்! அந்த இடத்தில் நானா உட்கார்ந்து கொள்கிறார்.

நானா? அட, வேறு யாருமில்லை. நம் நானா படேகர்தான்! தெலுங்கு அடுத்த படம் இந்தியில் தயாராகிறது அல்லவா? அதில் ஸ்ரேயா, பாபி தியோலுடன் நானா படேகரும் நடிக்கிறார்.

நானா ரொம்ப கோவக்காரரு, கண்ணாலே பஸ்பமாக்கிடுவார் என்றெல்லாம் யாரோ ஸ்ரேயாவை பயமுறுத்தியிருக்கிறார்கள். மாறாக நானா படு கூல்! யாருக்கும் எந்த தொந்தரவும் தருவதில்லை. தானுண்டு தன் நடிப்புண்டு என்று நடையை கட்டுகிறார். ஸ்ரே யாவிடம் தனிப் பாசம். நடிப்புக்கு டிப்ஸ் எல்லாம் கொடுத்திருக்கிறார்.

இதனால் பயம் தெளிந்த ஸ்ரேயாவிடம் இப்போது முழுக்க பரவசம். நானா செம கூல்யா என்று குதிப்பவர், யாரும் கேட்காமலே நானா படேகர் புகழ் பாடி வரு கிறார். அழுத்தி கேட்டால் மட்டுமே சிவாஜி பற்றியும் ரஜினி குறித்தும் பேசுகிறார்.

இந்தி படமே இந்திய படம், தமிழ் படம் தென்னிந்திய படம், ரஜினி தமிழ் சூப்பர் ஸ்டார், நானா இந்திய சூப்பர் ஸ்டார் என்று ஸ்ரேயா வும் தவறாக நினைத்து விட்டாரா?




ரஜனி - ஸ்ரேயா
சிவாஜி

---

பாபாவை போலவே சிவாஜியையும் அவ்வளவு சுலபமாக விடமாட்டார்கள் போலிருக்கிறது.

---

# பிரெஞ்ச், ஆங்கில மொழிகளில் 'பெரியார்'

**படத்திற்கு** சென்ஸார் முடிந்துவிட்டது. பாடலுக்கு தடைகோரிய வழக்கும் தள்ளுபடியாகிவிட்டது. இன்னும் ஏன் பெரியார் படத்தை வெளியிடாமல் தாமதம்? லட்சக்கணக்கான பெரியார் ஆதரவாளர்களின் கேள்விக்கு, தயாரிப்பாளர் தரப்பிலிருந்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. பெரியாரின் வாழ்க்கை உலகம் முழுவதும் உள்ளவர்கள் அறிந்து கொள்ளவேண்டியது. அதனால், பிரெஞ்ச் மற்றும் ஆங்கில உரையாடலுடன் சில பிரிண்டுகள் போடப்படுகின்றன. அதற்கான வேலைகள் நடந்து வருகின்றன. மேலும் இந்தி, மராட்டி, தெலுங்கு மற்றும் மலையாள மொழிகளில் பெரியார் டப் செய்யப்படுகிறது. இந்த வேலைகள் முடிய ஒரு மாதத்திற்கு மேல் ஆகும். இதுவரை இல்லாத அளவுக்கு பல்வேறு மொழிகளில் தமிழ் படமான பெரி யார் வெளியாகவிருப்பது சாதனை. இதனால், பட வெளியீட்டை மே25ஆம் திகதிக்கு மாற்றி வைத்துள்ளனர். மே25ஆம் திகதி உலகம் முழுதும் பெரியார் ரிலீஸாகிறது.

படத்தை கருணாநிதி கி.வீரமணி உள் ளிட்ட பல வி.ஐ.பி.கள் பார்த்துள்ளனர். இது படமல்ல. ஆவண பெட்டகம் என்ற பாராட்டு அனைவரிடமிருந்தும் கிடைத்து வருகிறது. அதேபோல் பெரியாராக நடித்திருக்கும் சத்யராஜுக்கும் பாராட்டு குவிகிறது.

இடைவேளை வரை பெரியாராக நடித்திருக்கிறார். இடைவேளைக்குப் பின் பெரியாராக வாழ்ந்திருக்கிறார் என சத்யராஜை பாராட்டியுள்ளார் பாட லாசிரியர் வைரமுத்து. படம் வந்தால் இன்னும் பெரியாளாகிவிடுவார் சத்யராஜ்!

---



கரண் - உதயதாரா
கறுப்புசாமி குத்தகைக்காரன்

# நல்ல விலைக்குப் போன படம்

**நான்** அவனில்லை படம் நல்ல விலைக்கு வியாபாரமாகியுள்ளது. ஜீவன் நாயகனாக நடிககும் இப்படத்தில் அவருக்கு ஜோடியாக சினேகா, மாளவிகா, நமீதா, கீர்த்தி சாவ்லா, ஜோதிர்மயி என ஐந்து நாயகிகள் நடிக்கிறார்கள். ஜெமினிகணேசன் நடித்த பழைய படமான நான் அவனில்லை படத்தைச் சிறிய மாற்றம் செய்து டைரக்டர் செல்வா இயக்குகிறார்.

---

# கற்பழிப்பு காட்சியில் நடிக்க மறுத்த வில்லன் நடிகர்

**பூவிழி** வாசலிலே, அஞ்சலி படங்களில் கலக்கிய வில்லன் நடிகர் பாபு ஆண்டனி கற்பழிப்பு காட்சிகளில் நடிக்க மறுக்கிறார். இதுபோன்ற வக்கிர காட்சிகளில் லட்சம் லட்சமாய் கொடுத்தாலும் நடிக்க மாட்டேன் என்று அழுத்தமாகச் சொன்னார்.

தமிழ்,தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னட மொழிகளில் 165 படங்களில் நடித்துள்ள இவர், மலையாளத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார். ஆபரான்னம், ஹைவே போலீஸ், கே.கே.ரோடு என இவர் ஹீரோவாக நடித்த பல மலையாளப் படங்கள் ஹிட்டாகியுள்ளார். தற்போது என்ற சிங்கள படத்தில் நடிக்கிறார். ரஜினி முதல் அஜீத் வரை முன்னணி ஹீரோக்களுடன் நடித்துள்ளார். தமிழில் நல்ல சப்ஜெக்ட் படங்களில் வில்லனாக நடிக்க விருப்பப்படும் இவருக்குப் பிடித்த வில்லன் நடிகர் பிரகாஷ்ராஜ்.

---

**எங்கிருக்கிறார்** என்பதே தெரியாத அளவுக்கு சைலண்டாக இருக்கும் ஸ்ரீகாந்த் அதைவிட சைலண்டாக படம் ஒன்றை தயாரிக்கிறார்.

---

**பட** அதிபர் காஜாமைதீன் தம்பி மகன், கனி கதாநாயகனாக அறிமுகமாகிறார். இவர் நடிக்கும் படத்தை மதுரவன் இயக்குகிறார். இவர் ஏற்கனவே பூ மகள் ஊர்வலம் என்ற படத்தை டைரக்ட் செய்தவர். நடிப்பில் திறமை காட்ட டான்ஸ் கற்று வருகிறார் கனி.





---

# 'கெட்டப்' மாறும் எஸ்.ஜே.சூர்யா

**நியூ,** கள்வனின் காதலி படங்களில் பிளேபாய் ஆக வந்த எஸ்.ஜே.சூர்யா திருமகனில் கிராமத்து கெட்டப்புக்கு மாறினார். அடுத்து வியாபாரி படத்தில் பிசினஸ்மேன் வேடம் ஏற்றுள்ளார். எதற்கு அதிக வரவேற்பு இருக்கிறதோ அதே இமேஜில் தொடர்ந்து நடிப்பதென்ற முடிவில் இருக்கிறாராம்.

---

# சி னி வி சி ட்

**பரத்தின்** 'கூடல் நகர்' தணிக்கையாகி 'யூ' சான்றிதழ் பெற்றுள்ளது. இப்படத்தைத் தயாரிக்கும் அண்ணாமலை பிலிம்ஸின் முந்தைய படமான பம்பரக்கண்ணாலே படமும் யூ சர்டிபிகேட்டே வாங்கியது.



தனுஷ் - மீராஜஸ்மின்
பரட்டை

# காதல் மன்னன்

**'காக்க** காக்க' வில்லனாக வந்து 'திருட்டு பயலே' படத்தில் ஹீரோ அந்தஸ்துக்கு உயர்ந்த ஜீவன் தற்போது 'நான் அவனில்லை'படத்தில் சினேகா, மாளவிகா, நமீதா, ஜோதிர்மயி கீர்த்தி சாவ்லா என ஐந்து நாயகிகளுடன் நடிக்கிறார்.

இவரை காதல் மன்னன், பிளேபாய் என்றெல்லாம் முணுமுணுக்கின்றனர். இதுபற்றி ஜீவனிடம் கேட்டால் மறுக்கிறார். எனக்கு இதுபோன்ற இமேஜ் உருவாக்குவது தவறு. திருட்டு பயலே படத்தில் பிளேபாயாக வரவில்லை. சமூகத்தால் கெட்டுப்போகிற கேரக்டராகத்தான் நடித்தேன். நான் அவனில்லை படத்திலும் அப்படித்தான் நடிக்கிறேன். காதல் மன்னன் என்பதெல்லாம் நிஜமல்ல என்றார்.

---

**பாக்யராஜுடன்** ஜித்தன் ரமேஷும் இணைந்து ஒரு படத்தில் நடிக்கின்றனர். கவிகாளிதாஸ் இயக்குகிறார். இவர் ஏற்கனவே அஜித் நடித்த உன்னைக் கொடு என்னைத் தருவேன் படத்தை டைரக்ட் செயதவா.

---


**ஜீவா,** பாவனா ஜோடியாக நடிக்கும ராமேஸ்வரம் படம் முழுக்க முழுக்க ராமேஸ்வரத்திலேயே படமாககப்படுகிறது. செலவம் இயக்குகிறா. ஜித்தன ரமேஷின் இன்னொரு படமான புலி வருது காரைக்குடியில் படமாக்கப்படுகிறது. இந்த மாதம படப்பிடிப்பு தொடங்குகிறது. ஜி.வி.குமார் இயக்குகிறார்.

---

**சிவாஜிக்காக** அனைவரும் ரிலீஸ் திகதியை தள்ளி வைக்க, கிரீடம் படம் மட்டும் சிவாஜி வெளியாகும் மாதம் தைரியமாகத் திரைக்கு வருகிறது.



ரஜனி - ஸ்ரேயா
சிவாஜி



## கிரிக்கெட் வீரர்கள் கதை சென்னை - 28

**எஸ்.பி.பாலசுப்பிரமணியம்** வழங்கும் கேபிடல் பிலிம் ஒர்க்ஸ் சார்பில் எஸ்.பி.சரண், ஜே.கே.சரவணா தயாரிக்கும் புதிய படம். சென்னை 600028.

விஜயகுமார், கார்த்திக், நித்தின் சத்யா, ஜெய், சிவா, பிரேம்ஜி, அஜய்ராஜ், அருண், பிரசன்னா, ரஞ்சித், ரிங்கு, விஜயலட்சுமி, கிறிஸ்டன், ஜடக், இனிகோ, பிரகாஷ், ராஜீவ் சுந்தர், சம்பத்குமார், இளவரசு, எஸ்.என்.சுரேந்தர் ஆகியோர் நடிக்கி றார்கள். வெங்கட் பிரபு இயக்குகிறார்.

கிரிக்கெட் வீரர்கள் பற்றிய கதையை மையமாக வைத்து இப்படம் தயாராகிறது. தென் சென்னை, வடசென்னை ஆகிய பகுதிகளில் வசிக்கும் இரண்டு கிரிக்கெட் அணிகளில் நடைபெறும் நிகழ்வுகளே இப்படம். எட்டு பாடல்கள் படத்தில் உள்ளன.

காதல், ஆக்ஷன், செண்டிமெண்ட் அனைத்தும் கலந்த கலவையாக இப்படம் எடுக்கப்பட்டிருப்பதாக வெங்கட் பிரபு தெரிவித்தார். இசை : யுவன்சங்கர் ராஜா. ஒளிப்பதிவு : சக்தி சரவணன், பாடல்கள் : கவிஞர் வாலி, கங்கை அமரன், எடிட்டிங் பி.லெனின், நடனம் : கல்யாண சண்டைப் பயிற்சி : சுந்தர்.



த்ரிஷா

# 'பருத்தி வீரன்' நாயகிக்கு விருந்து! கூடவே கொஞ்சம் அட்வைஸும் கொடுத்த ஹீரோ!

**பருத்தி** வீரன் நாயகிக்கு விருந்து கொடுத்து அசத்தியிருக்கிறார் சீயான்! யாராவது புதுமுகங்கள் வெற்றிமுகங்களாகத் தலை காட்டினால் போதும். அவர்களோடு நட்பு வைத்துக் கொள்ள பிரியப்படுவார் சீயான். என் பையன் உங்க ரசிகன். உங்களோட ஒரு போட்டோ எடுத்துக்கணுமாம் என்று சொல்வார். அவ்வளவு பெரிய நடிகரின் பிள்ளையே நம்ப ரசிகரா? ஆச்சரியத்தில் வாய்பிளக்கும் இளம் ஹீரோக்கள் போகிற இடமெல்லாம் சீயானின் பெருந்தன்மையைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பார்கள். (இமேஜை வளர்ப்பதற்கு இப்படியும் ஒரு வழி!) இளம் ஹீரோக்களின் அடுத்தடுத்த படங்கள் தோல்வியடைந்தால், தொடர்பையே துண்டித்துவிடுவார் சீயான். சரி...விஷயத்திற்கு வருவோம். மேற்படி நாயகிக்கு விருந்து கொடுத்து உபசரித்த சீயான், கூடவே ஒரு அட்வைஸும் செய்திருக்கிறார். முன்னணி ஹீரோக்கள் படங்களில் மட்டுமே நடி.சின்ன சின்ன நடிகர்களுடன் நடித்தால் உன் மார்கெட் அவ்வளவுதான் என்றாராம். ஏற்கனவே இவருடைய முதல் வெற்றிப்படத்தில் நடித்த அபி நடிகைக்கு இப்படி அட்வைஸ் செய்ததால்தான் அவர் பெரிய நடிகர்கள் வருவார்கள் என்று நம்பி பீல்டை விட்டே போய்விட்டார். அது தெரியாமல் பருத்தி நாயகியும் கவிழ போகிறார் என்கிறார்கள் இந்த சங்கதியைக் கேள்விப்பட்டவர்கள். இதெல்லாம் நடிகைக்கு புரிகிற நேரத்தில் முகத்தில் சுருக்கம் விழுந்திருக்கும்!

முகப்பில்
ரஜினி - ஸ்ரேயா



ரஜினி - ஸ்ரேயா
சிவாஜி



ரஜினி - ஸ்ரேயா
சிவாஜி



**சிவாஜியில்** ரஜினி சொந்த குரலில் ஒரு பாடலை பாடியுள்ளார். தனது முந்தைய பத்து படங்களில் இருந்து பிரபலமான பாடல் வரிகளைச் சேர்த்து ஒரு பாட்டை உருவாக்கி இருக்கிறார்கள். அதை ரஜினி பாடி உள்ளார்.

---

தனது பால்ய சினேகிதி பெப்பே காட்டியதால் அவருக்குப் பதில் ஜெனிலியாவுக்கு வாய்ப்பு கொடுத்துள்ளார் சிம்பு.

## தேவா குதூகலம்

**இசையமைப்பாளர்** தேவா இசையமைத்த மணிகண்டா 'நண்பனின் காதலி' திருமகன், வியாபாரி உள்ளிட்ட ஆறுபடங்களின் விளம்பரங்கள் ஒரே நாளில் பத்திரிகைகளில் வெளியாயின.

நீண்ட இடைவெளிக்கு பிறகு தன் இசையில் இத்தனை படங்கள் ஒன்றாக ரிலீசானதில் தேவா குதூகலமடைந்துள்ளார். தேவாவின் இன்னொரு மகளுக்கு திருமண ஏற்பாடுகள் நடக்கிறது. மணமகன் கல்லூரி நடத்துபவரின் மகனாம்.



ஜீவன் - ஜோதிர்மயி
நான் அவன் இல்லை

## ஷங்கரின் புதிய படம் 'கல்லூரி'

**ஷங்கரின்** எஸ்.பிக்சர்ஸ் தயாரிக்கும் புதிய படம் கல்லூரி. காதல் பட இயக்குநர் பாலாஜி சக்திவேல் இயக்குகிறார். இரண்டு படங்களுக்கு நடுவே இடைவெளி தேவைதான். ஆனால், பாலாஜி சக்திவேல் எடுத்துக் கொண்ட இடைவெளி ரொம்ப அதிகம். இம்சை அரசன்...வெயில் என தொடர்ந்து எஸ்.பிக்சர்ஸ் தயாரிப்பில் படங்கள் வந்ததால் பாலாஜி சக்திவேலின் படம் தள்ளிப்போனது.

ஷங்கர் சிவாஜியில் பிஸியானது இன்னொரு காரணம். சிவாஜியின் கதை விவாதம் தொடங்கி இயக்கம் வரை ஒரு அசிஸ்டெண்ட் போலவே ஷங்கரின் உடனிருந்தார் பாலாஜி சக்திவேல்.

இப்போது, சிவாஜி முடிந்துவிட்டது. பாலாஜி சக்திவேலும் புதிய படத்தில் பிஸியாகிவிட்டார். படத்திற்கான கதை விவாதத்தின்போது கதாநாயகி தமன்னா என்பது முடிவாகி விட்டது. கதாநாயகன் புதுமுகம். திண்டுக்கல்லை சேர்ந்த கல்லூரி மாணவராம். படத்திற்கு இசை, ஒளிப்பதிவு, எடிட்டிங், கலை மற்றும் டெக்னிஷியன்கள் விவரம் விரைவில் அறிவிக்கப்படும். கல்லூரி கதை என்பதால் கல்லூரி என்றே பெயர் வைத்திருக்கிறார்கள். காதலை முந்துமா கல்லூரி?

## விற்பனைக்கு வருகிறது சிவாஜி சொகுசு பேருந்து!

**'தராபாத்** ராமோஜிராவ் பிலிம் சிட்டியில் ஒரு பாடல் காட்சி. முழுக்க கண்ணாடியிலான பல லட்சம் மதிப்புள்ள அரங்கு. ரஜினியும் ஸ்ரேயாவும் கண்ணாடி அரங்கில் ஆடி முடிந்ததும், அரங்குக்கு பயன்படுத்தப்பட்ட கண்ணாடிகளை கவனமாக பிரித்து மீண்டும் விற்பனை செய்ததில் ஏவி.எம்.நிறுவனத்துக்கு செலவு செய்த பணத்தில் சில லட்சம் திரும்ப கிடைத்தது.

அதேபோல் பல லட்ச ரூபாய்க்கு வாங்கி அதே அளவுக்கு செலவு செய்து ஹைடெக்காக மாற்றிய சொகுசு பேருந்தையும் விற்பனைக்கு விடுகிறார்கள். சிவாஜி படத்தில் இந்த பேருந்து ஒரு கேரக்டராகவே வருகிறது.

படத்தில் வில்லன் ஆட்கள் ரஜினியின் குடும்பத்தை கொன்று விடுகிறார்கள். ரஜினிக்கும் குண்டடி படுகிறது. அவரை காப்பாற்றுகிறார் ரகுவரன். சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு சென்றால் வில்லன் ஆட்கள் கண்டுபிடித்து விடுவார்கள் என ரஜினிக்கு சிகிச்சை அளிப்பதற்கென்றே பிரத்தியேகமாக ஒரு பேருந்தை உருவாக்குகிறார். வெளியே சாதாரண சொகுசு பேருந்தைபோல் தோன்றும் இதன் உள் அமைப்பு அசாதாரணமானது. கழிவறை, ஆபரேஷன் தியேட்டர், கான்பரன்ஸ் ஹால் என ஹை-டெக் வசதிகள் கொண்டது.

## செல்வராகவன் இயக்கத்தில் விக்ரம்!

**இரண்டு** படங்களுக்குள் இவ்வளவு பெரிய இடைவெளியா? சோகத்தில் இருக்கிறது சீயான் வட்டாரம். மஜா வெளியாகி இரண்டு வருடம் ஆன பிறகும் விக்ரமின் அடுத்த படம் ரிலீஸாகவில்லை.

பீமா லேட்டானாலும் அடுத்து சுறுசுறுப்பாக மூன்று படங்களில் இவர் நடிக்கிறார். முதலில் சுசி.கணேசனின் கந்தசாமி. அது முடிந்ததும் சீமான் படம். இதனை மோகன் நடராஜனின் ஸ்ரீராஜ காளிம்மன் சூப்பர் பிலிம்ஸ் தயாரிக்கிறது.

இந்த இரண்டு படங்களுக்குப் பிறகு செல்வராகவனின் படத்துக்கு கால்ஷீட் கொடுக்கிறார் விக்ரம். காதல் கொண்டேன் வந்த போதே செல்வாவின் இயக்கத்தில் நடிக்க காதல் கொண்டார் விக்ரம். இத்தனை ஆண்டுகள் கழித்து இப் போது தான் அவரது ஆசை நிறைவேறியிருக்கிறது.

இந்தப் படத்தை போக்கிரியைத் தயாரித்த எஸ்.ரமேஷ் பாபு தனது கனக ரத்னா மூவிஸுக்காக தயாரிக்கிறார்.



## நடிகை ரவளி திருமணம்!

**சென்னைக்கு** திடீர் விசிட் அடித்தார் ரவளி. கையில் திருமண அழைப்பிதழ். எஸ், திருமணம் செய்து கலை வாழ்விலிருந்து ஒதுங்குகிறார் ரவளி.

தமிழ் படங்களில் நடித்த ரவளி இங்கு வாய்ப்பில்லாமல் கன்னடம், தெலுங்கு என ரூட் மாறினார். அங்கும் அவ்வளவு வரவேற்பில்லை. இதற்குமேல் தாக்குபிடிக்காது என்ற நிலையில் அடுத்தக் கட்டமாக திருமணத்திற்கு தயாராகி உள்ளார்.

ரவளியை திருமணம் செய்ய இருப்பவர் சாப்ட்வேர் இன்ஜினியர். பூர்வீகம் ஆந்திரா. ரவளிக்கு ஆந்திராதான் பூர்வீகம் என்பது குறிப்பிடத்தக்கது. ரவளிக்கும் நீலி கிருஷ்ணனுக்கும் (இதுதான் மணமகனின் பெயர்) இந்த மாதம் ஒன்பதாம் திகதி ஹைதராபாத்தில் திருமணம் நடக்கிறது. இது பெற்றோர்கள் பார்த்து முடிவு செய்த திருமணம். காதல் திருமணம் இல்லையாம்.




## பெண்மையின் தீச்சுவாலை

நீ சப்பி உமிழ்ந்து
கடித்துக்குதறி
ரணங்களைப் பீச்சிய
தழும்புகள் - எனக்குள்
புழுவாகிவிட்டது.

மறப்பதற்கென்று
எனக்குள்
எதைத்தான் நீ
செய்துவிட்டுப்போனாய்...
வலிக்கிறது - என்னை.

சினேகித்தாய்...பின்
துகிலுரித்தாய்...
சமயம் பார்த்து,
வயிறாறப் புசித்தாய்...
விதைத்தவன் - நீ
பாவம் அறுவடைக்கு
வந்தாக வேண்டும்.

நம்பிக்கை - எனக்கு
வருவாயென்றுதான்...
இல்லையேல்
வரவழைக்க நேரும்
ஆத்திரப்பரிசல்ல - இது
அன்பான அழைப்பு.

அத்துமீறிய - உன்
ஆக்ரோஷத்துளியால்...
அறையப்பட்டதுதான்
இச்சிலுவை - அது
உன்னையே சாரும்
உனக்கே சமர்ப்பணம்.

-செயின் தம்பி ஸியாம்,
கல்முனை - 06.

## நாமும் மற்றவரும்...

புத்தா இது
புதினமல்ல
உங்களைப் போல நாங்களும்
மனிதர்கள் தான்
பாச நேசத்தை எந்தப்
படுகுழியில் போட்டு மூடினீர்கள்?
நாங்களுந்தான்
நீங்களுந்தான்
பாசச் சகோதரர்கள்
இரத்தத்தின் இரத்தங்கள்
யுத்தம் எதற்கு?
பேசி முடியுங்கள்
பிரச்சினையைத் தீருங்கள்
நல்ல சலவை சவர்க்காரத்தை
எடுத்து நாட்டுப் பிரச்சினையை
உங்கள் வீட்டுப் பிரச்சினையாகக்
கருதி சலவை செய்யுங்கள்
நாமும் மற்றவரும் என்று
நினையாதீர்கள்
நீங்கள் தான் நாங்கள்
நாங்கள் தான் நீங்கள்
இதய சுத்தியும்
இனிய அன்பும்
இறைவனால் எங்களுக்குக்
கொடுக்கப்பட்ட
நல்ல புத்தியும்
இவற்றை எங்கள்
இதயங்களில் வைத்து
வாசித்துப் பார்த்தால்
நமக்குள்ளே நாம்
இருப்போம்
நாமும் மற்றவருமில்லை
நாம் நாமே.

-பொன்.நவநீதன்,
பாண்டிருப்பு - 02.

## துப்பாக்கி!

உலகத்தின் மொத்தமும்
ஆயுத நுனிக்குள்
போர்த்தப்பட்டு
அஞ்சலிக்கப்படுகிறது.

புட்கள் படர்ந்த
உலக கல்லறைகளுக்குள்
அதிகமானவை
துப்பாக்கி துளைத்த
உசிர்களையே
புழுக்கள் மேய்கின்றது.

காற்று நுழையா
இடுக்குகளில்...
சத்தத்துக்குள்
ரகசியத்தை இணைத்து
துப்பாக்கிகள்
சமரசம் பேசுகின்றன.

அணுவும் அறிய உணராது
அசைந்து திரியும்
உலக உருண்டை
சில கணம்
பூகம்பிக்கிறது
அணுவாயுதம்
பரீட்சிக்கையில்...

மயானங்களின்
முதுகு ஓரங்களை
வெள்ளையடிக்கும்
ஆயுத நுனிகள்!

துப்பாக்கிகள்
உயரும் போதெல்லாம்
சுடுகாட்டு விறகுகள்
எரிந்துதான் ஆக வேண்டும்.

-து.செல்வகுமார்,
தர்கா நகர்.

## தூண்டிலை விழுங்கிய உயிர்

அடுத்த நிமிடம்
மரணம் நிச்சயம்
இந்தச் செக்கன்கள்
நூற்றாண்டாகிறது
சோகம் சிறகடித்து
சாதனை படைப்பதால்

செங்குரும்புச் சாருண்டேன்
வாயுறைத்தது
அதைப் போக்க
தேனருந்தினேன்
வாய் வேம்பானது
வழியின்றி
தண்ணீர் தேடினேன்
கடல் பாலைவனமானது

நினைவினில்
பாதி சிரிக்கிறாய்
பாதி சுடுகிறாய்

வெள்ளைப் பக்கங்களில்
முல்லை தூவிவிட்டாய்
அது மலர்ந்து கனிந்து

கல்லைக் கனியாக்கையில்
கனியை அழுகாக்கினாய்

ஞாபகங்களெனும் வில்லைகளை
மீட்டிப் பார்ப்பதுதான்
நோய்க்கான
அருமாந்த மருந்தா??

தடுமாற்றங்களால்
இரண்டு கால்களும்
ஒரே தடவையில்
நான்கு திசையிலும்
நடக்கிறது - என்
நிழலையும் மறந்து.

-ஆயிஸா றிஸ்வின், மூதூர்.

## காதலின் பாலர்வகுப்பு

நம்
கண்கள் சந்தித்தபோது
எனக்குள்ளே - ஏதோ
இரசாயன மாற்றம்.
தெஸ்தெஸ்திரோன் - சுரப்பி
சற்று அதிகமாகவே!

உன் சிரிப்பென்ன
சிலந்திவலையோ?
என்னிதயத்தீனி - அப்போதே
மாட்டிக்கொண்டது.

என்னை...
முட்டாளாக்கிய கவிஞன்
காதல்.
கவிஞனாக்கிய முட்டாள்
நீ!

உன்னுடைய கொம்பாஸ் முழுக்க
என்னுடைய
பறக்கும் முத்தங்கள் தானே?
பார்ப்போரை கொள்ளை கொள்வாய்.
என்னை மட்டும் கொன்று தின்பாய்!

கொஞ்சமாக இருக்கும்
என் - கவிதைகளில்
ஒன்றுகூட - உன்
பெயரின் அழகுக்கு ஈடாகாதா?

வகுப்பறை வெண்சுவர்களில்
உன்னையும்
என்னையும் பற்றிய
எவ்வளவு கிசுகிசுக்கள்!

ஒருக்கால் இவர்களுக்கு
தெரியாமல் கூட இருக்கலாம்.
கண்களால் பார்த்துக்கொண்டு
மட்டுமே,
காதலில் பாலர் வகுப்பில் - நாம்
இருக்கிறோமென்று!

-ஞா.ஸர்வேஸ்வரன்,
மன்னார்.

## உறங்கிப் போன இரவுக்குள் நான்!

இரவுகள்
உறங்கிப்போன கணமதில்
நானும் என் விழிகளும்
பேசிக் கொண்டோம்!

பாதணிகளின்
அணிநடைகள் நீள்கையில்
காய்ந்த சருகுகளின்
கீச்சல் எனதின் செவிப்பறைகளை
துளைவிட்டன!

விழிப்பின் பயத்தினில்
என் முண்டக் கண்ணிரெண்டும்
பிதுங்க - என்
செவிகளின் செவ்வியுடன்
நான்?

ஏய்!
என்ற பாரிய கூவலுடன்
பதறி சிதறிய இருதயத்துடனும்
நடக்க மறுத்த
கால்களுடனும் - நான்!

மறுபடி மறுபடி
ஏய்...ஏய்!
அரட்டலின் அதிகரிப்பு
அச்சத்தின் உச்சத்தில்
உயிரை உதிர்த்தவனாய் - நான்!

துப்பாக்கி ரவைகளின்
சரசரப்பில்
அவையகம் உதிர்க்கும்
வியர்வைத் துளிகளுடன்
திண்ணைக் கதவு திறந்து - நான்!

ஆம்!
அவர்களின் மனம் புன்னகைக்க
நானும் என் என்னவர்களும்
சந்தோசம் களைந்து!

மறு புறம்
சேவலின் கூவலுடன்.
விடியல்
தூங்கிய இரவுக்கு!

பிறகு
காலைக் கதிரவனின்
சிரிப்புடன்
சுற்றத்தின் அழுகை!
கடத்தப்பட்டோர் பட்டியலில் நான்!!!

-ஜே.பிரோஸ்கானி,
கிண்ணியா.

## விளையாட்டு




**பொலிவுட்** திரையுலகில் ரீமா சென்னுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறதாம். பிரபல கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரின் அதிரடி ஆட்டத்தின் பால் ஒரு காலம் காதல் கொண்டிருந்தவர் ரீமா!

சச்சின் திருமணம் முடித்தபின் ரீமாவுக்கு கிரிக்கெட் விளையாட்டே வேண்டாம் என்றாகிவிட்டது.

இப்போது, மீண்டும் அவர் கிரிக்கெட் போட்டிகளை கண்டுகளிப்பதாகக் கூறி வருகிறார்.

அதாவது சகல துறைகளிலும் தனது திறமைகளை வெளிப்படுத்தி வரும் மஹேந்திர விஸ் தோணியின் விளையாட்டின் பால் தனது உள்ளம் கரைந்து போவதாக ரீமா சொல்லுகின்றார்.

## விபத்து



**இரண்டு** வருட காலத்திற்குள் மூன்று தடவைகள் வாகன விபத்துகளுக்கு உள்ளாகியுள்ளார் லின்ட்சே லொஹான்.


வாகனங்களுக்கும் பிரபல்யங்களுக்கும் இடையில் ஏதாவது தகராறுகள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன.

பெரிஸ் ஹில்டன் குடிபோதையில் வாகனத்தைச் செலுத்தி விபத்துக்குள்ளானார்.

இப்போது லொஹான். லொஹானின் வாகன விபத்துகளுக்குக் காரணம், பெப்பராசி புகைப்படக் கலைஞர்களாம்.

இவர்களால் தான் டயானா விபத்துக்குள்ளானார் என்றும் கூறப்பட்டது.

## பெரியதும், சிறியதுமாக



**மிச்செயில்** ட்ரவ்டன் பார்க் -தற்பொழுது அமெரிக்காவில் திரையிடப்பட்டிருக்கும் Black Christmas திரைப் படத்தின் கதாநாயகி!

இவர் இப்போது திரைப் படத்துறையில் மட்டுமல்லாது, சின்னத் திரையிலும் காலடி எடுத்து வைத்துள்ளார்.

ஏ.பி.சி.தொலைக்காட்சியில் ஒரு தொடர் நாடகத்தில் நடிப்பதற்கு மிச்செயில் தயாராகி வருகிறார். இதில் இவர் ஓர் அரசியல்வாதியின் மகளாக நடிக்கிறார்.

## விருதுகள்



**52ஆவது** பிலிம்பெயார் விருது வழங்கும் விழாவில் தூம்-2 எனும் திரைப்படத்திற்காக ரித்திக் ரொஷனும் - பனா எனும் திரைப்படத்திற்காக கஜோலும் சிறந்த நடிகர், நடிகைக்கான விருதுகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

கடந்த வருடத்திற்கான சிறந்த திரைப்படமாக ரங்ந் தே பசந்தே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

ஓம் பிரகாஷ் மெஹ்ரா சிறந்த இயக்குநராகவும், ஏ.ஆர். ரஹ்மான் சிறந்த இசையமைப்பாளராகவும் தேர்ந் தெடுக்கப் பட்டுள்ளனர்.

# மகிழ்ச்சியாக வாழ என்ன தேவை?

**எம்** வாழ்க்கையின் அர்த்தம் என்ன? என்று சில சமயங்களில் நாம் எண்ணி வருந்துவதுண்டு. செய்து முடிக்காத வேலைகள், தூக்கமின்மை, பணப் பிரச்சினைகள் ஆகியவை நம் கோபத்தை மென்மேலும் அதிகப்படுத்தி, நமக்கு நிம்மதியே கிடைக்காதா? நம்மைத்



தவிர வேறு யாருக்கும் இந்த மாதிரி பிரச்சினைகள் இல்லையே! என்று நினைக்க வைக்கும்.

வாழ்க்கையில் முக்கியமானது எது என்பதை முடிவு செய்யவும், தினந்தோறும் மகிழ்ச்சியுடன் வாழவும், சோர்வைத் தூக்கி எறிந்து விட்டு புத்துணர்ச்சி பெறவும், எங்கள் எளிய முறைகள் உங்களுக்கு அவசியம் உதவும்.

நீங்கள் செய்வது அனைத்திலும் சிறக்க வேண்டும் என்ற வெறியுடன் செயல்படுபவரா அல்லது குறையற்றவராக இருக்க முயற்சிப்பவரா என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்.

இந்த எளிய முறைகள் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் பகுதி உங்களுக்குச் சில உண்மைகளைப் புரிய வைக்கும்.

டி.வி.யில் வரும் அந்த அழகான பெண்ணைப் போல், ஒரு சிறந்த மனைவியாக, தாயாக, மொத்தத்தில் ஒரு சூப்பர் பெண்மணியாக இருக்க அனைவருக்கும் ஆசை! ஆனால் அது சாத்தியமா என்றும் நாம் யோசிக்க வேண்டும்! அப்படி இருக்க வேண்டும் என்ற முயற்சியில் நாம் யார் என்பதை மறந்து வீண் கவலைக்கு ஆளாகிறோம்.

மற்ற சராசரி மக்களுடன் நம்மை ஒப்பிடாமல், சினிமா ஸ்டார்களுடனும், அழகான மாடல்களுடனும் நம்மை ஒப்பிடுகிறோம். இதனால், நம்மிடம் உள்ள குறைகளே நம் கண்களுக்குத் தெரிகிறது. சினிமாவிலும், விளம்பரங்களிலும் வரும் சுத்தமான வீடுகளைப் போல நம் வீடுகள் இல்லையே என்றும் நம்மில் பலர் வருத்தப்படுவது உண்டு.

நம்மை மாற்றுவது ஒரு பக்கம் இருக்கட்டும், நம் வீட்டில் இருப்பவர்களும் கதைகளில், படங்களில் வரும் கதாபாத்திரங்களைப் போல் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறோம். இப்படி நம் எதிர்பார்ப்பின் பட்டியல் நீண்டு கொண்டே போவதால் தாழ்வு மனப்பான்மையும், நிம்மதியற்ற நிலையும் ஏற்படுகிறது.

உண்மை வாழ்க்கையில், உங்களுக்குத் தெரிந்த எத்தனைப் பெண்கள் எப்போதும் வீட்டை சுத்தமாகவும் அதே நேரத்தில் தன்னை மாடல் அழகி போலவும் வைத்துக் கொள்கின்றனர்?

97 சதவீத மக்கள் தங்கள் வாழ்க்கை மாறினால்தான் மகிழ்ச்சி கிடைக்கும் என்று நம்புகின்றனர்.

85 சதவீத மக்கள் வீட்டுக்கு விருந்தினர் வருவதற்கு முன் தான் வீட்டை சுத்தம் செய்கிறார்கள்.

74 சதவீத மக்கள் சேமிக்க வழியின்றி திண்டாடுகிறார்கள்.

70 சதவீத மக்கள் வீட்டில் இருக்கும்போது அழகாக தோன்ற முயற்சி எடுப்பதில்லை.

60 சதவீத மக்கள் தாங்கள் செய்ய நினைத்த வேலைகளை நேரத்தில் செய்து முடிப்பதில்லை.

நம்மிடம் உள்ள குறைகளை ஒப்புக்கொண்டு அதை மாற்ற முயல்வதே சிறந்தது. அதைவிட்டு நான் குறையற்றவள் என்பதை நிரூபிக்க நினைப்பது வீண் கவலையை மட்டுமே தரும்.

அனைத்திலும் சிறக்க வேண்டும் என்ற எண்ணம் நம் மகிழ்ச்சியை குறைத்து, கவலைகளைத்தான் அதிகப்படுத்துகிறது.

மேலே உள்ள குறிப்புகளைப் படித்து விட்டீர்களா? இதோ நீங்கள் வீட்டில் செய்ய ஒரு பயிற்சி:-

ஒரு பேப்பரும், பேனாவும் எடுத்து இரண்டு பட்டியல்களைத் தயாரியுங்கள்.



1. முதல் பட்டியலில் நீங்கள் எது கிடைத்தால், மாறினால் வாழ்வில் மகிழ்ச்சி கிடைக்கும் என்று நினைக்கிறீர்கள் என்பதைப் பற்றி எழுதுங்கள்.

2. இரண்டாவது பட்டியலில், நீங்கள் மகிழ்ச்சியாக இருந்த நேரங்களைக் குறிப்பிடுங்கள்.

3. இந்த இரண்டு பட்டியல்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.


நீங்கள் மகிழ்ச்சியுடன் வாழ என்ன தேவை என்பது உங்களுக்கே புரியும்.

# லேடிஸ் ஸ்பெஷல்

# கோடைக் காலத்தில் சருமத்தைப் பாதுகாப்பதற்கான டிப்ஸ்

* **நம்மில்** பலருக்கு வெயிலில் அலைய வேண்டிய வேலை. அதனால், சருமம் பாதிக்கப்படுவதுடன், வயதான தோற்றத்தை தரும். இதை தவிர்க்க, சூரிய ஒளி படும் முகம், கைகள், கழுத்து என உடலின் பல்வேறு பகுதிகள் மீது சன்ஸ்க்ரீன் கிரீமை பயன்படுத்தலாம்.

* உங்கள் சருமத்தையும், முழு உடலையும்



ஆரோக்கியமாக வைத்திருப்பதில் தண்ணீரின் பங்கு அதிகம். தினமும் குறைந்தது எட்டு டம்ளர் தண்ணீர் அருந்த வேண்டும். அத்துடன் எட்டு மணிநேர தூக்கமும் இருந்துவிட்டால், உங்களாலேயே நம்ப முடியாத அளவுக்கு, உங்கள் தோற்றம் பொலிவு பெறும்.

* கோடைக்காலத்திற்கு ஏற்ற நீர்ச்சத்து மிகுந்த புத்தம் புதிய காய்கறிகள், பழங்கள் மற்றும் தானியங்களை உணவில் அதிகம் சேர்க்க வேண்டும். அப்போது தான், உடலுக்கும் சருமத்திற்கும் தேவையான விட்டமின்களும், தாதுச் சத்துக்களும் கிடைக்கும்.

* உடல் எடையைச் சீராக வைத்திருக்க முயற்சிக்க வேண்டும். எடையைக் குறைக்க வேண்டும் என்று டயட்டில் இருந்தால், அது உங்கள் சருமத்தின் நெகிழும் தன்மையை மாற்றி விடும். அதனால், சருமத்தின் பளபளப்பு குறைந்து, மங்கலாகத் தெரியும்.

* மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு யோகா மற்றும் தியான பயிற்சிகளை மேற்கொள்ளலாம். மன அழுத்தம் இருந்தால், அட்ரீனல் ஹார்மோன்கள் அதிகமாகச் சுரக்கும். அதனால், சருமம் தொடர்பான பிரச்சினைகள் வரக்கூடும்.



* குளியலுக்கு அதிக தண்ணீரைப் பயன்படுத்தி, நீண்ட நேரம் குளிக்கக்கூடாது. எந்தளவு தண்ணீரை குறைவாக பயன்படுத்துகிறோமோ, அந்த அளவுக்குச் சருமம் பாதுகாப்பாக இருக்கும்.

* குளித்த பிறகு, உடலில் உள்ள ஈரத்தை அழுத்தி துடைக்கக்கூடாது. லேசாக துடைத்து, சருமத்தில் சிறிதளவு ஈரத்தன்மை இருக்கும் போதே, மாயிஸ்சரைசிங் கிரீமைத் தடவினால் போதும்.

* பருத்தி ஆடைகளை அணிவது சிறந்தது. அதுவும் தளர்வான ஆடைகளை அணிந்தால், வியர்வையை எளிதில் கிரகித்துக் கொள்ளும். இறுக்கமான ஆடை வியர்வையை வெளியேற்ற உதவாது. மேலும் சருமத்தின் மீது உராய்ந்து, வறண்ட தன்மையை உருவாக்கும்.

* சரும பிரச்சினைகளைத் தவிர்க்க, அதிக அளவில் இரசாயன பொருட்கள் அடங்கிய அழகு சாதனங்களைப் பயன்படுத்தக்கூடாது.

* குளியல் சோப் அல்லது கிரீமின் மிச்சம் சருமத்தில் ஒட்டி இருந்தால், சருமத்தில் உள்ள துளைகளை அடைத்துக் கொண்டு விடும். அதனால், வியர்வை வெளியேற வழி இல்லாமல் போகும். அவற்றை கவனமாக கையாள வேண்டும்.

* முகம், கை மற்றும் கால்களை கழுவ, சூடான தண்ணீரை விட வெதுவெதுப்பான தண்ணீரே சிறந்தது.

## வெள்ளி நகைகளைப் பராமரிப்பதில் கீழ்க்கண்ட விஷயங்களைக் கவனத்தில் கொள்க:-

* **வெள்ளியை** குளிர்ச்சியான, வறண்ட இடங்களில், காற்றுப்புகாத பெட்டிகளில் வைக்கவேண்டும். நீண்ட நேரங்களுக்கு அதை வெளியில் வைக்க வேண்டாம். மரப்பெட்டியில் அதை வைக்க வேண்டாம். ஏனெனில் மரத்தில் இருக்கும் அமிலம் வெள்ளியின் மேல்பகுதியைப் பாதிக்கும்.

* நகைப்பெட்டிகளில் ஒவ்வொரு நகைகளையும் தனித்தனியாக வையுங்கள்.

* வெள்ளிப் பொருளின் பளபளப்பு மங்கும்போது, இதற்காகவே கடைகளில் கிடைக்கும் பாலிஷ் கொண்டு அதன் அசல் பளபளப்பை மீட்கலாம்.

* வெள்ளியின் மீது நியூஸ் பேப்பர், ரப்பர் பேண்ட் அல்லது பிளாஸ்டிக் படும்படி வைக்க வேண்டாம்.



* நம் உடலில் சுரக்கும் எண்ணெய்ப் பசையால் வெள்ளியின் ஒளி மங்க வாய்ப்பிருக்கிறது. இதைத் தடுக்க உபயோகித்த பிறகு பொருட்களை நன்றாக துடைத்து பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

* பளபளப்பு மிகவும் குன்றிய வெள்ளிப் பொருட்களை, அமோனியா மற்றும்

* மென்மையான பல் துலக்கும் பிரஷ்ஷினால் சுத்தம் செய்யலாம். பிறகு அதை நன்றாக தண்ணீரில் கழுவ வேண்டும். வெள்ளி நகையில் கற்கள் இருந்தால் அமோனியாவில் அதை தோய்க்க வேண்டாம்.

* பயன்படுத்திய வெள்ளி பொருட்களை, மென்மையாக அலம்பி உடனேயே காயவைத்தால் கூட போதுமானது.

* ஒளி மங்கும் போது அதற்கு ஒரு மஞ்சள்



நிறம் வரும், அப்போதே கவனித்து சுத்தம் செய்தால் சுலபமானது. அல்லது அது கறுப்பாகவோ அல்லது இளம்பழுப்பு நிறத்திற்கோ மாறிவிட்டால் சுத்தம் செய்வது கடினமாகி விடும்.

* கெட்டியாகிவிட்ட பாலிஷ்களைப் பயன்படுத்த வேண்டாம்.

* வெள்ளித் தட்டுகளில் உணவுகளை நீண்ட நேரம் வைக்கவேண்டாம். ஏனெனில் சில உணவுப் பொருட்களில் உள்ள அமிலங்கள் வெள்ளித்தட்டை மங்கச் செய்யும்.

* டூத் பேஸ்டைப் பாலிஷ் செய்ய பயன்படுத்தக் கூடவே கூடாது. சில டூத் பேஸ்ட்களில் சமையல் சோடா கலந்திருக்கும். இவை வெள்ளியை பாதிக்கும். இதற்காகவே உள்ள பாலிஷ்களையே உபயோகிக்க வேண்டும்.



* பாத்திரம் கழுவும் மெஷின்களில் வெள்ளிப் பாத்திரங்களைப் போட வேண்டாம்.

* வெள்ளிப் பொருட்களை வைக்க கார்ட்போர்ட் பாக்ஸ்களைப் பயன்படுத்தக்கூடாது.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

68-

பெயர் : ..........

முகவரி : ..........

..........

..........

தே.அ. அட்டை இல : ..........

கையொப்பம் : ..........

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
24.04.2007

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -68**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

பரிசுப் போட்டி இல - 66
பரிசு பெறும்
அதிர்ஷ்டசாலி

**எம்.பி. அகிலன்,**
**39, கல்லூரி வீதி, திருகோணமலை**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* -ஷோபா-

## சோயா தேங்காய்ப் பால் பாயாசம்

**தேவையான பொருட்கள் :-**

சோயா சரிக்ஸ் - 1கப்
தேங்காய்த் துருவல் - 11/2 கப்
முந்திரி, பாதாம், பிஸ்தா பருப்பு - தலா 1 தேக்கரண்டி
சீனி - 150 கிராம்
ஏலக்காய் - 4
திராட்சை - 1 தேக்கரண்டி
குங்குமப்பூ - விருப்பப்பட்டால் சிறிதளவு
நெய் - 100 கிராம்
பால் - 1/4 லிட்டர்.

**செய்முறை :-**

**முதலில்** சோயா சரிக்கை வெதுவெதுப்பான நீரில் ஊறவிட்டுப் பிழிந்து, மிக்ஸியில் இட்டு உதிர்த்துக் கொள்ளவும். தேங்காய்த் துருவலை, சிறிது தண்ணீர் சேர்த்து திக்கான பால் எடுத்துக் கொள்ளவும். (மிக்ஸியில் இட்டு அரைத்து வடிகட்டி பால் எடுக்கவும்) பாதாம், பிஸ்தா, முந்திரியைப் பொடியாக நறுக்கி, தனித்தனியே நெய்யில் வறுத்து திராட்சையைச் சேர்த்து வறுத்து எடுத்து வைக்கவும்.

அடிகனமான பாத்திரத்தில் பாலை விட்டு சிறிது தண்ணீர் விட்டுக் கொதிக்க விட்டு அத்துடன் சோயா சரிக்ஸை போட்டு நன்கு வேகவிடவும். சோயா நன்கு வெந்ததும், சீனியைச் சேர்த்து ஒரு கொதி வந்ததும், வடிகட்டி எடுத்து வைத்திருக்கும் தேங்காய்ப்பால் சேர்த்து சூடானதும் இறக்கி விடவும். கொதிக்க விடக்கூடாது. நெய் விட்டு வறுத்து எடுத்து வைத்திருக்கும் முந்திரி, திராட்சை, பிஸ்தா, பாதாவைச் சேர்த்து இறக்கி ஏலக்காயைத் தட்டிப் போட்டு, குங்குமப்பூ சேர்த்து பரிமாறவும். அருமையான புரதச்சத்து நிறைந்த பாயாசம் ரெடி.




**பின்னர்** லாலி படகுக்குள் ஏறிக் கொண்டாள். அலைகள் எங்களை விரைவாகக் கரைக்குக் கொண்டு சென்றன. சிவப்பிந்தியக் கிழவி எங்களுக்காகக் காத்திருந்தாள். முத்துச் சிப்பிகளை உலர்ந்த மணல் தரைக்கு எடுத்து வரும்படி அவளிடமும், உதவியாளிடம் பணித்தோம். எல்லாம்



வந்து சேர்ந்ததும், அவளைத் தடுத்து அந்த வேலையைத் தானே மேற்கொண்டாள். தன் கத்தியின் முனையைக் கொண்டு கிடுகிடுவென்று சுமார் முப்பது சிப்பிகளைத் திறந்த பிறகுதான் ஒரு முத்து கிடைத்தது. குறைந்த பட்சம் இரண்டு டஜன் சிப்பியாவது நான் சுவைத்தேன் என்று சொல்லத் தேவையில்லை. கடலின் தரை மட்டத்தில் ரொம்பக் குளிர்ச்சியாக இருக்கும் போலிருக்கிறது. ஏனெனில், சிப்பியின் சதை சில்லென்று இருந்தது.

மெல்ல மெல்ல ஒரு முத்தை வெளியெடுத்தாள் அவள், சுண்டு விரல் நகத்தளவுக்கு இருந்தது அது. நடுத்தர அளவைக் காட்டிலும் சற்றுப் பெரியது என்று சொல்லலாம். எப்படிப் பளபளத்தது!

அற்புதமான பல வகை வண்ணங்களை இயற்கை அதற்கு அளித்திருக்கிறது. ஆனால் எந்த ஒரு வர்ணமும் மிதமிஞ்சி இருக்கவில்லை. லாலி அந்த முத்தைத் தன் விரல்களில் எடுத்து வைத்துக் கொண்டாள். பிறகு வாயில் போட்டு ஒரு நிமிடம் அடக்கிக் கொண்டாள். பின்னர் வெளியே எடுத்து என் வாயில் போட்டாள். அதை நான் பல்லால் கடித்து நசுக்கி விழுங்க வேண்டுமென்று தான் விரும்புவதாக வாயை மென்று சைகை செய்தாள்.

முதலில் நான் மறுத்தேன். ஆனால் கொஞ்சிக் கெஞ்சி அவள் விருப்பப்படி செய்யுமாறு செய்து விட்டாள். பல்லால் கடித்துத் தூள்களை விழுங்கினேன். அந்த முத்தில் சிறிது கூட மிச்சமில்லாமல் என் வயிற்றுக்குள் இறங்குவதற்காக மேலும் ஐந்தாறு சிப்பிகளை உடைத்துக் கொடுத்துச் சாப்பிடும்படி செய்தாள். என்னை மணலில் தள்ளி, சின்னக் குழந்தை மாதிரி என் வாயைத் திறந்து பார்த்து, பல் இடுக்குகளில் முத்துத் தூள் எதுவும் இல்லை என்று நிச்சயம் செய்து கொண்டாள்.

கிழவியும், உதவியாளும் மற்ற வேலைகளைக் கவனிக்கும் படி விட்டு விட்டு நாங்கள் நடந்தோம்.


நான் இங்கே வந்து ஒரு மாதமாகி விட்டது. என் கணக்குத் தப்பியிருக்க முடியாது. ஏனெனில் ஒவ்வொரு நாளும் காலையில் ஒரு காகிதத் துண்டில் அன்றைய திகதியையும், கிழமையையும் குறித்துக் கொண்டு வந்தேன். பச்சை குத்துவதற்கான ஊசிகள் வந்து சேர்ந்தன. சிவப்பு, நீலம், ஊதா, இன்டியன் இங்க்கும் வந்திருந்தன. தலைவனின் குடிசையில் மூன்று ரேசர் கத்திகள் இருப்பதைக் கண்டேன்.

**எழுதியது: ஹென்ரி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

சிவப்பிந்தியர்களுக்கு தாடி வளர்வதில்லையாதலால், அந்தக் கத்திகளை முக சவரத்துக்குப் பயன்படுத்துவதில்லை. தங்கள் முடிகளைச் சீராக வெட்டிக் கொள்வதற்கு ஒரு கத்தியைப் பயன்படுத்தினார்கள். ஜாடோவுக்கு - அதுதான் தலைவனின் பெயர் - கையில் பச்சை குத்தினேன். தலை முடியில் வண்ணச் சிறகுகள் பலவற்றைச் செருகிக் கொண்டிருக்கும் சிவப்பிந்தியனின் சித்திரத்தை வரைந்தேன்.

அவனுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. தன் மார்பில் ஒரு பெரிய படம் வரையும்படியும், அதற்கு முன் வேறு யாருக்கும் நான் பச்சை குத்தக் கூடாதென்றும் கண்டிப்புடன் தெரிவித்தான். *(பட்டாம்பூச்சி பறக்கும்)*

# துளிர் விடும் மலையகம்




**(மரியாள்)** பெண்களே. அடிப்படை காரணம் என்பதை மறுக்கப்படாமலும் மறைக்கப்படாமலும் இருக்கும் வகையில் விவிலியம் விளக்கப்படவேண்டும். பெண்களைப் பற்றிய இழிவாக



விளக்கப்படும் சந்தர்ப்பங்கள் சில ஆண்களுக்குச் சாதகமாக அமையும் வேளை ஒரு பக்க சார்பாக சொல்லாது இரு பக்க சார்பாக விவிலியத்தைக் கண்நோக்குவது உகந்ததாகும்.

***தேயிலைத் தோட்ட பெண்களின் இறையியல்***

ஒழுங்கீனமாகக் காணப்பட்ட உலகை ஒழுங்குக்கும் இருளிலிருந்து ஒளிக்கும் மீட்டு வந்தார் கடவுள். எனவே அவரை விடுதலை அளிப்பவர் எனலாம். ஒழுங்கு எனும்போது, அண்டசராசரத்தையும் அவரது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். இயற்கை அவருக்காகவும் அவருக்குள்ளும் இருக்கிறது. இஸ்ரேல் மக்கள் விடுதலைக்காக ஏங்கினபோது அக்கினியில் தன்னை வெளிப்படுத்தியது மல்லாமல் மீட்டுக் கொண்டார். ஏலியா பயந்து சோர்ந்துபோனபோது மெல்லிய காற்றில் தன்னை வெளிப்படுத்தினார். காலம், இடம், நேரம், அறிவு, வல்லமை அனைத்திற்கும் அப்பாற்பட்டவராக கடவுள் இருக்கிறார். வரலாற்றில் இக்கடவுளை மக்கள் பலவடிவங்களில் புரிந்துகொண்டனர். அவர்களது நம்பிக்கை அனுபவங்கள் மூலம் அவருக்கு மனுவுருவேற்றத்தையும் (Author) வழங்கினர்.

இதன்மூலம் மக்கள் கடவுளை ஆள் தன்மையும் தெய்வத்தன்மையும் கொண்ட இரு சுபாவங்கள் உடையவராக விளங்கிக் கொண்டனர். இக் கடவுளை விவிலியத்தின் பார்வையில் கண்ணோக்கினால் மனுக்குலத்தை பூரண விடுதலையாக்க செயல்பட்டு வந்ததையும், செயல்பட்டுக் கொண்டிருப்பதையும் தெளிவாக வெளிக்காட்டுகிறது. உமது சித்தம் பரமண்டலங்களில் செய்யப்படுவதுபோல பூமியிலும் செய்யப்படுவதாக என்று

**ஸ்ரீ முகன்**

கிறிஸ்துவும் வேண்டுதல் செய்ததின் மூலம் மென்மேலும் தெளிவாகிறது. எனவே நீதி, நியாயம்,

விடுதலை, சமாதானம், அன்பு போன்ற இறையரசின் விழுமியங்களுடன் இவ்வையகம் காணப்பட வேண்டுமென கிறிஸ்துவின் வாழ்வும் பண்பும் உறுதிப்படுத்துகிறது.

கடவுள் தேயிலை தோட்ட பெண்களில் உறைந்து வாழ்ந்து கொண்டு எப்படி இருக்கிறார் என்பதனையும், இவர்களில் பூரணமாக கடவுள் எப்படியாக செயல்படுகிறார். *(துளிர்க்கும்)*

**ஸ்பெஷல் - கிரிக்கெட்**

# சவால்கள் காத்திருக்கும் அரையிறுதி!

**மேற்கிந்தியத்** தீவுகளில் நடைபெற்று வரும் உலகக் கோப்பைக்கான கிரிக்கெட் திருவிழாவின் இரண்டாம் கட்டத்தின் இறுதி நாட்களில் இருக்கின்றோம். அடுத்த சுற்றான அரை இறுதிக்குத் தகுதி பெற்றுள்ள முதல் மூன்று அணிகளாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இலங்கை ஆகிய அணிகள் இருக்கின்றன. நான்காவது அணி எது என்ற போராட்டத்தில் தென் ஆபிரிக்காவும் இங்கிலாந்தும் கடுமையாகப் போராடி வருகின்றன. அநேகமாக தென் ஆபிரிக்கா அணி தெரிவு செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த எதிர்பார்ப்பை மெய்ப்படுத்துவார்களா என்பது இங்கிலாந்துடன் கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற போட்டியே தீர்மானித்திருக்கும்.

இந்த நிலையில் இலங்கை - அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையில் கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற போட்டியானது, சில முன் எச்சரிக்கைகளைத் தந்துள்ளது. இறுதிப் போட்டி ஒன்று இவ்விரு அணிகளுக்குமிடையில் அமையுமாயின், எந்த அணி உலகக் கோப்பையை சுவீகரிக்குமென எண்ணியவர்களுக்கு, அவுஸ்திரேலிய அணி பெற்ற வெற்றியானது, இலங்கை அணி மீதான நம்பிக்கையைக் கேள்விக்குள்ளாக்கியது.

இலங்கையுடன் விளையாடும்போது அவுஸ்திரேலிய அணியினர் காட்டிய பொறுமை, நிதானம், உறுதி என்பன மிகப் பிரகாசமான வெற்றியைத் தந்தது. இலங்கை அணியினர் தம் மீதான எதிர்பார்ப்புக்களை மனதில் வைத்துக் கொண்டு ஆட்டத்தைக் கோட்டை விட்டனர். இலங்கையுடனான இந்த வெற்றி, அவுஸ்திரேலிய அணிக்கு புதிய நம்பிக்கையைத் தந்துள்ளது. இப்போதே இந்த உலகக்



கோப்பையின் சாம்பியன் அவுஸ்திரேலியாதான் என்று பந்தையம் கட்டத் தொடங்கி விட்டனர்.

இலங்கை அணியைப் பொறுத்தவரை இந்தத் தோல்வி பல பாடங்களைத் தந்திருக்கிறது. அணியின் தற்போதைய நிலையில் சரி செய்ய வேண்டிய விடயங்கள் என்ன, எது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும், எந்த வீரரின் நிலை எப்படி இருக்கிறது என்று நல்லதொரு மதிப்பீட்டைச் செய்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை இந்தத் தோல்வி தந்துள்ளது. ஜெயசூரியா அடித்தால் அடிப்போம் என்பதும், வாசு, முரளி இருந்தால்தான் விக்கட் விழும் என்ற மன நிலையில் மாற்றம் தேவை. தற்போது களத்தில் முழு ஆசிய மக்களின் எதிர்பார்ப்புக்களும் இலங்கை அணியின் மீதே இருக்கிறது. ஆகவே, அணி வீரர்கள் மன உறுதியுடன் அரையிறுதியில் விளையாட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்தவரை அவர்கள் தொடர்ந்து வெற்றி பெற்று வருவது கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் அவுஸ்திரேலிய அணி மீதான ஈர்ப்பை அதிகரிக்கச் செய்துள்ளது. வேறு அணிகளின் ரசிகர்கள்கூட அவுஸ்திரேலிய அணியின் வெற்றிகளைக் கொண்டாடி வருகின்றனர். கிரிக்கெட் என்றால் அதன் நுணுக்கங்களைப் பற்றி அவுஸ்திரேலியாவிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள் என்று சிபாரிசு செய்யுமளவுக்கு கிரிக்கெட் போட்டிகளை அவுஸ்திரேலிய வீரர்கள் மாற்றி வருகிறார்கள். இம்முறையும் உலகக் கோப்பையை அவுஸ்திரேலிய வீரர்களே தூக்கினாலும், அதை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்துக்கு ஆளாகி வருகின்றனர். "அவர்கள் திறமையாக விளையாடுகிறார்கள், ஆகவே அவர்கள் அதற்குத் தகுதியானவர்களே" என்று அவுஸ்திரேலிய அணியின் ஆட்டத்தினை வெளிப்படையாகப் பாராட்டுகின்ற நிலை உருவாகியுள்ளது.

இவை தவிர, இரண்டாம் பட்சமான நம்பிக்கையைத் தரும் அணியாக நியூசிலாந்து இருக்கிறது. இவர்களும் மிகச் சிறப்பாக ஆடிவருகின்றனர். எவ்வித ஆடம்பரமும் இல்லாமல் நியூசிலாந்து அணியினர், தமது உலகக் கோப்பைக் கனவை நனவாக்கும் முயற்சியில் தீவிரம் காட்டி வருகின்றனர். இதன் அடுத்த பங்காளியாக தென் ஆபிரிக்கா வருமாக இருந்தால், அரையிறுதிக் களத்தில் போட்டிகள் விறுவிறுப்பாக அமையும். அத்தகைய நான்கு அணிகளில் அவுஸ்திரேலியா நடைமுறை உலகச் சாம்பியன் - இலங்கை 1996ஆம் ஆண்டு உலகச் சாம்பியன் என்ற வகையில் நியூசிலாந்தும், தென் ஆபிரிக்காவும் உலகச் சாம்பியனாக வரத் துடிக்கும் அணிகள். ஒருவேளை நாளை மறுதினம் 21ஆம் திகதி மேற்கு இந்தியத் தீவு அணியுடன் நடைபெறவிருக்கும் சுப்பர் 8 சுற்றின் இறுதிப் போட்டியிலும் வெற்றி பெற்று ஓட்ட விகித அடிப்படையில் தென் ஆபிரிக்காவைப் பின் தள்ளி இங்கிலாந்து நான்காவது அணியாக அரையிறுதிக்குள் நுழையுமாக இருந்தால், அதுவும் முன்னாள் உலக சாம்பியன் என்ற கௌரவத்தோடு களத்தில் குதிக்கும். ஆக, நியூசிலாந்து அணி தனது உலகக் கோப்பைக் கனவை நிறைவேற்றுவதற்காக கடுமையான சவால்களை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது.

அவுஸ்திரேலியா, இலங்கை, நியூசிலாந்துடன் தென் ஆபிரிக்கா அரையிறுதிக்குத் தகுதி பெற்றால் இருக்கக் கூடிய எதிர்பார்ப்பு இங்கிலாந்து தெரிவானால் குறைந்து விடும். மேற்சொன்ன மூன்று அணிக்கும் இங்கிலாந்துடனான போட்டிகளே ஆறுதல் போட்டிகளாக அமையும்.

ஆகவே, விகிதாசாரப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவாகப்போகும் தென் ஆபிரிக்காவோ, இங்கிலாந்தோ முன்னர் முகம் கொடுத்த போட்டிகளில் கண்ட வீழ்ச்சியையும், சரிவுகளையும் படிப்பினையாகக் கொண்டு மிகுந்த அவதானத்தோடு இனி வரும் போட்டிகளை எதிர் கொள்ள வேண்டும். நியூசிலாந்து அணியினர் முன்னாள் சாம்பியன்களை எதிர்கொள்ளும் அவதானத்தோடு களம் இறங்க வேண்டும்.

இவ்வாறு இரண்டாம் நிலை அணிகள் தங்களைத் தயார் படுத்திக்கொண்டு முன் எச்சரிக்கையுடன் களத்தில் குதிப்பதால், முன்னணி அணிகள் எனக் கருதப்படும் அவுஸ்திரேலியா, இலங்கை ஆகிய அணிகள் சின்னச் சறுக்கல்களையும் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும். இல்லையெனின் முன்னாள் சாம்பியன்கள் என்ற நிலையே நீடிக்கும். அவுஸ்திரேலிய அணியின் தொடர் வெற்றிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது யார் என்ற கேள்விக்கு நாளை 20ஆம் திகதி நியூசிலாந்து அணி விடைகாணுமா? அல்லது இந்நிலை அரையிறுதியிலும் தொடருமா அடுத்த சுற்றில் பார்க்கலாம்.

**தெய்வீக மருத்துவம்**

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை

Goverment Approved Charity Regd No - HA/4/BT/219

டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)

கிரக தோஷம், காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் - மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைசக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு, உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)

Theiveegam Srilanka
Head Office
Batticaloa

தெய்வீகம் ஸ்ரீலங்கா
தலைமையகம்
மட்டக்களப்பு

Tele/Fax : 065-2224825, +94777032844. Balu Sothidar @ hotmail.com.

*"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"*
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"



# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"



**சூப்,** வாய்க்குள் ஊற்றுவதற்குப் பதிலாக சாப்ளினின் ஷர்ட்டுக்குள்ளே ஊற்றப்படுகின்றது. ஒவ்வொரு முறையும் உணவை விழுங்கியவுடன் ஒரு ஸ்பாஞ்ச் அமைக்கப்பட்டிருக்கிறது. அது அவ்வப்பொழுது வந்து வாயைத் துடைத்து விடும். சூப்பு ஆடைக்குள்ளே கொட்டப்பட்டாலும் அது மட்டும் தன் வேலையைச் சரியாக திட்டமிட்டபடி சாப்ளினின் வாயைத் துடைத்துக் கொண்டிருக்கிறது.

மக்காச் சோளம் சாப்ளின் வாயை விட்டு விட்டு, வேகமாக மூக்கைப் பதம் பார்க்கிறது.... இனிப்புப் பண்டம் முகத்தில் ஒட்டிக் கொள்கிறது....

இந்த உணவை ஊட்டும் இயந்திரத்தின் விபரீத விளையாட்டுக்கள் மக்களிடையே சிரிப்பை உண்டாக்கியது மட்டுமல்லாமல், சிரிப்பினால் வயிற்று வலியையும் உண்டாக்கியது. இந்தக் காட்சியும் உலகத்தில் பல படங்களில் புகுத்தப்பட்டது.

உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற வெறியோடு அதன் மூலமாக இலாபத்தை அதிகரிக்க வேண்டும் என்ற பேராசையோடு தொழிற்சாலை முதலாளி எல்லா இடங்களிலும் இன்றைய தொலைக்காட்சித் திரைகளைப் போல



பல திரைகளை அமர்த்தி வைக்கிறார். அப்படி ஒன்று டாய்லெட்டிலும் உண்டு. அங்கு சாப்ளின் சில நிமிடங்களுக்குச் செல்லும் பொழுது திரையில் முதலாளி தோன்றி வெளியே செல்லும்படி மிரட்டுகிறார். இந்தச் சிறிய காட்சி முதலாளிகளின் பேராசையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

தொழிலாளிக்குச் சிறுநீர் கழிக்கக்கூட நேரம் கணக்கிடப்பட வேண்டும்! இது முதலாளியின் தத்துவம்.

இந்த வகையில் சாப்ளினின் மனநிலை பாதிக்கப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்படுகிறார். மனநிலை சரியான பிறகு, வேறு வேலை தேடவேண்டிய நிலைமை நாட்டில் உருவாகி இருக்கிறது. எங்கு பார்த்தாலும் வேலையில்லாத் திண்டாட்டம்தான். தொழிற்சாலைகளுக்கு முன்னால் வேலை தேடி அலையும் தொழிலாளிகளின் கூட்டம். உள்ளே செல்ல "நான் முந்தி நீ முந்தி" என்று போட்டி போடும் தொழிலாளிகள்! எப்படியோ உள்ளே நுழைந்து விடுகிறார் சாப்ளின். ஆனால் சில விநாடிகளிலேயே அந்தத் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம்!

வெடி மருந்துகளை எடுத்துச் செல்லும் ஒரு லாரியில் தாவி ஏறுகிறார் சாப்ளின். ஆனால் கீழே தள்ளப்படுகிறார். லாரியின் பின்னால் நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு பலகைக்கு சிவப்பு கொடி மாட்டப்பட்டிருக்கிறது. கீழே விழும் பொழுது அந்தக் கொடி சாப்ளின் கையில்! லாரி ஓட்டுநருக்கு அதைத் தெரிவிக்கும் வகையில் அந்தக் கொடியை உயர்த்தி ஆட்டுகிறார். அதே நேரத்தில் அவருக்குப் பின்னால் வருகிறது. வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களின் ஊர்வலம்! சிவப்புக் கொடியுடன் முன்னால் நின்று கொண்டிருக்கும் சாப்ளினை பொலிஸ்காரர்கள் கூட்டத்திற்கு அவர்தான் தலைவர் என்று எண்ணி விடுகிறார்கள்! விளைவு உடனடியாக கைதாகிறார். சிறையில் தள்ளப்படுகிறார்.

சிறையில் கைதியாக இருக்கும் பொழுது சாப்ளின் தப்பித்து ஓடப்பார்க்கும் சில கைதிகளைப் பிடிப்பதில் உதவி செய்கிறார். அதன் பலனாக சிறை அதிகாரி சாப்ளினுடைய சிறைவாச காலத்தைக் குறைக்கிறார். ஆனால் சாப்ளின் வெளியே செல்ல மறுக்கிறார்! அதற்குக் காரணம் சிறையில் சுகமாக வாழ எல்லா வசதிகளும் உள்ளன! தங்க இடம் தனி அறை.... படுக்கை... வேளா வேளைக்கு உணவு... வெளியே வேலையைத் தேடி அலைய வேண்டாத நிலைமை! வெளி உலகத்தில் இந்த சுகம் எதுவுமே இல்லை. சிறைவாசம் சாப்ளினுக்கு சொர்க்க வாசமாகவே தெரிகிறது!

(இந்த சிறைவாச சுகங்களைப் பற்றிய கருத்துக்களை கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் 1947இல் வெளிவந்த "பைத்தியக்காரன்" என்ற தன்னுடைய படத்தில் பாடலில் புகுத்தினார். பரபரப்பான 'லக்ஷ்மி காந்தம்' கொலை வழக்கில் தியாகராஜ பாகவதருடன் என்.எஸ்.கிருஷ்ணனும் கைதாகி, செய்யாத குற்றத்திற்காக முப்பது மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தார். அவர் சிறையிலிருந்து வெளிவரும் பொழுது "பைத்தியக்காரன்" தயாரிப்பில் இருந்தது. அதில் கிருஷ்ணனுக்காக ஒரு வேடம் உருவாக்கப்பட்டது. அதில் 'ஜெயிலுக்குப் போனவங்க...' என்ற பிரபலமான பாடலில் இந்த ஜெயில் அனுபவ வரிகளைப் புகுத்தினார். இந்தப் பாடலும், அந்த வரிகளும் அந்நாளில் மக்களின் ஆதரவைப் பெற்றன)

சிறையிலிருந்து வெளிவந்த பிறகு ஒரு துறைமுகத்தில் கப்பல்களை 'ரிவட்' (Rivot) செய்யும் வேலை சாப்ளினுக்குக் கிடைக்கிறது. அங்கு ஒரு பெண்ணைச் சந்திக்கிறார். அவள் மிகவும் ஏழை. ரொட்டியையும், வாழைப்பழத்தையும் திருடித்தான் அவள் வாழ்க்கை நடக்கிறது. இதற்கிடையில் சாப்ளின் வேலை செய்யும்பொழுது இன்னும் முழுமையாகத் தயார் செய்யப்படாத ஒரு கப்பலை முடுக்கி விடுகிறார். அது தானாகவே கடலுக்குள் சென்று மூழ்கி விடுகிறது. சாப்ளினின் வேலை பறிபோகிறது.

ரொட்டி பழத்தைத் திருடும் பெண் பொலிஸாரிடம் அகப்பட்ட பொழுது சாப்ளின் நான்தான் திருடினேன் என்று குற்றத்தைத் தன் மீது சுமத்திக் கொள்கிறார். ஆனால் பொலிஸ்காரர்கள் அவரை நம்பவில்லை! பொலிஸ் அந்தப் பெண்ணை இழுத்துச் செல்கிறது. வெளிஉலகம் மிகவும் பயங்கரமானது. ***(தொடரும்)***



# பாடும் நிலாவின் சாதனைப் பயணம்

**பின்னர்** பாடல் பதிவு நடந்தது. எஸ்.பி.பாலசுப்பிரமணியமும், பி.சுசீலாவும் அந்தப் பாட்டைப் பாடி முடித்தனர். பாடல் நன்றாக வந்திருப்பதாக எம்.எஸ்.வி. கூறினார்.

சி.வி.ராஜேந்திரன் டைரக்ஷனில் உருவான "சுமதி என் சுந்தரி"யின் படப்பிடிப்பு முடிவடைந்ததும், தொழில் நுட்பக் கலைஞர்களுக்குப் படம் போட்டுக்



காட்டப்பட்டது. பாலசுப்பிரமணியம், தன் குடும்பத்துடன் சென்றிருந்தார்.

"பொட்டு வைத்த முகமோ" பாடல் காட்சியில், பாலுவின் பாட்டுக்கு ஏற்ப சிவாஜி தன் பாணியை மாற்றி நடித்திருந்தார். சிவாஜியின் ஆற்றலைக் கண்டு பிரமித்துப் போனார் பாலு.

படம் முடிந்ததும், எல்லோரும் பாலுவைச் சூழ்ந்து கொண்டனர். "பொட்டு வைத்த முகமோ பாடல் பிரமாதம்" என்று பாராட்டினர்.

1971 ஏப்ரல் 14ஆம் திகதி தமிழ்ப் புத்தாண்டு அன்று வெளிவந்த "சுமதி என் சுந்தரி" வெற்றிப் படமாக அமைந்தது.

### தெலுங்கில் வாய்ப்பளித்த கிருஷ்ணா

தெலுங்கில் என்.டி.ராமராவ், ஏ.நாகேஷ்வர ராவ் ஆகிய இருவரும் கொடிகட்டிப் பறந்த காலகட்டம் அது. அவர்களுக்கு கண்டசாலாதான் பின்னணியில் பாடி வந்தார். தெலுங்கு பின்னணி பாடகர்களில் "முடிசூடா மன்னன்" அவர்தான்.

வயதானதால், பாடுவதை குறைக்கலானார் கண்டசாலா. அப்போது பாலசுப்பிரமணியத்துக்கு வாய்ப்புக்கள் வரலாயின. அதிலும் ஒரு இடையூறு. ராமகிருஷ்ணன் என்ற இளம் பாடகர், ஏறக்குறைய கண்டசாலாவைப் போன்ற குரல் கொண்டவர். அவர் என்.டி.ராமராவுக்கு குரல் கொடுக்கலானார். கண்டசாலாவின் குரலை மறக்க முடியாத ஆந்திர ரசிகர்கள், ராமகிருஷ்ணன் குரலில் ஆறுதல் அடைந்தனர்.

### தெலுங்கு காமெடி நடிகர்களுக்கு, பாலு பாட நேரிட்டது.

இந்த சமயத்தில், ஒரு எதிர்பாராத திருப்பம் ஏற்பட்டது. நடிகர் கிருஷ்ணா நடித்த படங்கள் பெரும் வெற்றி பெற்றதால், அவர் சூப்பர் ஸ்டாராக உயர்ந்தார். அவருக்குப் பாலசுப்பிரமணியத்தின் குரல் வெகுவாகப் பொருந்தியது. "இனி என் படங்களுக்கு நீங்களே தொடர்ந்து பாடுங்கள். மற்ற பிரபல நடிகர்களுக்கும் நீங்கள் பாடலாம். ஆனால், காமெடி நடிகர்களுக்குப் பாடாதீர்கள்" என்று பாலுவிடம் கூறினார், கிருஷ்ணா.

அதைத் தொடர்ந்து கிருஷ்ணாவுக்கும், மற்ற பிரபல நடிகர்களுக்கும் பாலு பாடினார். தெலுங்கு பின்னணி பாடகர்களில் முதல் இடத்தை விரைவிலேயே பெற்றார்.



தமிழ், தெலுங்கு, கன்னடம் என்று தென்னிந்திய மொழிகளில் தினமும் இரவு, பகலாகப் பாடினார் பாலசுப்பிரமணியம். அவர் புகழ் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போயிற்று.

### ரஜினி, கமலுக்குப் பாடிய பாடல்கள்!

ரஜினிகாந்த், கமலஹாசன் ஆகியோருக்கு ஏராளமான பாடல்களை எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பாடினார்.

*(தொடரும்)*


## சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு
## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

### உளவியல்சார் உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி

**தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும் பாடநெறி**

Ø வகுப்பறைக் கற்பித்தல் (12 மாதங்கள்)

Ø பிரயோக களப்பயிற்சி (06 மாதங்கள்)

Ø வார இறுதி நாட்களில் நடாத்தப்படும் பாடநெறி

**தகைமைகள் :**

♦ க.பொ.த. (உ/தரம்) சித்தியடைந்திருத்தல்

**பாடநெறிக் கட்டணம் :**

| | | |
|---|---|---|
| பதிவுக் கட்டணம் | ரூபா. | 300.00 |
| பாடநெறிக் கட்டணம் | ரூபா. | 22000.00 |

**பயன்கள் :**

⇒ வெற்றிகரமாகப் பாடநெறியைப் பூர்த்தி செய்பவர்களுக்குத் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தால் வழங்கப்படும் டிப்ளோமா சான்றிதழைப் பெறும் வாய்ப்பு.

⇒ சுய அபிவிருத்திக்குத் தேவையான வழிகாட்டல்கள்.

⇒ உரிய முறையில் தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கான தொழில்வாண்மையான தகைமை உரித்துடையதாதல்.

⇒ தொழில் அபிவிருத்திக்கு ஆக்கபூர்வமான முறையில் பங்களிப்பு வழங்கல்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி - 25.05.2007 ஆகும்.**

பாடநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு பணிப்பாளர் நாயகத்தின் பெயரில், கொழும்பு - 07, கறுவாக்காடு தபால் அலுவலகத்தில் மாற்றக்கூடிய விதத்தில் ரூபா. 25/- க்கான காசுக்கட்டளை (Money Order) ஒன்றினைக் கீழே குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு அனுப்பியோ அல்லது நேரில் வந்து சமர்ப்பித்தோ விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்,**
**191, தர்மபால மாவத்தை,**
**கொழும்பு - 07.**
**தொ.பேசி இல:- 01-2694496**

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## கொலையாளிகள் பற்றித் தகவல் திரட்ட புலனாய்வுக்குழு கொழும்பு விரைவு

**ராஜீவ்** காந்தி கொலைபற்றி விசாரணை நடத்தி வந்த புலனாய்வாளர்கள், இதற்கு முன்னர் தமிழ் நாட்டில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதல்கள் பற்றியும் விசாரணை நடத்தினர். சென்னை சக்காரியா கொலனியில் பத்மநாபா சுட்டுக் கொல்லப்பட்ட இடத்திற்கு விரைந்த புலனாய்வாளர்கள் அங்கிருந்த மரக்கதவுகளில் சிறு உலோகத் துண்டுகள் துளைத்திருந்ததைக் கண்டனர் எஸ்.எப்.ஜி - 87 என்ற குறியீட்டுடன் காணப்பட்ட, வெடிக்காத கிரனைட் ஒன்றினையும் அந்த இடத்தில் புலனாய்வாளர்கள் கண்டு பிடித்தனர். வெடிக்காத இந்த கிரனைட், ராஜீவ் காந்தியின் படு கொலைக்குப் பின்னர் தமிழ்நாடு சட்ட வைத்திய ஆய்வு கூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்ட இடத்திலிருந்த மரக்கதவுகளில் காணப்பட்ட உலோகக் குண்டுகளை ஒத்த சிறிய குண்டுகள், அந்த கிரனைட்டுகளில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த கிரனைட்டுக்குள் 0.2 மில்லிமீற்றர் விட்டமும் 0.05 மில்லி கிராம் எடையும் கொண்ட 2800 சிறு உலோகக் குண்டுகள் வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இந்த கிரனைட்டுக்குள் 60 சதவீதம் ஆர்.டி.எக்ஸ். வெடி மருந்தும் 40 சதவீதம் ரி.என்.ரி.என்ற வெடிமருந்தும் கொண்ட கலவை இருந்தமை தெரியவந்தது. ஆனால், ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட இடத்தில் ஆர்.டி. எக்ஸ். வெடி மருந்து மட்டுமே பயன்படுத்தப்பட்டமை பரிசோதனையின்போது தெரிய வந்தது. பத்மநாபா படுகொலை செய்யப்பட்ட இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கிரனைட்டுக்குள் காணப்பட்டதைப் போன்ற சிறிய உலோகக் குண்டுகளே, ராஜீவ் காந்தி கொலையுண்ட இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பத்மநாபா கொலையில் சம்பந்தப்பட்டவர்களை இன்றுவரை தமிழகப் புலனாய்வாளர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. பத்மநாபா கொலையில், புலி இயக்கத்தைச் சேர்ந்த டேவிட் மற்றும் ரகுவரன் ஆகியோர் தாக்குதலை நடத்தியதாக இந்தியப் புலனாய்வு அமைப்புகள் நடத்திய விசாரணையிலிருந்து தெரிய வந்தது. இருந்தாலும், பத்மநாபா கொலையோடு சம்பந்தப்பட்டவர்களின் புகைப்படங்களைக் கூட இந்தியப் புலனாய்வாளர்களால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இந்த இரு கொலைச் சம்பவங்களிலும் ஒரே விதமான உலோகக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டமையை வைத்துக் கொண்டு உடனடியாக ஒரு முடிவுக்கு வருவதற்கு புலனாய்வாளர்களால் முடியவில்லை.




அடுத்ததாக விசேட புலனாய்வுப் பிரிவினர் ஹரிபாபுவினால் எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஆராயத் தொடங்கினர். ஹரிபாபு கூட்ட நிகழ்ச்சிகளைப் படம் பிடிப்பதற்கென கூலிக்கு அமர்த்தப்பட்ட ஒருவர் அல்லது கொலைக் குழுவைச் சேர்ந்தவரா என்பது பற்றி திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ள முடியாமல் புலனாய்வாளர்கள் திக்குமுக்காடினர். விசாரணைகளின் போது ஹரிபாபுவின் குடும்பம் ஓர் ஏழைக் குடும்பமென்பது தெரிய வந்தது.

அவரது வீட்டை முற்றுகையிட்டு சோதனை நடத்திய போது தடயங்கள் எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. சந்தேகத்திற்கிடமான பொருட்கள் அவரது வீட்டிலிருந்து ஏற்கனவே அப்புறப்படுத்தப்பட்டது போல் தெரிந்தது.

ஹரிபாபுவின் கமராவிலிருந்து பெறப்பட்ட புகைப்படங்களை வைத்து ஏதாவது பயன்மிக்க தகவல்களைப் பெற முடியுமாவென்று புலனாய்வாளர்கள் முயற்சி செய்தனர். குண்டு வெடிப்பில் காயமுற்றவர்களையும் ஸ்ரீபெரம்புதூர் கூட்டத்திலிருந்தவர்கள் என்று கருதப்பட்டவர்களையும் அணுகி ஏதாவது தகவல்கள் பெறமுடியுமா என்று புலனாய்வாளர்கள் முயற்சி

(அரசியல் தொடர்)

செய்தனர். குண்டுவெடிப்பிற்கு முன்னர் கூட்ட மேடைக்கு அருகிலிருந்தவர்கள் பற்றித் துருவித் துருவி விசாரிக்கப்பட்டனர். குண்டு வெடிப்பில் இறந்து போன லதா கண்ணன், கோகிலா ஆகியோரின் புகைப்படங்களையும் இசையமைப்பாளர் சங்கர் கணேஷ் கூட்டமேடையில் காங்கிரஸ் முக்கியஸ்தர் ஒருவருடன் காணப்பட்ட புகைப்படங்களையும் காட்டி தகவல் பெற எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

கொல்லப்படுவதற்கு முதல் நாள் லண்டனிலிருந்து வருகை தந்த இலங்கையைச் சேர்ந்த தமிழ் இளைஞரொருவர் நகரிலுள்ள ஆடம்பர ஹோட்டலொன்றில் தங்கியிருப்பதாக புலனாய்வாளகளுக்கு மே மாதம் 27ஆம் திகதி தகவல் கிட்டியது. இசையமைப்பாளர் சங்கர் கணேஷுடன் அந்த இளைஞர் தொடர்பு கொண்டிருந்தாரென்றும், அன்றைய தினம் இரவே அந்த இளைஞர் கொழும்புக்குப் புறப்படு வதாகவும் தகவல் வழங்கியவர்கள் தெரிவித்தனர். குண்டுவெடிப்புக்கு முன்னர் எடுக்கப்பட்ட புகைப்படத்தில் காணப்பட்ட குர்தா பிஜாமா அணிந்த வாலிபராக இருக் கலாமென்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆயுதம் தாங்கிய பொலிஸாருடன் ஹோட்டல் முற்றுகையிடப்பட்டு சம்பந்தப்பட்ட வாலிபர் தங்கியிருந்த அறை தீவிர தேடுதலுக்கு இலக்கானது. கொலையாளியைத் தேடி வந்த பொலிஸாருக்கு எந்தத் தடயமும் கிட்டவில்லை. மதுபானப் போத்தல்களும் விபச்சாரிகளும் மட்டும் அந்த அறையில் காணப்பட்டனர். லண்டனிலிருந்து வந்த வாலிபர் அங்கிருக்கவில்லை. அவர் கொழும்பு செல்வதற்காக மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு சென்று விட்டாரென்று தகவல் கிட்டியது.

விமான நிலையத்திற்கு விரைந்த விசேட புலனாய்வுக் குழு லண்டன் வாலிபரை மடக்கிப் பிடித்தது. அவர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது அந்த வாலிபர் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரிட்டிஷ் பிரஜையெனத் தெரிய வந்தது. அவர் உண்மையிலேயே மே மாதம் 20ஆம் திகதி சென்னைக்கு வந்திருந்தார். இலங்கையில் இசை நிகழ்ச்சியொன்றினை நடத்துவதற்காக சில கலைஞர்களைத் தொடர்பு கொண்டு விட்டு அவர் இசை நிகழ்ச்சி தொடர்பான விடயங்களைக் கவனிப்பதற்கு கொழும்பு புறப்படவிருந்தபோதே விமான நிலையத்தில் பிடிக்கப்பட்டார். ராஜீவ் படுகொலையோடு எவ்வித சம்பந்தமுமில்லாத அந்த அப்பாவி இளைஞர் விமானத்தைத் தவறவிட்டதுதான் மிச்சம்.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

சில நாட்களுக்குப் பின்னர் சென்னை சர்வதேச விமான நிலையத்திலிருந்து விசேட புலனாய்வுக் குழுவினருக்குச் சந்தேக நபரொருவர் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்தது. அங்கு விரைந்த விசேட புலனாய்வு குழுவினரைக் கண்டதும் அங்கு தமிழ் இளைஞர்

> கொல்லப்படுவதற்கு முதல் நாள் லண்டனிலிருந்து வருகை தந்த இலங்கையைச் சேர்ந்த தமிழ் இளைஞரொருவர் நகரிலுள்ள ஆடம்பர ஹோட்டலொன்றில் தங்கியிருப்பதாக புலனாய்வாளகளுக்கு மே மாதம் 27ஆம் திகதி இத்தகவல் கிட்டியது. இசையமைப்பாளர் சங்கர் கணேஷுடன் அந்த இளைஞர் தொடர்பு கொண்டிருந்தாரென்றும், அன்றைய தினம் இரவே அந்த இளைஞர் கொழும்புக்குப் புறப்படுவதாகவும் தகவல் வழங்கியவர்கள் தெரிவித்தனர். குண்டுவெடிப்புக்கு முன்னர் எடுக்கப்பட்ட புகைப்படத்தில் காணப்பட்ட குர்தா பிஜாமா அணிந்த வாலிபராக இருக்கலாமென்றும் தெரிவிக்கப்பட்டது.

சந்தோசத்தால் துள்ளிக் குதித்தார். இந்த இளைஞர்தான் கொழும்புக்கு புறப்படவிருந்த சமயம் விமான நிலையத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டவராவார். கொழும்பில் சகல இசை நிகழ்ச்சிகளையும் முடித்து விட்டு லண்டன் செல்வதற்காக சென்னை விமான நிலையத்திற்கு வந்திருந்தபோதே மீண்டும் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டார். உண்மையிலேயே சென்னை யைச் சேர்ந்த இசைக் கலைஞர் குழுவொன்று கொழும்பு சென்றிருந்த செய்தி ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

பத்திரிகைகள் மூலமாகவும் வானொலி, தொலைக் காட்சி மூலமாகவும் தற்கொலைக் குண்டுதாரி பற்றியும் குர்தா பிஜாமா வாலிபர் பற்றியும் விளம்பரங்கள் செய்யப்பட்டன. தற்கொலைக் குண்டுதாரி பற்றியும் குர்தா பிஜாமா வாலிபர் பற்றியும் தெரிந்தவர்கள் தமக்குத் தகவல் தருமாறு விளம்பரங்கள் மூலம் கேட்கப்பட்டன. விசேட புலனாய்வுப் பிரிவினரின் தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டு, தகவல் தருபவர்களின் பெயர் விபரங்கள் இரகசியமாக வைக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது. மே மாதம் 30ஆம் திகதி இந்த விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. அன்றைய தினமே விசேட புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சிறு குழுவொன்று விசாரணைகளுக்காக கொழும்புக்குப் புறப்பட்டது.

(தொடர்ந்து வடியும்....)




**சின்னச்** சின்ன விஷயத்திற்கெல்லாம் யாரும் ராமபத்ரனைப் போய்த் தொந்தரவு செய்யமாட்டார்கள்.

கொஞ்ச தூரம் நடப்பதற்கு முன் இருட்டுக்கு இன்னும் கருமை கொட்டியது. பார்வைக்கு எதுவுமே தட்டுப்படாத இருட்டு.

"இந்த வழியில் எப்படி நடக்கிறது. பாஸ்கரா வழி மறந்திட்டாயா?" எட்வர்ட்டு கேட்டான்.

முன்புறம் ஏதோ அசைந்த மாதிரி தெரிந்தது.

"யாரது?" - பாஸ்கரன் அதட்டிக் கேட்டான்.

"உங்களைக் கூப்பிட்டுட்டு வர்றதுக்கு அனுப்பியிருக்காங்க...." குரல் மட்டும் கேட்டது. யாரும் தட்டுப்படவில்லை. ஆனால் முன்னால் யாரோ நடக்கும் சத்தம். பின் தொடர்ந்தார்கள்.



"பயப்படாதீங்க. நீங்களே வித்தை தெரிஞ்சவர்தானே?" இப்பொழுது அந்தக் குரல் அவர்களுக்குப் பின்னாலிருந்து வந்தது.

"ஆமாம். அது எப்படி உங்களுக்குத் தெரியும்?" பாஸ்கரன் திருப்பிக் கேட்டான்.

"அதையெல்லாம் தெரிஞ்ச ஆள்தான் வந்திருக்கிறேன்." இருட்டிலிருந்து பதில் கிடைத்தது. கொஞ்ச தூரம் நடந்தபோது தூரத்தில் வெளிச்சம் தெரிந்தது. அதிகமாகப் பிரகாசமில்லாத மஞ்சள் வெளிச்சம்.

"அதோ அங்க இருக்காங்க. அதுவும் தனியா...." இப்பொழுது குரலுக்குரிய உருவம் ஏறத்தாழத் தெரிந்தது. பாஸ்கரனும் எட்வர்டும் உற்றுப் பார்த்தார்கள்.

நிச்சயம் அது மனித உருவமல்ல.

எருமை மாடு.

அதுவரை வழிகாட்டிக் கொண்டு வந்ததும், பேசியதும் இதுவேதானா? இதிலிருந்தே தாங்கள் போகுமிடம் மோசமான இடமாக இருக்காது. அபரிதமான சக்திகளின் இருப்பிடமாகத்தான் இருக்கும் என்பதும் எட்வர்டுக்கு உறுதியானது. ஆனால், பாஸ்கரனுக்கு ஒரு வினாடி இது ஒரு அதிசயமாகத் தோன்றினாலும் சட்டென்று அது மறையவும் செய்தது.

ராமபத்ர குருவை, அவரது சக்திகளை அதிகமாகவே அறிந்தவன் பாஸ்கரன்.

வீட்டின் நிலை வாசற்படியை நெருங்கியவுடன் முன்புறம் நடந்து கொண்டிருந்த எருமை மாடு இடது புறமாகத் திரும்பியது. திரும்பி இருளில் கலந்தது. இருவரும் வீட்டிற்குள் நுழைந்தார்கள். பெரிய திரிபோட்ட குத்துவிளக்கின் ஒளி அந்த இடம் தெளிவாகத் தெரிந்தது.

குளக்கரை ராமபத்ரன், உட்கார்ந்திருந்த பொழுதே அவரது உயரம் தெரிந்தது. உடம்பு விறைத்து நிமிர்ந்திருந்தது. மனுஷன் ஆறேகால் அடிக்கு ஒரு செ.மீ. கூட குறையாமலிருந்தார். உயரத்திற்கேற்ற உடல்வாகு. கம்பளிப் போர்வை மாதிரி நெஞ்சில் அடர்ந்திருந்த கறுப்புமுடி வழித்து விட்டிருக்கிற தலையில் ஒரே ஒரு குடுமி, மீசையும் தாடியையும் சுத்தமாய் வழித்து.... அடர்த்தியான சிறகை விரித்த மாதிரி இரண்டு புருவங்கள், கூரிய, ஆராய்ச்சிக் கண்கள், கழுத்தில் தங்கத்தில் கட்டிய பெரிய ருத்ராஷக் கொட்டை மாலை. அதற்கு மேல் முப்புரி நூல். நூலில் ஒரு தங்கச்சாவி டாலர் போல் கிடந்தது.

"யாரு.... பாஸ்கரனா? கூட வந்திருக்கிற கிறிஸ்தவர் யார்' ராமபத்ர குரு கேட்டார்.

"என் சிநேகிதன்."

"வல்லிக்கோட்டை பங்களாவை வித்துட்டாங்க. இல்லையா?" அடுத்த கேள்வி.

"ஆமாங்க."

"வாங்கினவரும் ஒரு கிறிஸ்தவர்தான் இல்லையா?"

"ஆமாம்."

"கேள்விப்பட்டேன். பழைய போர்த்துக்கீசிய குடும்பத்துக்காரர். பெரிய பேராசைக்காரனாமே!"

"நீங்க சொன்னவை எல்லாம் அப்பட்டமான உண்மை" பாஸ்கரன் நமஸ்கரித்தபடியே பதில் சொன்னான்.

ராமபத்ரன் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தார். வந்த இருவரும் அப்பொழுது ஒரு அற்புதத்தைக் கண்டனர். எரியும் விளக்கின் திரியைத் தூண்டி விட்டது, விளக்கின் நிறத்திலிருந்த பளபளப்பான ஒரு பாம்பு. முதலில் அந்தப் பாம்புகூட விளக்கோடு சேர்ந்து செய்யப்பட்ட ஒரு பகுதியோ என்றுதான் தோன்றியது. ஆனால், அதன் பிறகு அசைந்த போதுதான் பாம்பென்பதே புரிந்தது.

"இளநீர் சாப்பிடலாமே" - கேட்டபடியே ராமபத்ரன் கிழக்குப் புறமாயப் பார்த்தார்.

"இளநீர் மட்டும் போதும்...." - பாஸ்கரன் பதில் சொன்னான்.

**புஷ்பாநாத்**
**தமிழில்**
**சிவ**

"நீலி... ரெண்டு இளநீர்..." - ராமபத்ரன் ஆணையிடுவது மாதிரி சொன்னார்.

"நீலி..... என்கிற பெயரைக் கேட்ட போதுதான் பாஸ்கரன் உடம்பு புல்லரித்தது. அதற்குப் பின்னணியாக ஒரு கதையே இருந்தது. நேரிலேயே பார்த்த சம்பவம். இது நடந்தது தென்னாட்டுப் பக்கம். எட்டிக்காட்டு நீலியென்றும் குறிப்பிடுவார்கள். சிலர் பேயென்கிறார்கள். சிலர் காட்டேரி என்கிறார்கள். அது கொடுக்கும் தொல்லை பல வகைப்பட்டது.

வயதானவர்கள் கிடைத்தால் ஈரலும் நெஞ்சும் போதும். இளைஞர்கள் கிடைத்தால் அவர்களுடன் சக்தியையும் சேர்ந்து உறிஞ்சும். ஆளை மயக்கும் அழகான பருவப் பெண்ணாய் வழியில் நின்றிருக்கும். பார்த்தவர்கள் பலியாக வேண்டியதுதான்.

(பயங்கரம் தொடரும்)

# மனதுக்கு நிம்மதி

# நல்லவரா? கெட்டவரா?

"**சுவாமி....** எங்கள் மகளை நினைத்தாலே பயமாக இருக்கிறது. இருபது வயசாகிறது. கல்லூரியில் படிக்கிறாள். ஆனால், கொஞ்சம்கூடப் பொறுப்போ, சுறுசுறுப்போ இல்லை. வீட்டில் இருக்கும் நேரத்தில் டெலிபோனில் யாருடனாவது மணிக்கணக்காகப் பேசுகிறாள் அல்லது சதா டி.வி.யே கதியென்று கிடக்கிறாள். இல்லாவிட்டால் இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்குகிறாள். வீட்டில் அவள் எந்த வேலையும் செய்வது இல்லை. தனது துணிமணிகளைக்கூட கழுவி வைப்பதில்லை..."


டீன் ஏஜ் வயது மகள்களைப் பற்றி பெற்றோர் பலர் அடிக்கடி என்னிடம் வந்து இப்படிப் புலம்புவதுண்டு!

"என் மகன் மாதிரி ஒரு முழுச்சோம்பேறியை உலகில் எங்குமே பார்த்திருக்க முடியாது. எட்டு மணிக்கு மேல்தான் அவனுக்கு உலகம் விடியும். கார்ப்பரேஷன் குப்பை லாரி மாதிரி அறையை வைத்திருப்பான். தெருவோர டீக்கடை மாதிரி எந்த நேரமும் மியூசிக்கை அலறவிடுகிறான். எங்கே போகிறான், வருகிறான் என்பது யாருக்கும் தெரியாது. திடீரென்று முக்கியமான புத்தகம் வாங்கிவர வேண்டும் என்று நண்பன் வீட்டுக்கோ லைப்ரரிக்கோ போகிறேன் என்று கிளம்பிப் போய்விடுவான். ஆக மொத்தத்தில் அவன் எங்களுக்கு உபயோகமாக எந்த வீட்டு வேலையும் செய்வதில்லை."

இப்படித் தங்கள் மகன்களைப் பற்றிப் புலம்பும் பெற்றோரையும் நான் தினம் தினம் சந்திக்கிறேன். இவர்கள் சொல்வதை என்னால் நம்ப முடியவில்லை!

காரணம், உலகில் சோம்பேறிகள் என்று யாருமே இல்லை. எந்த ஒருவரும் சூழ்நிலையால்தான் சோம்பேறியாக ஆக்கப்படுகிறார்கள். அப்படி ஒரு சூழ்நிலையை வீடுகளில் உருவாக்கிக் கொடுப்பது பெரும்பாலும் பெற்றோராகத்தான் இருக்கிறார்கள். இந்த உண்மை கொஞ்சம் கசக்கத்தான் செய்யும்.

இதோ, இந்தக் கதையைப் படியுங்கள்.




"எங்கள் குடும்பம் மிகவும் கட்டுப்பாடான குடும்பம். எங்கள் வீட்டில் யாராக இருந்தாலும் சரி, காலை ஐந்து மணிக்கே எழுந்துவிட வேண்டும். குளிக்காமலோ, சாமி கும்பிடாமலோ யாரும் சாப்பிடக்கூடாது. இப்படி இருந்த எங்கள் குடும்பத்தில் ஒரு நாள் ஒரு புதியவர் நுழைந்தார். அவர் மிகவும் புத்திசாலி. சரித்திரகாலச் சம்பவங்களானாலும், நிகழ்கால அரசியலானாலும், எதிர்காலத்தில் வரப்போகின்ற அறிவியல் மாற்றங்களானாலும்.... சினிமா, விளையாட்டு என்று அவருக்கு அத்தனையுமே அத்துபடியாக இருந்தது. அதைப் பற்றியெல்லாம் சதா பேசிக்கொண்டு இருப்பார். நாங்களும் திறந்தவாய் மூடாமல் கேட்டுக்கொண்டேயிருப்போம்.

சில சமயம், அந்தப் புதியவர் வீட்டின் நடு 'ஹாலில் வைத்து திடீரென்று குடிக்க ஆரம்பித்து விடுவார். எதிரில் யார் இருக்கிறார் என்பதைப் பற்றிக் கவலையேபடாமல் செக்ஸ் சம்பந்தமான விஷயங்களைக்கூட கூச்சநாச்சம் இன்றி விவாதம் செய்யத் தொடங்கிவிடுவார். அவருடைய பேச்சுக்கள், நடவடிக்கைகள் இப்படிப் பல சமயம் எங்களில் பலருக்குத் தர்மசங்கடத்தை ஏற்படுத்தினாலும் யாருக்கும் அவரை வீட்டைவிட்டு அனுப்ப மனசில்லை. காரணம், அவரவருக்குப் பிடித்தமான விஷயங்களை தேனொழுகச் சொல்வதில் அவர் மன்னனாயிருந்தார்.

இதெல்லாம் நடந்து பல வருடங்கள் ஓடி விட்டன. நான் இப்போது வெளியூரில் கம்பியூட்டர் சாப்ட்வேர் என்ஜினியராக வேலை செய்கிறேன். சமீபத்தில் வார விடுமுறையில் எங்கள் வீட்டுக்கு வந்தேன். அப்போதும் அந்தப் புதியவர் ஹாலில் தனது வழக்கமான இடத்தில் அமர்ந்து எப்போதும் போல ஓயாமல் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார். சுறுசுறுப்பாக ஆடி ஓடி வேலை செய்யும் எங்கள் அப்பாவும், காலையில் நிற்க நேரமின்றி வீட்டுவேலைகளில் மூழ்கியிருக்கும் அம்மாவும் சாவகாசமாக உட்கார்ந்து அந்தப் புதியவர் (இப்போது அவர் பழையவர்) பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் முகத்தில் அந்தப் பழைய உற்சாகம் இல்லை. ஒருவித சலிப்புத்தன்மை நிரம்பியிருந்தது. என்றாலும் இடத்தைவிட்டு எழுந்து போகாமல், அவர் பேசுவதைக் கேட்டே தீர வேண்டும் என்பது ஒரு கடமை போல் கேட்டுக்கொண்டிருந்தார்கள். வெளியே கோயில் - குளங்களுக்குப் போய் வருவது, உறவினர் வீடுகளுக்குப் போய் அளவளாவி மகிழ்வது போன்ற பழைய நல்ல பழக்கவழக்கங்களைக் கைவிட்டிருந்தார்கள். மொத்தத்தில் சோம்பேறிக் குடும்பமாகவே மாறிப் போயிருந்தார்கள். அதற்கெல்லாம் காரணம் அந்தப் புதியவர்தான். அவர் நல்லவரா, கெட்டவரா? நீங்களே சொல்லுங்கள்... அவர் பெயர் டெலிவிஷன்!"

டி.வி-யில் ஒரு சீரியல் விடாமல் பார்த்துக் கொண்டிருக்கும் அம்மாக்களே... உங்களை ஒன்று கேட்கலாமா?



பரீட்சைக்குப் படிக்காமல் உங்கள் குழந்தைகள் டி.வி-யில் கிரிக்கெட் மாட்ச் அல்லது வேறு ஏதாவது நிகழ்ச்சி பார்த்துக்கொண்டிருக்கும்போது எந்த முகத்தை வைத்துக்கொண்டு அவர்களிடம் உங்களால் "டி.வி. பார்க்காதே! பாடத்தைப் படி... வேலையைச் செய்! சுறுசுறுப்பாக இரு!! என்று புத்திமதி சொல்ல முடியும்? நீங்கள் சிந்திக்க வேண்டிய கேள்வி இது!

## ஆண்களைக் கவர பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை

**கண்டதும்** காதல், காணாமல் காதல், இப்படிப் பல வித்தியாசமான காதல் அனுபவங்களை நாம் கேள்விப்பட்டிருப்போம். கேக்குறதுக்கு ரொம்ப சுவாரஸ்யமா இருந்தாலும், அதை அனுபவிக்கிறவங்களைத் தான் முழுமையா உணர முடியும்.

இந்த உணர்தலுக்கு முக்கிய காரணம் கவர்தல். இந்த கவர்தல் தான் காதலுக்கே ஆரம்ப நிலை. அதனால், ஆண்களைக் கவர, பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய இரகசியங்கள் என்னென்ன என்று நீங்க தெரிஞ்சுக்க போறீங்க!

* நீங்கள் ஏதாவது ஒரு நிகழ்ச்சிக்குப் போகும் போது, உங்களுடைய உடல் நிறத்துக்கு ஏத்த மாதிரியான காஸ்ட்யூம்சை தேர்ந்தெடுத்து அணிஞ்சுக்கங்க...அதிலும் குறிப்பா, பிங்க் கலர், எல்லா ஆண்களையும் கவரக் கூடிய நிறம். இந்த பிங்க் ஷேட்ஸ் இருக்குற மாதிரியான உடைகள் எல்லோருடைய உடல் நிறத்திற்கும் பொருந்தும்.



* நிகழ்ச்சி நடக்குற இடத்துக்கு போனதும், எங்கையாவது, ஓரமா இடம் இருக்குதான்னு தேடிப் பார்த்து போய் உட்காராமல், அந்த நிகழ்ச்சி நடக்கிற இடத்தோட நடுவுல போய், உங்களுக்கு அறிமுகமானவங்க கிட்ட சகஜமா சிரிச்சுப் பேசுங்க.

* பேசும்போது, உங்க எதிர்பக்கம் நின்னுகிட்டு பேசுறவங்களுடைய கண்களை நேரா பார்த்துப் பேசுங்க. அப்படி பேசும்போது, உங்களுடைய உடல்மொழியையும், கவனத்துல வைச்சுக்கங்க.



* சுவர் மேலே சாய்ந்துக்கிட்டு பேசுறது, டேபிள் மேலே உட்காருவது, பேசும்போது வாயில ஏதாவது போட்டு மென்னுகிட்டே இருக்கிறது, நகம் கடிக்கிறது, இந்த மாதிரியான செய்கைகள் உங்க கிட்ட இருக்கும்போது நீங்கள் ஆண்களை கவர முடியாம போறதுக்கும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கு.

* அதே சமயத்துல உங்களுக்கு அறிமுகமாகிற நண்பர்கள் கிட்ட உங்களைப் பற்றியே ரொம்பப் பெருமையாக பேசிக்கறதும், சரியான அணுகுமுறை இல்லைங்க.

* அந்த நிகழ்ச்சியில உங்களுக்குப் புதுசா, அறிமுகமாகிற ஆண் நண்பர்கள் கிட்ட, உங்களுடைய பழைய காதல் வாழ்க்கையைப் பத்தியோ அல்லது காதலரைப் பத்தியோ பேசாதீங்க. இதுதான் நீங்க தெரிஞ்சுக்க வேண்டிய முக்கியமான விஷயம். ரெண்டு பேரும் ஒவ்வொருத்தரை பத்தி, நல்லா பேசி, மனசு அளவுல புரிஞ்சுக்கிட்டீங்க என்ற சூழ்நிலை வரும்போது நீங்க அவர் கிட்ட இந்த விஷயங்களைப் பகிர்ந்துக்கலாம்.

* நீங்க ஏதாவது நிகழ்ச்சிக்கோ அல்லது வெளி இடங்களுக்குச் செல்லும் போதோ, உங்க மனசுக்குப் பிடிச்ச நபரை நீங்க சந்திக்க நேரிட்டால், இந்த விஷயங்களை மறக்காம, பின்பற்றிப் பழக்கப்படுத்திக்கிங்க.

அப்புறம் வேற என்ன? உங்களுடைய நேரங்களை, இனிமையான முறையில் உங்க மனசுக்குப் பிடிச்ச அவர் அடைய செலவு பண்ணுங்க...

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.213க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

செல்வி கிஜ்ரதுசன் ரயீஸா மன்சூர், ஆலிம் வீதி, மாஞ்சோலைச் சேனை, கிண்ணியா -03

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

| |
|---|
| 1. திருமதி. ஆ.சந்திரகுமாரன், 59/1, 3ஆம் ஒழுங்கை, வெளிக்குளம், வவுனியா. |
| 2. திருமதி. பாலசரஸ்வதி தங்கவேலு, 11,³/3, அன்டர்சன் தொர்மாடி, கொழும்பு-05 |
| 3. கோ.பிரதீபன், கிட்டங்கி றோட், நற்பிட்டிமுனை -06, கல்முனை. |
| 4. மீராமுகைதீன் ஹாலீத், இல.21, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர் - 03A |
| 5. செல்வி. இரா.தாரணி, இல.34,/14, கீனா வீதி, நுவரெலியா. |
| 6. சி. மிதுஷான், சர்மிலன் வீதி, பாண்டிருப்பு -02, கல்முனை. |
| 7. ம. கமலநாதன், 60/21, கண்ணகை அம்மன் கோவில் வீதி, மட்டக்களப்பு. |
| 8. சீ. தங்க்வடிவேல், 91. பயினியர் வீதி, மட்டக்களப்பு. |
| 9. திருமதி. பைசுல் அமீனா ஜலீல், 61/1A, மகாபுத்கமுவ, முல்லேரியாவ. |
| 10. திருமதி. M.சுந்தரேசன், 49, பார்க் வீதி, ஹட்டன். |

## குறுக்கெழுத்துப் போட்டி 215

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 5 | 6 |
| 7 | 8 | 9 | ■ | 11 | ■ |
| ■ | 14 | 15 | ■ | ■ | 18 |
| ■ | 20 | 21 | ■ | 23 | 24 |
| 25 | 26 | ■ | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | ■ |

### இடமிருந்து வலம்

1. தெற்காசிய நாடுகளின் ஒருங்கிணைந்த அமைப்பொன்று.
5. காட்டு முட்செடியொன்று.
7.மருத்துவ குணமுள்ள செடியொன்று. (குழம்பியுள்ளது)
14.உயிர் என்றும் பொருள்.
20.அழகு என்றும் கூறலாம்.
23.நீண்ட ஆயுளையுடைய உயிரினம். (திரும்பியுள்ளது)
25.இரவு என்றும் பொருள்படும். (திரும்பியுள்ளது)
28.கனிவகையொன்று. (திரும்பியுள்ளது)
31. இயற்கை அனர்த்தமொன்று. (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. அர்ஜுன் நடித்த திரைப்படமொன்று.
2. வாழ்த்து என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
3. ஒளி தருவது. (குழம்பியுள்ளது)
5. மழை என்று பொருள்படும்.
18. சைவ சமயம் கூறும் முப்பொருள்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
23. சிலை என்றும் கூறலாம். (தலைகீழ்)
25. நிலம் என்றும் பொருள்படும். (தலைகீழ்)
28. விவசாயிகளுக்கு சேதத்தை ஏற்படுத்துவது. (தலைகீழ்)

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 24.04.2007 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-215
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோர் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 213- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச [1] | ர [2] | ஸ் [3] | ல [4] | தி [5] | ■ |
| தி [7] | ணை [8] | ■ | த [10] | றை [11] | ■ |
| த் [13] | அ [14] | த [15] | ம் [16] | ■ | லை [18] |
| ய [19] | ■ | டு [21] | ■ | ம் [23] | இ [24] |
| ம் [25] | ல் [26] | உ [27] | லா [28] | ச [29] | ■ |
| ■ | ஆ [32] | ■ | ம [34] | ட [35] | லை [36] |

# ஏமாற்றத்தில்... ஒரு மாற்றம்?

"**சேர்** எலக்சனுக்கு வேலை செய்யச் சென்னீங்க செஞ்சோம்..."என்று இழுத்தான் ரஜனி.

"வேலை செஞ்சிங்க...என்ன செய்ய...?" ஆனால் கொரியா நாட்டுக்கு அனுப்புறதுக்கு கோட்டா முடிஞ்சி போச்சே...அந்த அமைச்சர் பய கைய விட்டுட்டானே...என்று கோபமாக சிரித்தார் அமைச்சர் ஏழுமலை...அது அவரது சுபாவம்.

அது சரி இப்ப எதுக்கு சேர் வரச் சொன்னீங்க...? கொரியா சான்ஸ் எதுவும் வந்திருக்கா...? ரஜனி கேட்டான்.

ஆமாடா...எல்லாம் ஒனக்காகத்தான், இந்த பயலுகளுக்காகத்தான் எப்படியாவது இந்த தரம் கொரியாவுக்கு அனுப்புவேன். ஆனா ஒரு கண்டிசன் சம்பளம் கூட்டிக் கேட்டுகிட்டு இருக்கிற நம்ம ஆளுகள எப்படியாவது வேலைக்கு அனுப்பிறனும்...என்ன சொல்லுற...அமைச்சர் ஏழுமலை கரகரப்பாக...அதே வேளை ஒரு கெஞ்சலுடன் பேசினார்.

ரஜனி...தன்னைச் சுற்றி நின்ற வேலையற்ற நண்பர்களான ஆறுமுகம், அய்யாத்துரை, சதாசிவம், கிருஷ்ணசாமி, லோரன்ஸ், வேலாயுதம் எல்லோரது முகத்தையும் திரும்பிப் பார்த்தான்...ஏக்கப் பெருமூச்சுகள்...எதிர்பார்த்து ஏமாந்த சம்பவங்கள் நிழலாடின.

இன்னொரு பித்தலாட்டம் ஆரம்பித்துள்ளதைப் புரிந்து கொண்டதைப் போல மௌனமாக நின்றார்கள்.

எல்லோர் முகத்திலும் வியர்வைத் துளிர்ந்தது. மனதில் கேள்விக்குறி தோன்றியது.

என்னடா...யோசிக்கிற?...டபுள் கெப் எடுத்துக்க, செலவுக்கு எவ்வளவு தேவையோ வாங்கிக்க...சாப்பாடு, போத்தல் எவ்வளவு வேணுமோ நம்ம...பார்கார பரமசிவத்துக்கிட்ட வாங்கிக்க...அமைச்சர் சர்வசாதாரணமாக பேசிக்கொண்டிருந்தார்.

சம்பள உயர்வு கிடைக்குமா சேர் சதாசிவம் கேட்டான். ஏனென்றால் படித்தும் வேலையற்றிருக்கும் பட்டாளத்தில் அவனும் ஒருவன்...தொழிற்சங்க அரசியல் அவனை ஓரங்கட்டி விட்டது.


மொத்தத்தில் ரஜனியுடன் இருந்த அத்தனை பேரும் அமைச்சரின் அடிதடிகள், கைகூலிகள் என்று பெயர் வாங்கியவர்கள். அதனால் வேலை கிடைப்பது...கஷ்டமாகவே இருந்தது.

உழைத்து வாழ்வதற்கு அனுமதிக்கப்படாத விலை போன ஜென்மங்கள். ஏமாளிகள்...

நவீன காலத்து நயவஞ்சக வார்த்தை ஜாலங்களுக்கு அடிமைகளாகி அழிந்து கொண்டிருப்பவர்கள்.

சரி சேர் நீங்க சொல்லுற மாதிரியே செய்யிறோம்....ஆனா எங்க எல்லாத்தையும் எப்படியாவது இந்த தடவை கொரியாவுக்கு அனுப்பிடுங்க சேர்...பரிதாபமாகக் கேட்டான் ரஜனி.

"அட போடா கொரியாவுக்கு இல்லாட்டி மலேசியா...ஜப்பான், நாடா இல்ல" என்னமோ பெரிசா பேசிற...நம்புங்கடா...ஸ்டிரைக்க ஒடைங்க...என்றவாறு ரஜனியின் அருகில் சென்று அவனது தோளில்


-ஆர்.திவ்யராஜன், கொழும்பு - 14.

கையைப்போட்டபடி அணைத்து அழைத்து வந்தார் அமைச்சர் ஏழுமலை. சூடேறி இருந்த உடம்பில் நடுக்கம் கிளம்பியது.

துரோகத்திற்கு துணைப் போவதற்கு ரஜனி கோஷ்டி தயாராகி இருப்பதை ஏழுமலை புரிந்து கொண்டார்.

மனம் குளிர்ந்து போனான் ரஜனி. ஏக்கம் ஓடி ஒளிந்து கொண்டது.

அமைச்சரின் அணைப்பைக் கண்டு நண்பர்களும் அதிர்ந்து போனார்கள்...அப்போது வேகமாக அமைச்சரின் வாசலில் வந்து நின்றது பல லட்ச ரூபா பெறுமதியான இன்டகூலர். அதிலிருந்து மந்திரிகள் முத்துவும், மணியும் இறங்கி வந்தார்கள். ஏதோ நெருங்கிய தோழர்கள் போல ரஜனியையும் மற்றவர்களையும் பார்த்து சிரித்து கைக்குலுக்கி அட்டகாசமான அன்பை வெளிப்படுத்தினார்கள்.

மூன்று நிமிடங்கள்...சலசலத்தது. குடும்பம், தொழில், சொந்தம், பந்தம், அம்மா, தங்கை என்று விசாரித்து பேசிக்கழிந்தது.

ரஜனி...உட்காருடா...மணி அந்த போத்தல் நாலையும் எடுத்துகிட்டு வா...என்று கண்டிப்பான தோரணையில் கூறினார் எழுமலை. மந்திரி மணி எடுபுடியானார்.

மந்திரி மணி பாய்ந்து உள்ளே ஓடினார்...

"பார்த்தியாடா...எப்புடி ஓடுறான்னு...எங்கேயோ இருந்துக்கிட்டு...என்னைய என்னென்னவெல்லாமோ பேசினான்...இப்ப பாரு" என்று எக்காளமிட்டு சிரித்தார் ஏழுமலை.

மந்திரி முத்துவும் கைக்கொட்டி ஆரவாரமாக சிரித்தார்...எங்கள அசைக்கவே முடியாது.

அப்போது போத்தல்கள் கிளாசுகளுடன் தட்டுத்தடுமாறி வந்து சேர்ந்தார் மணி மந்திரி...

மணி...

எண்ணன்னே...காலையிலே தண்ணி போட்ட மாதிரி நடந்து வாரீங்க...என்று ரஜனியை பார்த்து கண்களைச் சிமிட்டியவாறு கேட்டார் ஏழுமலை.

சும்மா போங்க தம்பி ஒங்களுக்கு எப்பவுமே கேலித்தான் என்றார்...மந்திரி மணி.

அண்ணே கோவிச்சிக்கிறாம என் செருப்பு ரூமுல இருக்கு எடுத்துக்கிட்டு வாங்களே...என்று கூறிய ஏழுமலை மறுபடியும் ரஜனியை பார்த்து கண்ணை சிமிட்டினார்.

அதிர்ந்து போன மணி...வாயடைத்து போனார்...மௌனமாக உள்ளே சென்று அமைச்சரின் செருப்புகளை எடுத்து வந்து அவரது காலடியில் போட்டார்...மணி மந்திரி.

மனம் கொதித்தாலும்...வெளியில் சொல்ல முடியாத ஒரு வேதனை அவரை வாட்டியது.

அமைச்சர் ஏழுமலைக்கு இதெல்லாம் பொழுது போக்கு என்பதை எல்லோரும் அறிந்திருந்தாலும்...அப்பாவித்தனமான தொழிலாளர்கள்...இன்றும் அவரையே நம்புவது ஒரு சாபக்கேடாகும்...அமைச்சர் ஏழுமலைக்கு மற்றவர்களின் வேதனை...வேடிக்கை.

நிமிடங்கள் கரைந்தன...

போத்தல்களும் காலியாகின. ஊத்திக் கொடுப்பதில் மந்திரி முத்து வேகமாகயிருந்தார். அமைச்சரின் அசைவுகளுக்கு மட்டுமல்ல, ஆசைகளுக்கும் இசைந்து கொடுப்பவர் என்பது நன்றாகவே விளங்கியது.

போதை ஏறிப்போயிருந்த ரஜனியும், கூட்டாளிகளும் மதி மயங்காமல் நின்றார்கள்.

என்னடா...போதுமா இல்லாட்டி இன்னும் வேணுமா? அமைச்சர் குரல் கனத்தது.

"ஐயோ போதும் சேர் ரஜனி பதற்றத்துடன் சொன்னான்.

சரி அப்படின்னா சம்பள உயர்வு கேட்டு ஸ்டிரைக் பண்ணுற ஆளுகள எப்படியாச்சும் வேலைக்குப் போக வைக்கணும், நான் சொன்னா எதுவும் நடக்கும்ன்னு எல்லாத்துக்கும் புரிய வைக்கிற மாதிரி எல்லாத்தையும் வேலைக்கும் போக வைக்கணும் என்றார் அமைச்சர்.

தொழிலாளிகளின் போராட்டத்தை தொழிற்சங்கத் தலைவரான அமைச்சர் ஏழுமலை முறியடிக்க நினைப்பது ரஜனிக்கும், அவனது கூட்டாளிகளுக்கும் ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் கொடுத்தன என்றாலும் அது அவருக்கே உரிய குணாம்சம் என்பதால் மௌனமாக நின்றனர்.

கட்டுக்கட்டாக 2000 ரூபா புதிய தாள்கள் பரிமாறப்பட்டது. இதுல இரண்டு இலட்சம் இருக்குது என்ன பண்ணுவீங்களோ...நாளைக்கு எல்லாரும் வேலைக்குப் போயாகணும் இன்னும் பணம் தேவையின்னா வந்து வாங்கிக்கிட்டுப் போ...வேலைநிறுத்த போராட்டத்தை முறியடிக்கும் முடிவுடன் மௌனமாக பணத்தை வாங்கிக் கொண்டு புறப்பட்டவர்களை அமைச்சரின் டபுள் கெப் ஏற்றிக் கொண்டு பறந்தது.

"ரஜனி என்னடா யோசன பண்ணிக்கிட்டு வார்ர" மௌனத்தை கலைத்தான் லோறன்ஸ்.

கட்டுகட்டா காசா குடுத்து நம்பவச்சு, நம்ம ஆளுகள அடக்கப்பாக்கிற அமைச்சர இன்னும் நம்பனுமாடா சதாசிவம் ஆவேசமாகப் பேசினான்.

"அட நீ ஒன்னு அப்பப்ப எலும்புத்துண்டு போடுற மாதிரி அமைச்சர் நம்மல நாயாக்கி வச்சிருக்கிறான்" படபடப்புடன் பேசினான் அய்யாத்துரை...அவனது கோபத்தின் வேகம் வார்த்தைகளில் தெரிந்தது.

ரஜனி...மௌனமாக அவர்களது பேச்சுக்களை கேட்டுக்கொண்டிருந்தான்.

பழைய தோட்ட பிரட்டுகளத்தில் வண்டி நின்றது. வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் அங்கங்கே கோரிக்கை எழுதப்பட்ட அட்டைகளை விரித்து அதில் அமர்ந்திருந்தார்கள்.

ரஜனியும் அவனது கூட்டாளிகளும் அவர்களுக்குத் தெரிந்தவர்களே.

வாப்பா தம்பி, எங்க பொயிட்டு வார்ர...ரஜனியின் மாமா சுப்பிரமணியம் கேட்டார்.

ஒன்றுமில்ல மாமா அமைச்சர் வரச்சொன்னார்ன்னு போயிபார்த்திட்டு வாறேன் என்றான் ரஜனி.

அப்படியா சங்கதி ஆமா என்ன சொன்னாரு உங்க அமைச்சர்? சற்று கேலியாக கேட்டார் சுப்பிரமணி.

கொரியாவுக்கு அனுப்புறேன், அரசாங்கத்திலே வேலை புடிச்சித்தாறேன்னு சொல்லி ஆறு வருசமா ஏமாத்திக்கிட்டு வர்ர அமைச்சர், இப்பவும் அதச் சொல்லத்தான் கூப்பிட்டிருந்தாரா? அய்யாத்துரை சத்தம் போட்டு சொன்னான்.

ஆமா ஸ்டிரைக் பத்தி ஒண்ணும் சொல்லலியா...தம்பி என்றார் சுப்பிரமணி.

சொன்னாரு...எப்படியாச்சும், எதையாச்சும் பண்ணி ஸ்டிரைக்க ஒடைக்கச் சொன்னாரு...கேலியும் கிண்டலுமாக சொன்னான் லோரன்ஸ்.

அடப்பாவி...எப்படியாச்சும் எதையாச்சும் சொல்லட்டும். ஆமா நம்மள தூண்டி விட்டதே அந்த ஆளுதானடா...இப்ப ஏண்டா தம்பி...அந்த ஆளுக்கு புத்தி இப்படி மாறிப்போச்சு...

தெரியல மாமா...ஆனால்...எங்கள ஏமாத்துன அந்த ஆளுக்கு வலி உண்டாகனும். அதுக்கு அதுக்கு ஒரே வழி...எல்லாத்தையும் ஸ்டிரைக்கில இறக்கிறதுதான்...சதாசிவம் வேகமாக பேசினான்.

அவனிடமிருந்த உறுதியும், தைரியமும் எல்லோருக்கும் ஏற்பட்டது...

திட்டமிட்டப்படி பணம் சம்பந்தப்பட்டவர்களுக்கு பட்டுவாடா செய்யப்பட்டது.

இரவோடு இரவாக...அந்த மாவட்டம் முழுவதும் டபுள் கெப் ஓடியது.

முடிவு...முழுமையான சம்பளப் போராட்டத்தில் அனைத்து தொழிலாளிகளும் சங்க வேறுபாடின்றி இறங்கினார்கள்.

மறுநாள் அமைச்சரின் இல்லத்துக்கு சென்ற ரஜனி மீது எரிந்து விழுந்தார் அமைச்சர் ஏழுமலை.

காட்டுப்பயலுக பணத்தையும் வாங்கிட்டு...எல்லாரும் ஸ்டிரைக்கில இறக்கி புட்டானுங்கோ...கத்தினார் ஏழுமலை.

மௌனமாக நின்றது ரஜனி கோஷ்டி...

சேர்...முந்திமாதிரி...ஆளுகள இனியும் ஏமாத்த முடியாது சேர்...ஏன்னா...எல்லாத்துக்கும்...நம்ம செய்யிறது சதி வேலைன்னு நல்லா தெரிந்து போச்சி சேர்...

சும்மா நிப்பாட்டுடா...ஒன்னால முடியல...ஆனால் என்னால முடியுண்டா. நான் நல்ல வேலை செய்யிறேன் பாரு...என்று சொல்லி...கிளாஸிலிருந்த விஸ்கியை ஒரே மடக்கில் குடித்து முடித்து முகத்தைச் சுளித்துக் கொண்டார் ஏழுமலை.

அப்ப நாங்க போகட்டுமா சேர்...?

ம்...ம்...போங்கடா செலவுக்கு ஏதும் வேணுமா?...பையிலிருந்து உருவிய ஆயிரம் ரூபா கட்டு ஒன்றை வீசினார் ஏழுமலை. இன்னும் அவர்களின் மீது நம்பிக்கை இருப்பதைச் செயலில் காட்டினார்.

கவ்விப்பிடித்து கொண்ட ரஜனி ஜாடை காட்டியதும் கோஷ்டி வெளியேறியது.

ஸ்டிரைக் இருக்கிற நம்ம ஆளுகளுக்கு செலவுக்கும் சாப்பாட்டுக்கும் இந்த காசையும் குடு என்று கூறிய ரஜனி பணத்தை லோரன்ஸ் கையில் திணித்தான்.

அவர்களுக்கு ஒரு திருப்தி...அமைச்சர் ஏழுமலையை ஏமாற்றியதில் ஒரு சந்தோஷம்...ஏமாற்றுவதில் ஏமாறுவதில்...ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தது.

ஏழுமலை போன்றவர்களது அட்டகாசத்திற்கு முடிவுகட்டும் தோரணையில் புதிய சக்தியாக அந்த இளைஞர்கள் புறப்பட்டு சென்றார்கள்.

மலையகம் மாறி வருகிறது...ஏமாற்றும் நபர்களுக்கு பாடம் புகட்டும் நாளும் நெருங்கி வருகிறது என்ற சந்தோச நினைப்புடன் ரஜனி தனக்குள் சிரித்துக்கொண்டான்.

# உன் நினைவுகளோடு...

**அன்று** வெள்ளிக்கிழமை அர்ச்சனாவும் அவளது அம்மாவும் கோவிலுக்குச் சென்றார்கள். அர்ச்சனா எப்போதும் சாமிக்கிட்ட வணங்குகின்ற போது எல்லா உயிர்களும் சந்தோசமாகவும் நலமாகவும் வாழ வேண்டும் என்றுதான். அர்ச்சனாவின் குடும்பம் சிறியது. தான் உட்பட அம்மா, அப்பா இரண்டு தம்பிகள். அர்ச்சனா அவ்வளவு படிக்கவில்லை. தம்பிமார் படிக்கின்றனர். அப்பா கூலி வேலை செய்தும் அம்மா சிறு கைத்தொழில் செய்துமே குடும்பத்தை ஓட்டுகின்றனர்.

அர்ச்சனா அவளது வீட்டுப் பூச்செடிக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டு இருக்கும் போது திடீரென இரு கரங்கள் அவளது கண்களை இறுகப் பொத்தின. அவளும் வழமையான அவளது நண்பர்களது பெயர்களைச் சொல்லிக் கொண்டிருந்தாள். அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை பொத்திய கரங்கள் யாருடையது என்று. பொத்திய கைகளைக் கஷ்டப்பட்டு திறந்து பார்க்கிறாள். அப்பொழுது அபை என்ன.

அபை அவர்களின் வீட்டுச் சூழ்நிலை காரணமாக குடும்பமாக வெளியூரில் வாழ்ந்துவந்தான். அவன் மட்டும் திடீர் என்று இங்கு வந்திருப்பது கண்டு அவள் அதிர்ச்சிடைந்தாள் இது கனவா? நினைவா? என்று அவள் அவனிடம் கேட்க அவன் சொல்லுகின்றான் இது நனவுதான் நான் பிறகு வருகின்றேன், எனக்கு பயணம் செய்தது ஒரே களைப்பாக இருக்கின்றது குளித்து விட்டு வருகிறேன் என்று அங்கிருந்து விலகினான் அபை.

அபை வந்த போது வீட்டில் யாரும் இல்லை அவளைத் தவிர. அவளது அம்மா வெளியே போய் திரும்பியபோது, அம்மா உனக்கு ஒரு விஷயம் தெரியுமா என்றாள்? நீ சொன்னால் தானே தெரியும் என்றாள் தாய். நம்ம அபை வெளியூரிலிருந்து வந்துவிட்டான். தாய் கேட்கிறாள் யாரடி அது? என்ன அம்மா பக்கத்து வீட்டு செல்லம் அவவோட பையன். அட நான் அவர்களின் குடும்பத்தையே மறந்து விட்டேன் என்னவாம். அவர்களின் அம்மா, அப்பா, சகோதரர்கள் எல்லாம் சுகமா இருக்கின்றார்களாமா? ஏன் அவர்கள் வரவில்லையாம்? நான் ஒன்றும் கேட்கவில்லை அம்மா. ஒரே அதிர்ச்சியாக இருந்தது பிறகு வருகின்றேன் என்று போய்விட்டார்.

நேரம் ஏழு மணி. அர்ச்சனா ரி.வி. சீரியல் பார்த்துக் கொண்டிருந்தாள். தாய், அர்ச்சனா எப்பொழுதும் ரி.வி.தானா? அங்கே போய்ப் பார் அப்பா வருகிறார். கதவைத் திற மனிசன் வேலை செய்து களைத்துப் போய் வருகிறார். நான் இங்கே சமையலில் இருக்கிறேன் என அம்மா குரல் கொடுத்தாள். தம்பி அவர்கள் படிக்கிறார்கள், உனக்கு ஒரே நாடகம் தான் என்றதும், இதோ போறேம்மா என்று கூறி கதவைத் திறந்து புன்னகையோடு அப்பா வாங்கப்பா என்று கூறினாள். தகப்பன் வேலையிலிருந்து களைப்போடு வந்தாலும் மகளின் புன்னகை பூத்த முகத்தையும் வரவேற்பையும் பார்த்தே களைப்பையே மறந்தவர் போல் சிரித்த முகத்தோடு வந்தார்.

கையில் இருந்த பொதியை மகளிடம் கொடுத்தார். அவர்களுக்கும் கொடுத்து நீயும் சாப்பிடு. ஆமாம் அம்மா எங்கே என்று கூற, அர்ச்சனாவின் அம்மா இதோ வருகிறேன் என்று கூறி வெளியில் வந்தவள், என்னங்கோ வேலை கஷ்டமா முகம் ஒரு மாதிரி இருக்கின்றது என்றாள். அப்படி ஒன்றும் இல்லை.

இன்றைக்கு எனக்கு இரண்டாவது தடவை[illegible] மாரடைப்பு வந்துவிட்டது அதுதான்! என்னங்கோ சொல்லுறியள். சும்மாயிரு பிள்ளைகளின் காதில் விழுந்தாலும் பயப்படுவார்கள். சும்மா சத்தம் போடாதே அதுதான் உனக்கு ஒன்றும் சொல்லக்கூடாது என்று நினைத்தனான். நீ வற்புறுத்திக் கேட்டபடியால் சொன்னனான்.

அர்ச்சனாவின் அப்பா குளித்து விட்டு படுப்பதற்குச் சென்று விட்டார். அப்போது அபை வருகிறான். வாப்பா


-வி.சுபதா, கரவெட்டி.

கொஞ்ச் நேரத்திற்கு முன்தான் அர்ச்சனா கூறினாள் நீ வந்ததாக. ஊரில் எல்லோரும் சுகமா இருக்கின்றார்களா? தனியா நீ மட்டும் வந்திருக்கிறாய் என்ன விஷயம் எனக்கு இங்கே ஆசிரியர் வேலை கிடைத்து விட்டது. பள்ளிக்கூடம் இங்கே தான் அதுதான். சரியப்பா! சாப்பிட்டியா? இல்லை சித்தி இப்பொழுதான் ரெடி பண்ணுகிறார். அறையில் படித்துக் கொண்டிருந்த நிந்தனன் நித்திலனைப் பார்த்துக் கேட்டான் டேய் என்ன செய்கிறீர்கள் அதற்கு நிந்தனன் கேட்டான், எனக்கு ஒரு சந்தேகம் அதை விளங்கப்படுத்திவிட்டு போறீர்களா என்றான். அபையும் அவர்களது சந்தேகத்தைத் தீர்த்து விட்டு வெளியே வந்தான். அர்ச்சனா ரி.வி. பார்த்துக் கொண்டே இருக்கிறாள். அபை, நான் உன் கிட்ட ஒரு விஷயம் சொல்லவேணும். நாளைக்கு வருகிறேன். அர்ச்சனா அபையைப் பார்த்து என்ன தலை போகிற விசயமா, பெரிய விசயமாக சொல்லுகிறாய். மறுநாள் ஆகியது. அர்ச்சனாவின் அம்மா, இந்த அப்பத்தை அபையிடம் கொடுத்து விட்டு வா என்று கூற, அர்ச்சனா சரியென்று அபை வீட்டிற்குப் போகிறாள். அங்கு யாரையும் காணவில்லை. அபை சொல்லுகிறான் நான் இங்கே இருக்கிறேன் வா...இந்தா அம்மா அப்பம் தந்தவா? நான் போகிறேன்.

நில் உன்னிடம் நான் பேச வேண்டும் என்ன அர்ச்சனா...என்று இழுத்தவன், என்ன சொல்லு அது அது வந்து நான்...நான்...வந்து உன்னை காதலிக்கிறேன் என்றதும் அதிர்ந்தாள் அர்ச்சனா. என்ன விளையாடுகிறாயா. நான் ஒன்றும் உன்னை இப்ப விரும்பவில்லை. சின்ன வயதில் இருந்து உன்னை நினைத்துத் தான் வாழ்கிறேன். அதற்கு நான் ஒன்றும் செய்ய இயலாது. எனக்கு அப்படி ஒரு எண்ணம் தோன்றியதே கிடையாது. தயவு செய்து மன்னித்துக் கொள் என்று கூறி பதற்றத்தோடு ஓடினாள் அவள். வெளியே போனது தெரியாமல் என் உயிர் இருக்கும் வரை நான் உனக்காகவே

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**உலகில்** வாழ்கின்ற உயிரினங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்ட இயல்புகளையும், குணாதிசயங்களையும் கொண்டபோதிலும், அனைத்துமே தமக்குள் ஒருவித அன்பு, பாசம் என்னும் உணர்வுகளுக்குள் அகப்பட்டு நிற்பது கண்கூடு. ஆயினும் அவற்றுக்கெல்லாம் வேறுபட்டதோர் பாச உணர்வு கொண்டது மனித இனம். இதிலுள்ள சிறப்பு என்னவெனில் மற்ற உயிரினங்கள் மகிழ்விலும், துன்பத்திலும் அதிக வேறுபாடு இல்லாமலே இருக்கும். உதாரணத்துக்குச் சொல்லப் போனால், பெரும்பாலானவை ஒரு ஆபத்து வரும் நேரத்தில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முனையுமே அல்லாது தன்னைச் சேர்ந்தவர்களின் பிரிவைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அதனால் அவற்றிற்கு அதிக நாள் சோகமில்லை. ஆனால் மனித இனம் தன்னைச் சார்ந்தவர்கள் தள்ளாடும் வயதைத் தாண்டியபோதும், அவருடைய பிரிவைத் தாங்காது அழுது புலம்புவதை அவதானிக்கலாம். அந்த மனிதருக்குள்ளும் மிருகத்தை ஒத்தவர்களைக் காண்கிறார் வள்ளுவப் பெருந்தகை. நோக்குவோமா?

*பெரிதினிது பேதையர் கேண்மை பிரிவின்கண்*
*பீழை தருவதொன்று இல்*

*(குறள் : 839)*

பேதையருடைய இயல்பானது, தம்மைச் சேர்ந்தவர் பிரியும்போதும் எந்த விதத் துன்பமும் இல்லாதிருப்பதால், பேதையருடைய உறவும் ஓரளவுக்கு நல்லதுதான். இவர்களும் விலங்கினைப் போன்றவர்தாம் என்பது போலும்.

# நண்பன் என நினைத்தேன்!

**கீர்த்தி** வர்மனின் நடைமுறைகள் விக்கிரமனுக்கு அதிருப்தியைத் தந்தது என்றாலும் அவன் போர்ப்பிரியன் என்றதொரு குறைபாட்டைத் தவிர வேறெந்தத் தீமையான எண்ணங்களும் இல்லை என்பதும், அவன் தன் மக்கள் நலத்தில் கண்ணாக இருக்கிறான் என்பதும் ஒரு அரசகுமாரனுக்கு இருக்க வேண்டிய சிறப்பம்சங்கள் என்பதில் உள்ளூர அவனுக்குப் பெருமிதந்தான். ஆனாலும் தங்கையின் வாழ்க்கை பாலைவனமாகி விடக்கூடாதே என்ற எண்ணம் அவனைச் சங்கடத்தில் ஆழ்த்தி இருந்தது.

போரென்று தொடங்கி விட்டால் வெற்றி கிட்டும் வரை கீர்த்தி வர்மன் ஓயமாட்டான் என்பது விக்கிரமனுக்குத் தெரிந்ததுதான். வெற்றி கிடைக்காத வரை தங்கையின் வாழ்க்கை கேள்விக்குறிதான் என்று எண்ணும் போதெல்லாம் அவன் குழம்பிக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று.



மரகதவல்லியின் ஏக்கத்தை எண்ணும் போதெல்லாம் அவள் மேல் ஏற்படுகின்ற அனுதாபம் மறுபுறத்தில் அங்கயற்கண்ணியின் இன்றைய நிலைமை இவைகள் அனைத்தும் ஓரளவிலேனும் நிவர்த்தியாக வேண்டுமாயின், கீர்த்திவர்மனின் பிடிவாதம் ஓரளவேனும் குறைய வேண்டும். இதற்கு ஒரே வழி அங்கயற்கண்ணியின் திருமணம் உடனடியாக நடக்க வேண்டும் என்பதுதான் என்ற எண்ணம் அவன் மனதில் ஒரு வேகத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அழைப்பு மணியைக் கேட்டதும் காவலன் ஒருவன் அவன் முன் வந்து நின்று, வணக்கம் செலுத்திவிட்டு நின்றதும் கீர்த்திவர்மனே பேச்சைத் தொடங்கினான்.

"அதுசரி பெரும் படையோடு வந்திருக்கிறாயே ஏது என்று..... எதிரிக்குப் பயந்தகாலம் மாறி இப்போது நண்பன் வேடத்தில் இருக்கும் எதிரிக்குத்தான் பயப்படவேண்டி வரும்போலிருக்கிறது" என்று முடிப்பதற்குள் ஓர் அட்டகாசச் சிரிப்பை உதிர்த்தான் விக்கிரமன். இதைக் கண்டதும் கீர்த்திவர்மன் "ஏன் சிரிக்கின்றாய் விக்கிரமா" என்றான் கீர்த்திவர்மன். "நான் இப்போது உனக்கு நண்பனில்லையே" என்றான் விக்கிரமன். இதைக் கேட்டதும் "துரோகி!" என்று கூறியதோடு நில்லாமல் தன் இடையிலிருந்த உடைவாளை உருவிக் கொண்டான் கீர்த்திவர்மன்.

மண்டபத்தின் நுழைவாயிலில் வந்து கொண்டிருந்த அங்கயற்கண்ணியின் கண்ணில் இது பட்டுவிடவே அண்ணா! என்று அலறியவாறு, இருவருக்குமிடையில் வந்து நின்று கொண்டாள். மீண்டும் விக்கிரமன் சிரித்தான், கணப்பொழுதுக்குள் நடந்த இந்த நிகழ்வு பற்றிய விடயம் புரியாமல் திகைத்து நின்றவேளையில்தான் விக்கிரமன் "கீர்த்திவர்மா இன்னும் உன் அவசரபுத்தி தீர்ந்ததாக இல்லையே!"

"உன் சமாதானம் எனக்கு வேண்டியதில்லை. சற்று முன் நான் உனக்கு நண்பனில்லையே என்று உன் வாயால் தானே கூறிவைத்தாய். நண்பனில்லையெனில் பகைவன்தானே வேறென்ன கூறப்போகின்றாய்" என்றான் கடுகடுப்பாக. இதைக் கேட்டதும் அங்கயற்கண்ணி "என்ன அண்ணா இதெல்லாம்" என்று கேட்டவேளை, அவள் கண்களிலிருந்து தாரைதாரையாக நீர் பெருக்கெடுத்ததைக் கண்ட விக்கிரமன் "என் தங்கை நீயுமா இப்படிக் கேட்கிறாய். இவன் கேட்ட கேள்விக்குத்தானே பதில் சொன்னேன். அதில் என்ன குறை கண்டான் இவன்?"

"அங்கயற்கண்ணி உன் அண்ணன் என்ன பதில் சொன்னான் என்று நீயே கேட்டுப்பார்" என்று கேட்டுவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டான். அவள் முகம் ஆத்திரத்தில் செந்தணலாக மாறியிருந்தது.

"தளபதியாரை நான் அழைத்ததாகச் சொல்" என்றான். காவலன் அவ்விடத்தை விட்டு அகன்றதும் தனது உடைவாளை எடுத்து இடையில் செருகிக் கொண்டிருக்கும் போது "அழைத்தீர்களா மன்னா" என்றார் தளபதி. "ஆமாம் தளபதியாரே. சிங்கபுரத்து அரண்மனைவரை செல்லவேண்டி இருக்கிறது. அதற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள்" என்று விக்கிரமன் கூறியபோது, விக்கிரமனின் முகத்தில் காணப்பட்ட குழப்ப நிலை தளபதியாருக்குச் சற்று களங்கத்தைக் கொடுத்தாலும் அந்த வேளையில் அவர் அது பற்றிக் கேட்கக் கூடாது என்று நினைத்தாரோ என்னவோ "ஆகட்டும் மன்னா" என்றதோடு அவ்விடத்தைவிட்டு அகன்று விட்டார்.

சிங்கபுரத்து தெருக்கள் அனைத்திலும் ஆங்காங்கே ஏராளமான படைகள் குவிக்கப்பட்டிருப்பதைக் கண்ட விக்கிரமனுக்கு மனதில் சற்று கலவரம் தோன்றினாலும், கீர்த்திவர்மன் பாதுகாப்பு விடயத்தில் முன்போல் அலட்சியமில்லாமல் இருந்திருக்கிறான் என்று நினைத்தபோது கொஞ்சம் ஆறுதலாகத்தான் இருந்தது.

விக்கிரமன் வரவேற்பு மண்டபத்தை அடைந்தபோதே "விக்கிரமா என்று வழக்கத்துக்குமாறாக கீர்த்திவர்மன் வரவேற்பளித்ததும் விக்கிரமனுக்கு ஆச்சரியம் தோன்றினாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் என்ன கீர்த்திவர்மா? சாலை நெடுகிலும் காவல் பலமாக இருக்கிறதே. காவலர்களுக்குப் பதில் சொல்வதிலேயே நாளிகையாகிவிட்டது" "எல்லாம் உன் தங்கையின் ஏற்பாடுதான்" என்று கீர்த்திவர்மன் சொன்னதும், விக்கிரமனின் ஆச்சரியத்தால் உயர்ந்து பதிந்தன அகலத் திறந்த விழிகள். இமைப்பதற்குப் பல வினாடிகள் பிடித்தன.

நண்பன் பகைவன் இவைகளைத் தவிர வேறு எந்த உறவு முறைகளையும் இவன் அறியவில்லைப்போலும். அந்த அறியாமைதான் இவனை இன்னும் நட்புக்கும் பகைமைக்குமுள்ள வேறுபாட்டைத் தெரியாமலாக்கி வைத்திருக்கிறது" என்று கூறியபோது அவன் குரலிலேற்றபட்ட மாறுதல் கண்டு நிமிர்ந்து பார்த்தான் கீர்த்திவர்மன். "அண்ணா நீ என்ன சொல்கிறாய்ப் என்று அங்கையற்கண்ணி கேட்டதும், "இனிமேலும் நீ என் நண்பனல்ல, எனது மைத்துனன் என்று நான் கூறுவதற்கு முன்னமே வாளை உருவிவிட்டானே உனக்கு மணவாளனாக வரப்போகும் இந்த அவசரக்காரன்" என்று விக்கிரமன் கூறிமுடித்ததும், தேள் கொட்டியவன் போல் திடுக்கிட்டான் கீர்த்திவர்மன். அவன் உடலெங்கும் இலேசாக நடுங்குவதுபோல உணர்ந்தான்.

கையிலிருந்த வாளை அப்பால் எறிந்து விட்டு விக்கிரமனைக் கட்டித் தழுவிக் கொண்டான். என்னை மன்னித்து விடு விக்கிரமா என்று கூறியபோது அவனை அறியாமலேயே அவன் நா தழுதழுத்தது. இதைக் கவனித்துக் கொண்டிருந்த அங்கையற்கண்ணியின் கண்களிலிருந்து கரைபுரண்டோடியது என்ன?

தருவது
**கற்பகன்**

***"பேதமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்ந்த நோதக்க நாடார் செயின்"***

*குறள் : 805*

## சிந்தியா பதில்கள்

✍ **சிந்தியா, இரண்டு வகைப் பஞ்சாங்கம் இருப்பது குழப்பமாக இல்லையா?**
***-வி.அனுசா, பண்டாரவளை.***


இரண்டு கண்கள், இரண்டு கைகள், இரண்டு கால்கள் என்று பல இரண்டுகள் இருப்பது குழப்பமாக இல்லை. காரணம் அவற்றின் செயற்பாடுகள் ஒன்று என்பதால். ஆனால் பஞ்சாங்கம் எல்லாம் இரண்டு என்பது குழப்பம்தான். நவக்கிரகமும் இப்போது எட்டு கிரகமாகிவிட்டது. ஆனால் இன்னும் நவகிரகங்களையே சுற்றிக் கொண்டிருக்கின்றனர். இதுபற்றியெல்லாம் அடிமட்ட மக்களுக்கு இருக்கும் குழப்பங்களைப் போக்க யாரைக் கேட்பது.

✍ **சித்திரைப் புத்தாண்டு எப்படிப்போனது?**
***-ஜெ.லக்ஷிதா, ஹற்றன்.***

எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் நாட்டில் நிலவும் அவலங்களைப் பார்த்துக் கொண்டும், அதையே தந்திரமாக சுட்டிக்காட்டி அரசியல்வாதிகள் விட்ட வாழ்த்துக்களையும் வாசித்துக் கொண்டே வந்த தடம் தெரியாமல் போய்விட்டது. வாகரையில் சித்திரையன்று தமிழ் மக்களுக்குப் படையினர் பலகாரங்கள் வழங்கியது நெகிழ்ச்சியாக இருந்தது. முன்னரெல்லாம் பார்சல்களாக அவர்களிடமிருந்து புலிகள் வாங்கினார்கள். இப்போதுதான் மக்கள் வாங்குகிறார்கள். வாகரையில் இலேசான புத்தாண்டுக் கொண்டாட்டம் இருந்தது. இது நீடிக்க வேண்டுமென்றால் இன்னும் பல விடுவிப்புக்கள் அவசியமாகிறது என்று நினைக்கத் தோன்றுகின்றது.

✍ **இந்திய அணியினர் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?**
***- எம்.அரவிந்தன், பத்தரமுல்லை.***

பாவம் சம்பளத்தை இழந்து, ஒப்பந்த வருமானத்தை மட்டுமே எதிர்காலத்தில் பெறக்கூடிய கட்டுப்பாடுகளுக்குள் சிக்கியுள்ளார்கள். இப்போதைக்கு, முன்னர் விளையாடிய போட்டிகளைப் போட்டுப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்திய அணியின் ரசிகர்கள் இலங்கையினதும், ஏனைய அணிகளினதும் போட்டிகளை ரசிக்கிறார்கள். இந்திய அணியைக் காப்பாற்றியது, பாகிஸ்தான் அணியும் வெளியேறிய திருப்திதான். இதே நிலையில் இப்போது போட்டிகளை நடத்திக் கொண்டிருக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் அதன் ரசிகர்களுக்கும், அவர்கள் புகழ் பெற்றுக் கொடுத்த லாராவையே தூக்கி எறியத் துணிந்து விட்டார்கள். இந்தியாவுக்கு அந்தத் துணிச்சல் இல்லையே என்ற ஏக்கம் ரசிகர்களுக்கு உண்டு.



*பரத் – பாவனா*
*கூடல் நகர்*

✍ **ஊடகவியலாளர்களுக்குள் நெருக்கமான உறவு இருப்பதில்லையே ஏன்?**
***- என்.நிதர்ஷன், வவுனியா.***

உறவு இருக்கும் - உண்மைத் தன்மைதான் இருப்பதில்லை. யார் யாரை முந்துவது என்ற போட்டிதான் அதற்குக் காரணம். இதையும் தாண்டி நெருக்கம் இருந்தால் அது இன்னொரு தரப்பு மீது சேறு பூசுவதிலேயே போய் முடியும். இதற்கு உதாரணமாக, ஒரு ஊடகத்தின் நிகழ்ச்சி நிரலை இன்னொரு ஊடகம் விளம்பரம் செய்கிறதே பார்த்ததில்லையா. இப்படியானவர்களின் செய்திகளும், கருத்துக்களும் சேறு பூசும் எண்ணம் கொண்டதாக இருப்பதால் அவர்கள் சேறு பூசிக் கொண்ட பன்றிகள் போல் எப்பவும் அழுக்கோடு திரிவார்கள். கவனம், தராதரம் தெரியாமல் உங்கள் மீதும் பூசி விடுவார்கள்.

✍ **மனித உரிமை மீறல்கள் அதிகமாக நடப்பது, புலிகளின் கட்டுப்பாட்டிலா? அரச கட்டுப்பாட்டிலா?**
***- பி.வாமதேவன், சிலாபம்.***

அரச கட்டுப்பாட்டில் மனித உரிமை மீறல்கள் நடந்தாலும், அதையும் சுட்டிக் காட்டவும், குற்றம் சாட்டவும் மனித உரிமை இருக்கிறது. புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் அனைவருமே தடுத்து வைக்கப்பட்டு சகல உரிமைகளும் மறுக்கப்பட்டு இருப்பதை யாரால் வெளியில் கேட்க முடியும். ஒரு விவாதத்துக்கு புலிகள் நூறு வீதமும் சரியாக இருக்கிறார்கள் என்றால் அதை எவரும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையோ. "கடவுள் ஏன் கல்லாய்ப் போனான்" என்று கேட்கிற மனிதரை புலிகள் முழுத் திருப்தியோடு நிர்வகிக்கின்றனரா என்பது அந்த மக்களின் மனித உரிமை மீறலில்லையா என்ற கேள்விக்கு எப்படி விடை காண்பது. அரச கட்டுப்பாட்டில் மனித உரிமை பற்றி கேட்க எத்தனை ஊடகங்கள், குரல்கள். புலிகளின் கட்டுப்பாட்டில் இது சாத்தியமா. ஆக ஊடகங்களில் பேசு பொருளாக இல்லாதவை அளவுகளுக்குள் அடங்காதவை என்றால் எப்படி.

✍ **கதிர்காமர், ஜோசப், ரவிராஜ் ஆகியோரின் கொலையை விசாரிக்க உத்தரவு இட்டவர்கள் ஏனையவர்கள் மீதான கொலைகளை ஏற்றுக் கொள்கிறார்களா?**
***- எஸ்.அருள், வத்தளை.***

கேள்வியில் தெரிந்த கோபம் அவ்வாறான உத்தரவு பிறப்பித்தவர்களுக்கு காது திருகியிருக்கும். இப்படி பாரபட்சம் காட்டப்படுவதால்தான் இவ்வாறான சம்பவங்களும் தொடர்கின்றன. கொலைகளை சம தளத்திலிருந்து பார்க்கவும் விசாரிக்கவுமான சூழல் முதலில் பிறக்க உத்தரவு பிறப்பிக்கக்கூடியவர்கள் உத்தரவிட்டால் நல்லது.

✍ **கிழக்கிலும் - தெற்கிலும் அதிரடித் தாக்குதலை நடத்தப் போவதாக தமிழ்ச் செல்வன் கூறியிருப்பது எதைக் காட்டுகிறது?**
***- ஜி.செல்ரன், நீர்கொழும்பு.***

தமிழ்ச் செல்வன் சொன்ன பல விடயங்களைக் கேட்டு பழகிப் போனவர்களுக்கு இது ஒன்றும் ஆச்சரியமானதில்லை. உயிர்களைக் காப்பதுதான் கடினமானது. கொல்வது இலகுவானது. அதிலும் பயங்கரவாதத்திற்கு ஒரு சொடுக்குப் போடும் நேரத்தில் நடத்திக் காட்டக் கூடியது. இப்படிக் கூறியிருப்பதன் பின்னணிதான் தமிழ்ச் செல்வனுக்கு வலி தாங்கமுடியாதது என்பதை மறைக்க முயற்சி செய்திருக்கிறார்.

✍ **ஜனாதிபதியின் சகோதரர்கள் பற்றி கூறப்படுகின்ற குற்றச் சாட்டுகளில் உண்மை என்ன?**
***- எம். கணேசன், கண்டி.***

ஆதாயம் தேடமுடியாதளவுக்குத் தலையீடு செய்கிறபோது, நண்பனே பகையாளியாகிறான் என்றால் ஜனாதிபதியின் சகோதரர்கள் எந்த மூலைக்கு. இதை எதிர்தரப்பு தன் அரசியல் காய் நகர்த்தலுக்குப் பயன் படுத்துவது ஒரு வகை வியூகம், மற்றப் படிக்கு பெரும்பான்மை மக்கள் மத்தியில் பெரியள வில் பேசு பொருளாக இல்லை. இவை பற்றி யாராவது ஒரு உத்தமன் விவாதித்தால் அதைக் கேட்டுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். குடும்ப அரசியல் என்பது உலக அரசியலில் இன்று சர்வசாதாரணம். நம்மைப் பொறுத்தவரை அதிகாரத்தை எவரும் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது என்பதுதான் தேவை.

✍ **சித்திரை வெளியீடுகள் பார்த்தீர்களா?**
***- வை.பிரியா, புத்தளம்.***

பரத்தின் இரட்டை வேடம் ஓரளவு வெற்றியளித்திருக்கும் "கூடல் நகர்" பார்த்தேன். படம் பார்க்கும் படியாக இருந்தாலும், பாவனாவுடன் ஜோடி என்பது பழகியது என்பதால் ஏதோ குறைபாடு இருப்பதுபோல் இருக்கிறது. வளர்ந்து வரும் புதிய தலைமுறைக்குள் பரத்தின் இடம் தனியாகத் தெரிகிறது. "கூடல் நகர்" இடையிடையில் ஊடல் பார்க்கலாம். சித்திரையில் வெளியான "சிவாஜி" படப் பாடல்கள் புரியவில்லை என்றவர்கள், இப்போது வரிகளைப் புரிந்து கொண்டு ரசிக்கிறார்கள். கேட்கும்போதே இனிமை தருவது இளையராஜா. கேட்கக் கேட்க இனிமை தருவது ரஹ்மான். "சிவாஜி"யும் அப்படித்தான்.

✍ **அண்மைக்காலங்களில் கொலைகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகியிருப்பதை அவதானித்தீர்களா?**
***- த.மோகன், மட்டக்களப்பு.***

ஒவ்வொரு நாளும் அதுதானே செய்தி. எப்படி அவதானிக்காமல் இருக்க முடியும். இதில் பெண்களும் குறிவைக்கப்படுவது அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ளது. ஊரிலிருந்து வரும் அதிர்ச்சியான செய்திகளில் ஒன்று, வயோதிபர்களும், பெண்களும், சிறுவர்களும் தவிர இளம் வயது யுவதிகளையோ, வாலிபர்களையோ ஊரில் காணக் கிடைப்பதில்லை என்பதுதான். மலிந்து போன கொலைகள், கடத்தல்களில் தமிழர்கள் செல்வச் செழிப்போடு வாழ்ந்த இடங்கள் பாழடைந்து போயிருக்கின்றனவாம். இதற்கெல்லாம் பொறுப்பேற்க வேண்டியவர்கள் வன்முறையில் விருப்பம் கொண்டவர்கள்தான்.


✍ **சிந்தியா, இங்கே மலையகத்தில் தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பான போராட்டத்திற்குப் பிறகு கம்பனியால் தொழிலாளர்கள் நடத்தப்படும் விதம் மோசமாக இருக்கிறதே. இதை நிறுத்த என்ன செய்யலாம்?**
***- வை.அருந்ததி, கொட்டகலை.***

மலையக மக்களின் பிரச்சினைகளை எவர் கவனத்தில் கொள்வதையும் சில மலையகத் தலைமைகள் விரும்பவில்லை என்று தெரிகிறது. அப்படியானவர்கள் மலையக மக்களிடம் அரசியல் பேரம் பேசாமல், மனிதாபிமானமாக அணுக வேண்டும். ஒரு சமூகத்தின் தலைமை என்பது முற்போக்குடன், சுய விருப்பு, வெறுப்புகளுக்கு இடமளிக்காத வகையில் இருக்க வேண்டும் என்று தெரிந்திருக்க வேண்டும். ஒரு பக்கம் வேலையின் பெயரால் சுரண்டல் மறுபக்கம் முதலாளிகளிடமும் தலைவர்களிடமும் உரிமைக்காகப் போராட்டம் என்று மலையக மக்கள் தொடர்ந்து வாழமுடியாது. தலைவர்கள் இனியாவது அக்கறை எடுக்கட்டும்.

# மனித உரிமை மீறல்களில் படையினருக்கு மட்டும்தான் பங்கா?

# புலிகள் இயக்கத்திற்கு சம்பந்தம் இல்லையா?

## – லண்டன் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டோர் கேள்வி




சர்வதேச மன்னிப்புச் சபையின் நடவடிக்கையைக் கண்டித்து கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பிடிக்கப்பட்ட படம்

லண்டனிலுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் அலுவலகத்திற்கு முன்பாக கடந்த 13ஆம் திகதி இலங்கையைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டமொன்றினை நடத்தினர். கரிபியன் தீவுகளில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடைபெறும் மைதானங்களில் இலங்கைக்கு எதிராக சர்வதேச மன்னிப்புச் சபை நடத்தி வரும் பிரசாரங்களை எதிர்த்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டிருக்கிறது. சுமார் 200இற்கு மேற்பட்டோர் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கிரிக்கெட் ரசிகர்களும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்ட சிலர் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு எதிராக எழுதப்பட்ட சுலோகங்களைக் கொண்ட பதாதைகளை வைத்திருந்தனர். இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடை பெற்றபோது சர்வதேச மன்னிப்புச் சபையின் முக்கிய பணிப்பாளரான ஐரின் கானும், செயலாளர் நாயகமான திருமதி பூமா சென்னும் அலுவலகத்திலிருந்ததாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகளை உள்ளே வந்து பேசுமாறு திருமதி சென் அழைத்த போதும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அதற்கு இணங்கவில்லையென்றும் தெரிவிக் கப்படுகின்றது.

யுத்தமும் மோதல்களும் இடம்பெறும் சிம்பாப்வே, பாகிஸ்தான், இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக குற்றங்கள் சாட்டப்படுகின்றது. உலக கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளும் இந்த நாடுகளுக்கு எதிராக ஏன் சர்வதேச மன்னிப்புச் சபை எதிர்ப்புப் பிரசாரங்களில் ஈடுபடவில்லையென்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கேள்வியெழுப்பினர். 12 நாடுகளை உள்ளடக்கிய கரிபியன் தீவுகள், மேற்கிந்திய தீவுகள் என்ற ஓர் அணியின் கீழ் உலகக் கிண்ணப் போட்டியில் ஈடுபட்டு வருகின்றது. பார்படோஸ், அன்ரிகுவா, கிறனெடா, ரினிடாக், அனரொபாகோ போன்ற 12 நாடுகளை உள்ளடக்கிய ஓர் அணியே மேற்கிந்தியத் தீவு அணியென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நாடுகளில் தனித்தனியான அரசாங்கங்கள் இருந்தாலும் ஒரே கிரிக்கெட் அணியையும் ஒரே பல்கலைக்கழகத்தையும் இவை கொண்டிருக்கின்றனவென்பது விஷேட அம்சமாகும். கிரிக்கெட் மைதானங்களுக்கு சென்ற மன்னிப்புச் சபை பிரதிநிதிகள், கிரிக்கெட் பந்துகளைக் கொண்ட படங்களுக்கு மத்தியில், "இலங்கையே சட்டத்திற்கமைய விளையாடு" என்ற வாசகங்கள் தாங்கிய பிரசுரங்களை பார்வையாளர்கள் மத்தியில் விநியோகித்திருக்கிறார்கள்.

"இலங்கையின் மனித உரிமைப் பிரச்சினைகள் வேறு கிரிக்கெட் ஆட்டம் வேறு. மூவினத்தவர்கள் அங்கம் வகிக்கும் இலங்கை கிரிக்கெட் அணி மனித உரிமை மீறல்களில் ஈடுபடவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். கிரிக்கெட் திடலுக்கு வந்து மனித உரிமை பற்றிப் பேசுவது பாரிய அடிப்படை உரிமை மீறலாகும்" என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட அன்வர் முகம்மது என்ற இலங்கை வாலிபர் தெரிவித்தார்.

"மனித உரிமை மீறல்களில் படை தரப்பினரும் ஈடுபடுகின்றார்கள் என்பதை பாதுகாப்புத் தரப்புப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க ஒத்துக் கொண்டுள்ளார். யுத்தம் நடைபெறும் இடங்களில் மனித உரிமை மீறல்கள் இடம் பெறுவது சகஜம். அதற்காக மனித உரிமை மீறல்கள் இடம் பெறுவதை யாரும் அனுமதிக்கவில்லை. பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க கூறுவதைப் போன்று படையினரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருக்கின்றார்கள், ஈடுபட்டும் வருகிறார்கள். ஆனால் படையினருக்கு மனித உரிமைகளைப்பேண வேண்டியதன் அவசியம் பற்றி போதிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்திருப்பது வரவேற்புக்குரியது. மாற்றுக் கருத்துக் கொண்ட தமிழ் மக்களைக் கட்டி வைத்துவிட்டு சுட்டுக் கொல்லும் புலிகளின் பாரம்பரியம் இன்னமும் தொடர்ந்து வருகின்றது. ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம் போன்ற எம்.பி.க்கள் சுட்டுக் கொல்லப்பட்டதைப் போன்றுதான் முன்னாள் வெளி விவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி ஆகியோர் இன்னும்கூட கொலை அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே வாழ்கின்றனர். டக்ளஸ் தேவானந்தா மீது 11 தடவைகள் கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 2004ஆம் ஆண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இலக்கு வைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டிருக்கின்றது. புலிகளுக்கு எதிரான மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருப்பது தான் இவர்கள் செய்யும் ஒரே தவறு. ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றிப் பேசிய அப்போதைய பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் நாடு கடத்தப்பட்டார்.

இந்த நிலையில் இன்றைய அரசாங்கம் இல்லையென்ற காரணத்திற்காக சர்வதேச மன்னிப்புச் சபை தான் நினைத்தபடி நடந்து கொள்ளக் கூடாது. அரசாங்கத்துடன் புலிகளும் மனித உரிமைகளைப் பேண வேண்டுமென்றும் மன்னிப்புச் சபை கேட்டிருந்தால், அது நியாயமானதாகும் என்று லண்டனில் கணக்காளராகப் பணிபுரியும் சுசீந்திரராஜா என்ற யாழ்ப்பாணத் தமிழ் வாலிபர் தெரிவித்தார்.

# பிரான்ஸ் பாணியில் இத்தாலியில் திடீர் வேட்டை;

## நடத்துவதற்கு இத்தாலியப் பொலிஸார் தயாராகின்றனர்!

இரு வாரங்களுக்கு முன்னர் பிரான்ஸின் பயங்கரவாத ஒழிப்புப் பொலிஸார் மேற்கொண்ட தீவிர தேடுதல் நடவடிக்கையைப் போன்ற ஒன்று இத்தாலியில் விரைவில் மேற்கொள்ளவிருப்பதாக இத்தாலிய வெளிவிவகார அமைச்சர் மசிமோ டீ அலேமா தெரிவித்தார். அண்மையில் இத்தாலிக்கும் வத்திகானுக்கும் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம மேற்கொண்ட விஜயத்தையடுத்து இந்த அதிரடி நடவடிக்கையில் ஈடுபட இத்தாலியப் பொலிஸார் தயாராகி வருகின்றனர். இத்தாலியிலிருந்து இலங்கையின் வன்னிப் பகுதிக்கு நிதியுதவி வழங்கப்படுவதாகவும் ஆயுதங்கள் கடத்தப்படுவதாகவும் இத்தாலிய அரச தரப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதையடுத்தே இந்த அதிரடி நடவடிக்கைக்கான முன் தயாரிப்புகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மேற்குலக நாடுகளில் புலிகளும் அவர்களின் முகவர் அமைப்புகளும் நிதி திரட்டி வருவதா கவும் இதனைத் தடுப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கத் தவறினால் இலங்கையில் பயங்கரவாத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது கஷ்டமாகி விடுமென்று அமைச்சர் ரோகித போகொல்லாகம இத்தாலியின் பிரதிப் பிரதமராகவும் விளங்கும் அமைச்சர் மகிமே டீ அலேமாவிடம் எடுத்துரைத்தார்.

போதைவஸ்துக் கடத்தல், ஆட்கடத்தல் போன்ற நடவடிக்கைளுக்கான ஒரு தளமாகவும் இத்தாலி பயன்படுத்தப்பட்டு வருவதாக அங்கு சுட்டிக்காட்டப்பட்டது. ஆட்கடத்தலுக்கென புலிகளின் சர்வதேச வலைப் பின்னலொன்று செயற்பட்டு வருவதாகவும் இதற்கு அரவிந்தன், கண்ணன் போன்ற இயக்கப் பேர் கொண்ட இருவர் முக்கியஸ்தர்களாகச் செயற்படுகிறார்களென்றும் வெளிவந்த புலனாய்வுத் தகவல்களும் அங்கு சுட்டிக் காட்டப்பட்டன. முன்னர் ரஷ்யாவை மையமாக வைத்து இயங்கிய இந்த ஆட்கடத்தல் கும்பல், இப்போது தமது செயற்பாட்டு இடங்களை மாற்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இத்தாலியில் சட்ட ரீதியாகவும் சட்ட விரோதமாகவும் குடியேறிய ஆயிரக்கணக்கான இலங்கைப் பிரஜைகள் இருக்கிறார்கள். இங்கு இருக்கும் இலங்கைத் தமிழர்கள் சிலர் வெகுஜன அமைப்புகளை உருவாக்கிக் கொண்டு, பணம் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. பிரான்ஸ் தலைநகரான பாரிசிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் அண்மையில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின் போது 39 இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

# அமைச்சராகப் போகிறாராம் 'மின்னல்' ஊடகவியலாளர்

ஸ்ரீரங்கத்திற்குப் போய் ரங்கநாத சுவாமிகளைத் தரிசித்து வேண்டுமானவற்றையெல்லாம் பெற்றுக் கொள்வேன் என்று கூறும் கொழும்பிலுள்ள தமிழ் ஊடகவியலாளர் ஒருவர், எம்.பி.யாகி, அமைச்சராகிக் காட்டுகிறேன் என்று சவால் விடுத்து வருகிறாராம். மலையக மக்கள் முன்னணி அரசோடு இணைந்திருப்பதால் ஐ.தே.க.அதற்கு வழங்கிய தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை மனோ கணேசனின் மேலக மக்கள் முன்னணிக்கு வழங்கப் போகிறது என்றும் இதனைப் பாவித்து தான் எம்.பி.யாகப் போவதாகவும் அந்த 'மின்னல்' ஊடகவியலாளர் மார் தட்டுகிறாராம். "எனக்கு எதிர்கட்சித் தலைவரும் பழக்கம் ஜனாதிபதியுடனும் நான் புழக்கம். என்னால் நான் நினைப்பது எதனையும் நிறைவேற்ற முடியும்" என்றும் கூறுகிறாராம் இந்த ஊடகப் பணி(ப்பா)யாளர். இலங்கையில் 56 அரசியல் கட்சிகள் இருப்பதாகவும் அதில் சிறியதொரு அரசியல் கட்சியின் தலைவராக இவர் தன்னை பதிவு செய்து கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. 'நவீன கப்பலோட்டிய தமிழன்' என்று மனோகணேசனால் இழித்துரைக்கப்பட்ட ஐ.தே.க.கட்சியின் எம்.பி. மகேஸ்வரனோடு இணைந்து கொண்டு இவர், தன்னை அவமானப் படுத்துகிறாரென்று கொதித்துப் போயிருக்கிறார் மனோகணேசன்.

கழுத்தறுப்பு வேலைகளில் கை தேர்ந்தவரான இந்த ஊடு(டக)வியலாளருக்கு எம்.பி.பதவியாவது கிடைக்கிறதாவென்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# அல்லைப்பிட்டியில் காணாமல் போன

## வண.பிதா ஜிம் பிரவுணின் சடலம் கொழும்பில்?

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி காணாமல் போன அல்லைப்பிட்டித் தேவாலய பங்குத் தந்தை திருச்செல்வம் நிஹால் ஜிம் பிரவுண் தொடர்பாக அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகளை பாராட்டுவதாக யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயம் தெரிவித்தார். தமது சகா ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போதே இவர் கடைசியாகக் காணப்பட்டாரென்று தகவல்கள் தெரிவித்தன. பாரிய மோதல்களுக்கு மத்தியில் அல்லைப்பிட்டித் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த அப்பாவி மக்களுக்குப், பாரிய மனிதாபிமான உதவிப் பணிகளை இவர் செய்து வந்தாரென்றும் கூறப்படுகின்றது.

புங்குடுதீவு கடலில் அண்மையில் கரையொதுங்கிய மர்மச் சடலம், பங்குத் தந்தை ஜிம் பிரவுணுடையதா என்பதைக் கண்டறிய அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகளை யாழ். ஆயர் பாராட்டியிருக்கிறார். மரபணுப் பரிசோதனைக்காக இந்தச் சடலம் ராகம வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த மரபணுப் பரிசோதனையை வெற்றிகரமாக முடிப்பதற்காக வணபிதா ஜிம் பிரவுணின், முல்லைத்தீவிலிருக்கிற நெருங்கிய உறவினர்களின் உதவியும் பெறப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில் காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் முக்கிய பிரமுகர் ஒருவர் மேலதிக விசாரணைகளுக்காக நாளை அல்லது நாளை மறுதினம் யாழ்ப்பாணம் செல்லவிருக்கிறார். யாழ். மக்களிடையே, குறிப்பாக கத்தோலிக்க மக்களிடையே பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியிருக்கும் வணபிதா ஜிம் பிரவுணின் மர்ம மறைவு குறித்த உண்மைகள் மிக விரைவில் வெளிவரலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

# சந்திரிகாவுக்கு அந்த நோக்கம் இப்போதைக்கு இல்லை!

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தற்போதைக்கு மீண்டும் அரசியலுக்கு வரும் சாத்தியமில்லையென்று அவருக்கு நெருங்கிய குடும்ப வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் சந்திரிகாவுக்குமிடையில் ஏற்பட்ட பூசல்கள் விஸ்வரூபமாக உருவெடுத்ததன் விளைவாகவே அநுரா, மங்கள, ஸ்ரீபதி ஆகியோரின் பிரச்சினைகள் சுதந்திரக் கட்சிக்குள் எழுந்ததாக அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். 2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது சுதந்திரக் கட்சிக் கூட்டணியின் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்த மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒரு சிலர் குழிபறிப்பு வேலைகளில் ஈடுபட்டனரென்று மகிந்த தரப்பினர் குற்றம் சாட்டியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# சமாதானத்திற்கு ஆப்பு வைக்கும் ஆய்வறிக்கை

இலங்கை மக்கள் சமாதானத் தீர்வையல்ல, இராணுவத் தீர்வையே விரும்புகின்றனரென்று ஓர் அமைப்பு அண்மையில் நடத்திய ஆய்வு தெரிவித்திருப்பதாக வெளிவந்திருக்கும் அறிக்கை வெறும் கபடத்தனமானதென்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கின்றனர். வடக்கு, கிழக்கிற்கு வெளியே வாழும் ஒரு சில ஆயிரக்கணக்கான மேட்டுக்குடி மக்களிடையே நடத்தப்பட்ட இந்த கருத்துக் கணிப்பீடு முழு இலங்கை மக்களினதும் எண்ணத்தைப் பிரதிபலிக்கப் போவதில்லையென்றும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர். பல்வேறு நாடுகளில் ஊடகங்களும் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் என்று கூறிக் கொள்ளும் அமைப்புக்களும் நடத்துவதாகக் கூறப்படும் கருத்துக் கணிப்பீடுகள் சுயலாப நோக்குக் கொண்டவை. வடக்கிலும் கிழக்கிலும் அல்லலுறும் அப்பாவி மக்களிடையே இந்தக் கருத்துக் கணிப்பீடு நடத்தப்பட்டிருந்தால், நூற்றுக்கு நூறு சதவீதமான மக்கள் சமாதானத் தீர்வை விரும்பியிருப்பர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

# மே மாதத்திற்கு முன்பதாக மங்கள சமரவீரவிற்கு அமைச்சுப் பதவி



உட்கட்சிப் பிரச்சினையின் விளைவாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட மங்கள சமரவீர, இம் மாதம் முடிவடைவதற்கு முன்னர் மீண்டும் அமைச்சுப் பதவியை பொறுப்பேற்கலாமென்று நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதிக்கும் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவிற்கும் இடையில் சமரச முயற்சிகளில் ஈடுபடும் குழுவைச் சேர்ந்த ஒருவர் இத் தகவலைத் தெரிவித்தார். ஆனால் மங்கள சமரவீர முன்னர் வகித்து வந்த வெளிவிவகார, விமானப் போக்குவரத்து, துறைமுக அபிவிருத்தி அமைச்சுப் பதவி மீண்டும் வழங்கப்படுமா என்பது கேள்விக்குறியென்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிவிவகார அமைச்சுப் பதவி தொடர்ந்தும் ரோகித போகொல்லாகமவிடமே இருக்குமென்றும், விமானப் போக்குவரத்து அல்லது துறைமுக அபிவிருத்தி அமைச்சுப் பதவிகளில் ஏதாவதொன்றினை சமரவீரவிற்கு வழங்குமாறு வலியுறுத்தப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது. இது தொடர்பாக சமரச முயற்சிகளில் ஈடுபட்டு வரும் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானாவிடம் கேட்டபோது, சமரச முயற்சிகள் மேற்கொள்ளப் படுவது உண்மையென்றும் தமது முயற்சிகள் சாதகமான பதிலைத் தருமென்று எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார். மேலதிக விபரங்கள் எதையும் தற்போதைக்குத் தெரிவிப்பது உகந்ததல்லவென்றும் சொன்னார்.

# அடால்ஃப் ஹிட்லர்

## (கி.பி. 1889 ~ 1945)

# உலகை வியக்க வைத்தவர்கள்

**இது** தவிர வட ஆபிரிக்கா **முழுவதிலும்** அது ஆட்சி செலுத்தியது. **1942ஆம்** ஆண்டின் பிற்பகுதியில், **எகிப்தில்** நடந்த எல் அலமைன் **போரிலும்**, ரஷ்யாவில் ஸ்டாலின்கிராடுப் **போரிலும்** ஜெர்மனி தோல்வியடைந்தது. **ஜெர்மனிக்கு** ஏற்பட்ட தோல்விகள், **உலகப்** போரில் ஒரு திருப்பு முனையாக **அமைந்தன.** இத் தோல்விகளுக்குப் பிறகு ஜெர்மன் இராணுவத்தின் வெற்றி வாய்ப்புக்கள் படிப்படியாகச் சரியலாயின. ஜெர்மனியின் இறுதித் தோல்வி உறுதியாயிற்று. எனினும், ஹிட்லர் சரணடையத் தயாராக இல்லை.

ஸ்டாலின்கிராடுத் தோல்விக்குப் பிறகு ஜெர்மன் படைகளுக்குப் பயங்கரமான சேதங்கள் ஏற்பட்ட போதிலும், மேலும் ஈராண்டுகள் ஜெர்மனி தொடர்ந்து சண்டையை நீடித்தது. 1945ஆம் ஆண்டு வசந்த காலத்தில் கசப்பான முடிவு ஏற்பட்டது. ஏப்ரல் 30ஆம் திகதியன்று தற்கொலை செய்து கொண்டார். அதற்கு ஏழு நாட்களுக்குப் பிறகு, ஜெர்மனி சரணடைந்தது.

ஹிட்லர் அதிகாரத்திலிருந்த ஆண்டுகளில் வரலாறு கண்டிராத கொடிய இனப்படுகொலைக் கொள்கையைக் கையாண்டார். அவர் கொடூரமான இனவெறியராக இருந்தார். முக்கியமாக, யூதர்களிடம் தீவிரமான




பெர்லினில் ஹிட்லர்

பகையுணர்வுடன் நடந்து கொண்டார். உலகிலுள்ள யூதர் ஒவ்வொருவரையும் கொல்வதே தமது குறிக்கோள் என்று பகிரங்கமாக அறிவித்தார். அவரது ஆட்சியின் போது பெரிய நச்சு வாயு அறைகளைக் கொண்ட ஏராளமான படுகொலை முகாம்களை நாஜிகள் ஏற்படுத்தினர். ஹிட்லர் கைப்பற்றிய நாடுகளிலிருந்து கூட ஏராளமான ஆண்களையும், பெண்களையும் குழந்தைகளையும் பிடித்து, இந்த நச்சுவாயு அறைகளில் அடைத்துக் கொள்வதற்காக மாட்டு உந்துகளில் அனுப்பி வைத்தனர். சில ஆண்டுகளிலேயே இந்த முறையில் 60,00,000 யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

ஹிட்லர் பலி வாங்கியது யூதர்களை மட்டுமன்று, அவரது ஆட்சிக் காலத்தின்போது கணக்கற்ற ரஷ்யர்களும், நாடோடிகளும் கூடப் படுகொலை செய்யப்பட்டனர். இவர்கள் தவிர தாழ்ந்த இனத்தவர் என்றோ, அரசுக்கு எதிரிகள் என்றோ கருதப்பட்ட ஏராளமானோரும் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலைகள் வெறும் ஆத்திர உணர்ச்சியாலோ, போரில் ஏற்பட்ட மனக் குமுறலினாலோ செய்யப்பட்டவை என எண்ணிவிடலாது. ஹிட்லரின் மரண முகாம்கள் பெரிய வாணிக நிறுவனங்களைப் போன்று, கவனமாகத் திட்டமிட்டு அமைக்கப்பட்டன. கொலை செய்யப்படுபவர்களின் விவரங்கள் பதிவேடுகளில் குறித்து வைக்கப்பட்டன. ஒவ்வொரு முகாம்களிலும் இத்தனை பேர் கொல்லப்பட வேண்டும் என்று இலக்குகள் நிருணயிக்கப்பட்டன. கொலையுண்டவர்களின் உடல்கள் சோதனையிடப்பட்டு அவற்றின் தங்கப்பற்களும்.

**வியப்புக்கள் தொடரும்**

உ

ஓம் சக்தி சிவமயம்! ஓம் அகத்தீஸ்வராய நம!

**ஞானயோகி. டாக்டர் ப.இசக்கி IBAM,RMP ,DISM**

தமிழ்நாடு, இந்தியா

சித்தர்களின் தெய்வீக சாதன ஜோதிட தியான மையம் ஓம் ஆதி அகஸ்திய மஹரிஷியின் திருவருளாலும் சித்தர்களின் அனுக்கிரகத்தாலும் ஆன்மீகம், தியானம், மணி, மந்திரம், மருத்துவம் ஜோதிடத்தின் மூலம் எமது 30 ஆண்டு கால அனுபவத்தின் நற்கன்ம வழியில் லோக மேஷத்தின் பொருட்டு மனித வாழ்வில் ஏற்படுகின்ற அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு ஆயுள், ஆரோக்கியத்துடன் ஐஸ்வர்யத்துடன் வாழ அணுகவும்.

1.தியானம்:- தகுதி உள்ளவர்களுக்கு சித்தர்களின் ரகசிய வழியிலான தியான தவயோக காயகல்ப பயிற்சி முறைகளும் மற்றும் எமது தெய்வீக கலைகளும் கற்றுத் தரப்படும்.

2.பாதரச மணி:- நவக்கிரக தோஷம், மனோவியாதி, ஒற்றுமைக்குறைவு, கடன் தொல்லை, மாந்திரீகப்பாதிப்பு, வலிப்புநோய், இயற்கைச் சீற்றங்கள், வாஸ்துகுறைபாடு, ஞாபக சக்தியின்மை, திருமணத்தடை, திடீர் விபத்து, செய்தொழில் நஷ்டம் ஆகியவற்றிலிருந்து தன்னைப் பாதுகாக்கும். மேலும் வியாபார விருத்தி, செல்வச் செழிப்பு முதலியவை ஏற்படவும் தியானம், ஜோதிடம், மந்திரம் இவைகளில் எளிதில் சித்தி அடையவும் அரசு வழக்கு, விவகாரங்கள் தீர்ந்து சகல ஐஸ்வரியத்தையும் தரக்கூடியதாகும். பூஜைக்குரிய பெரிய பாதரச மணிகள் கிடைக்கும்.

3.மந்திரம்:- சகல விதமான தேவதைகளின் மந்திர, எந்திர, தாயத்து சக்கரங்களும் கிடைக்கும். இதை உடம்பில் அணிந்தும் வீடு, மற்றும் தொழில் ஸ்தாபனத்தில் வைத்து பூஜித்து வர சகல காரிய சித்தி உண்டாகும்.

4.இராஜவசிய அஞ்சனம்:- பல தெய்வீக மூலிகைகளால் உருவாக்கப்பட்டது. சகல விதமான இராஜ வசியத்தை உண்டு செய்து சகல காரிய ஜெயத்தையும் ஏற்படுத்தும் அற்புத சக்தி கொண்டதாகும். அருள்வாக்கு சொல்பவர்களும், தியான தேவதாசித்தி செய்பவர்களுக்கும் அற்புதமான நற்பலன் தரக்கூடியதாகும். சகல விதமான நோய்கள் தீரக்கூடிய நாட்டுமுறை சித்த மருந்துகள் கிடைக்கும்.

5.ஜோதிடம்:-ஜெனன ஜாதகம், பிரசன்னம், பெயரியல், எண்ணியல், எழுத்தியல் வாஸ்து இவற்றின் மூலம் மிகத்துல்லியமான பலாபலன்களை அறிந்து சிறந்த பரிகாரம் செய்து நற்பலனடைய அணுகவும். எமது 30 ஆண்டுகால ஜோதிட அனுபவத்தில் அமெரிக்கா, கனடா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன், சுவிட்சர்லாந்து முதலிய நாடுகளிலிருந்து பல ஆன்மீகவாதிகளும்,அருள்வாக்குசொல்பவர்களும், தொழில்அதிபர்களும், கலைத்துறையைச் சார்ந்தவர்களும், பொதுப்பிரிவினர்களும் எம்முடன் தொடர்பு கொண்டு நற்பலன் அடைந்துள்ளனர்.

சுபமஸ்து!

**Contact:**

Jothisha Athithya, Jothisha Baruthi, Jothisha Sudar , Muligai Nambi , Mani ManthiraV aithiya Jothisa Galagnani
Gnanayohi Dr .p.Esakki, IBAM,RMP , D.I.S.M 18(25B\1), Pulavar Street, Krishnapuram,Kadayanallur -627759
Thirunelveli District , Tamil Nadu > India. Phone For ISD:0091-4633-243029, Tele Fax:04633243029
Cell:98425-29691,98425-10578, Fax:04633-240390, Email:Pramasivan_esakki@yahoo.com
Website;-www.gnanayohi.com Consultation by appointment only .


# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



**நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை.**
*-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ!

**தமிழ்,** சிங்களப் புத்தாண்டு எண்டு ஒண்டு இல்லாட்டில் இந்த நாட்டில் உந்த ரெண்டு இனங்களுக்கிடையில எந்த ஓட்டுமில்லை உறவுமில்லை எண்டு ஆகியிருக்கும். உதில ஒரு அதிசயம் என்ன தெரியுமோ? ஒரு நாட்டில ரெண்டு தேசிய இனங்கள் கொண்டாடக் கூடிய ஒரு பண்டிகை அமையுறது அபூர்வமுங்கோ. அதுவும் இனப்பிரச்சினையில எரிஞ்சு சாம்பலாகிக் கொண்டிருக்கிற இந்த நாட்டில, இன்னும் சித்திரைப் புத்தாண்டை ரெண்டு தேசிய இனமும் கொண்டாடிறது விஷேசமுங்கோ.

இந்தமுறை சித்திரைப் பெருநாளை தமிழ் மக்கள் ரொம்ப மகிழ்ச்சியோடை கொண்டாட இல்லை எண்டதுக்கு காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். அகதி முகாம்களில மட்டும் சுமார் ரெண்டு லட்சம் பேர் இருக்கினம். கொஞ்சப்பேர் நண்பர்கள், உறவினர்களின்ர வீடுகளில் இருக்கினம். அகதியாக நாட்டை விட்டுப் போனவையில் பாதிப் பேர் எண்டு கவலை தரக்கூடிய காரணங்களின்ர பட்டியல் நீளமானதுங்கோ. சரி தமிழ் மக்கள் மட்டும் தான் கொண்டாட இல்லையோ எண்டால் இல்லையுங்கோ. இந்த வருஷம் சிங்கள மக்களும் பெரிசா புதுவருஷம் கொண்டாடினமாதிரி இல்லை. ஏன் எண்டு கேட்டால், அதுக்கு இருக்கிற பிரதான காரணங்களில ஒண்டு எப்ப எங்க குண்டு வெடிக்குமோ, என்ன அசம்பாவிதம் நடக்குமோ எண்ட அச்சம்தானுங்கோ காரணம்.

உதை யோசிக்கேக்க என்ன தெரியுது. ரெண்டு இனங்களுக்கிடையில நடக்கிற சண்டையில ஒரு இனம் மட்டும் பாதிக்கப்படுகிறது இல்லை எண்டதுதானே. ஒருவேளை பாதிப்புகள், இழப்புக்களின்ர அளவு வித்தியாசப்படலாம். ஆனால் விளைவு ஒரே அளவானது தானுங்கோ.

ஏதும் நடக்குமோ எண்ட அச்சத்தினாலை சனம் இருக்கிறது ஒரு பக்கமுங்கோ. புது வருஷ தினத்திலையும் செத்த வீடு நடத்திற துர்ப்பாக்கியம் ரொம்பக் கொடுமையுங்கோ. நண்பர் ஒருவர் வீட்டில செத்த வீடு நடந்து முப்பத்து ஒன்று முடிவடையவில்லையெண்டு சித்திரை கொண்டாட இல்லையாம். உப்பிடி எத்தனை வீடுகள் முப்பத்து ஒண்டு செய்து கொண்டிருக்கினம். வடக்கு, கிழக்கில இண்டைக்கு சும்மா ஒரு கணக்கெடுப்பு நடத்தினாலும் சுமார் நூறுக்கு மேற்பட்ட வீடுகளில் செத்த வீட்டுக் காரியங்கள் நடந்து கொண்டிருக்குது.

சில பேருக்கு நான் உப்பிடிச் சொல்லிறது வேடிக்கையாகவும் இருக்குமுங்கோ. அது அவையின்ர தப்புமில்லையுங்கோ. ஏன் எண்டால் சித்திரைப் பெருநாள் அண்டைக்கு இன்னொரு நண்பருக்கு கடுமையான வருத்தம் எண்டு சொல்லிச்சினம். நானும் ஒடிப்போன நான். உங்க போனால் நண்பரின்ர உறவுச்சனமெல்லாம் கொஸ்பிடலில அழுதுகொண்டு இருந்திச்சினம். அந்த வழியால் வந்த இன்னொரு நோயாளியின்ர தாய் அழுதுகொண்டு வந்ததா, தன்ர மகனையும் ஆபத்தான கட்டத்தில உள்ள கொண்டு போயிருக்கினம் எண்டு சொன்னார். பிறகு கொஞ்ச நேரம் கழிச்சு டாக்டர் வந்து என்ர நண்பர் வீட்டாரையும், அந்தத் தாயையும் பார்த்து ரொம்ப சங்கடத்தோடை சொன்னார். அந்தத் தாயின்ர மகன் இறந்திட்டா எண்டும் என்னுடைய நண்பரைத் தான் காப்பாற்றிப் போட்டன் எண்டும். அவர் உப்பிடிச் சொன்னவுடன அந்தத்தாய் நெஞ்சைப் புடிச்சுக் கொண்டு அலறிக் கத்திக் கொண்டு விழுந்திட்டா. ஆனால் என்ர நண்பரின்ர வீட்டுக்காரர் தாங்கள் கூப்பிட்ட கடவுள் தங்களைக் கைவிட இல்லை எண்டு சொல்லி டாக்டரை நன்றியோடை பாத்திச்சினம். அவையின்ர அழுகை நிண்டிட்டுது. உதில பாருங்கோ ஒரே சந்தர்ப்பத்தில நமக்கு இல்லாமல் நமக்குப் பக்கத்தில நடந்த ஒரு இழப்பை எப்படி நாங்கள் கண்டுகொள்ளாமல் இருக்கப் பழகிவிட்டோம். நண்பரைக் காப்பாற்றிய கடவுள் அந்தத் தாயின்ர மகனைக் கையை விட்டுப் போட்டாரே எண்டு யோசிக்கேக்க ஒரே குழப்பமாக இருந்திச்சிதுங்கோ. பிறகு நான் அந்தத் தாய்க்கு எவ்வளவோ ஆறுதல் சொல்லியும் அந்தத் தாய் சமாதானப்படயில்லை. நாம என்ன செய்ய முடியுமுங்கோ. ஒரு கதைக்கு அந்த இழப்பு எனது நண்பர் வீட்டுக்காக இருந்திருந்தால் எப்புடி இருந்திருக்கும் எண்டு யோசிச்சுப் பார்த்தேனுங்கோ. நம்மில பலருக்கு உப்பிடி நடக்கிறது, நாளைக்கு நமக்கும் நடக்கலாம் எண்ட நினைப்பே இல்லையுங்கோ. எல்லாத்திலையும் அசமந்தம். சுயநலம் என்னங்கோ, செய்யிறது. இன்னொருவரின்ர சுக துக்கங்களில பங்கு கொண்டு மற்றவையோடை சேர்ந்து வாழிற காலம் ஒண்டு வந்தால்தானுங்கோ பண்டிகைகள் மட்டுமல்லாமல் எல்லா நாளும் குதூகலமாக இருக்கும் எண்டு நினைக்கிறன். சரி கடைசியா நான் சித்திரையைக் கொண்டாடினேனா இல்லையா எண்டு யோசிக்காதேங்கோ. வழக்கம்போல சம்பிரதாயக் கொண்டாட்டம் தான். திருப்தியான கொண்டாட்டம் எண்டால் எங்கட நாட்டில, எங்கட மக்கள் சந்தோசமாகக் கொண்டாடிற நாள் திரும்பினால்தான் எனக்கும் கொண்டாட்டம் புரியுதோ.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

**(19.04.2007 தொடங்கி 25.04.2007 வரை)**

# ஞானயோகி. டாக்டர். ப.இசக்கி

**மேஷம்:-** மேஷராசி அன்பர்களே, செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். நெருப்பு சம்பந்தப்பட்ட தொழில்கள், இராணுவத் தொழில், பொலிஸ் துறையைச் சார்ந்தவர்கள் நற்பலன் அடைவார்கள். குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகள் வந்து விலகும். கலைத்துறையினரும், அரசியல்வாதிகளும் லாபம் அடைவர். திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். தூரத்து யாத்திரை மேற்கொள்வீர்கள். உடம்பில் மேகம் சம்பந்தமான பிணிகள், உஷ்ண சம்பந்தமான பீடைகள் வந்து விலகும். பொருளாதாரம் சுமாராக காணப்படும். இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
**இராசியான எண்:-** 3
**இராசியான நிறம்:-** மஞ்சள்
**இராசியான திசை:-** வடகிழக்கு
**பரிகாரம்:-** சிவ வழிபாடு செய்து கடலை தானம் செய்யவும்.

**ரிஷபம்:-** ரிஷபராசி அன்பர்களே, புதன் நன்மை தரும் கிரகமாகும். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுதல் நல்லது. உடம்பில் வாயு மற்றும் வயிற்று உபாதைகள் வந்து நீங்கும். எழுத்துப் பணி செய்வோர் வங்கிப் பணியாளர்கள், காய்கறி வியாபாரிகள் லாபமடைவர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பணப் புழக்கம் நன்றாக இருக்கும். பொருளாதார நெருக்கடி உண்டாகும். பிள்ளைகளால் பொருட் செலவுகள் உண்டு. பெண்கள் விஷயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும். பங்குத தொழிலில் நஷ்டத்தை அடைவீர்கள். கொடுக்கல் வாங்கலில் நாணயம் காப்பாற்ற இயலாது. உடம்பில் சளி சம்பந்தப்பட்ட உபாதைகள் ஏற்படும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
**இராசியான எண்:-** 8
**இராசியான நிறம்:-** நீலம்
**இராசியான திசை:-** தென் மேற்கு
**பரிகாரம்:-** அம்மன், சாஸ்த்தா, ஆஞ்சநேயர் வழிபாடு செய்து எள் தானம் செய்யவும்.

**மிதுனம்:-** மிதுனராசி அன்பர்களே, சனி நன்மை தரும் கிரகமாகும். உடம்பில் நரம்பு, மற்றும் உணவுக்குழல் சம்பந்த மான பீடைகள் உண்டாகும். வாகனத் தொழில்கள், ஆடம்பர அலங்காரப் பொருட் கள், இனிப்புப் பொருள் வியாபாரிகள், நாடகக் கலைஞர்கள் இவர்களுக்கு நற்பலன் உண்டாகும். தன புழக்கம் நன்றாக இருக்கும். வங்கிகளால் எதிர்பார்த்த பணம் கிடைக்கும். உத்தியோகத்தில் கவனம் தேவை. அரசியல்வாதிகளுக்கு நற்பெயர், புகழ் உண்டாகும். பிள்ளைகளுக்கு திருமண காரியங்கள் நிறைவேறும். தாய், தந்தைகளுக்கு சிற்சில பிரச்சினைகள் வந்து விலகும். இது ஒரு நற்பலன் தராத வாரமாகும்.
**இராசியான எண்:-** 8
**இராசியான நிறம்:-** நீலம்
**இராசியான திசை:-** தென் மேற்கு
**பரிகாரம்:-** ஐயப்பன் வழிபாடு செய்து எள் தானம் செய்யவும்.

**கடகம்:-** கடகராசி அன்பர்களே, சனி நன்மை தரும் கிரகமாகும். பூ, பழம் போன்ற வியாபாரிகள் ஆலயப் பணி செய்வோர்கள், வக்கீல்கள், நீதிபதிகள் பேராசிரியர்கள் மற்றும் சேர் மார்க்கெட், பினான்ஸ் தொழில் நடத்துவோர்களுக்கு நற்பலன் உண்டாகும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். சகோதரர்களால் அனுகூலம் ஏற்படும். வீட்டைத் திருத்திக் கட்டுவதற்கு முயற்சி செய்வீர்கள். எதிரிகள் தொல்லைகள் தீரும். கடன்கள் கிடைக்க வாய்ப்பு உள் ளது. செய் தொழிலில் எச்சரிக்கையுடன் இருக்கவும். காதல் விஷயங்களில் வெற்றி தேடித் தரக் கூடிய கால மாகும். உடம்பில் வயிறு, மூலம் சம்பந்தமான உபாதை கள் வந்து நீங்கும். இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
**இராசியான எண்:-** 5
**இராசியான நிறம்:-** பச்சை
**இராசியான திசை:-** வடக்கு
**பரிகாரம்:-** மஹாவிஷ்ணு, ஆஞ்சநேயர் வழிபாடு செய்து பாசிப்பயிறு தானம் செய்யவும்.

**சிம்மம்:-** சிம்மராசி அன்பர்களே, சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். புதிய தொழில் தொடங்குவதைத் தள்ளிப் போடவும். இரும்பு, இயந்திர சம்பந்தமான தொழில்கள், எண் ணெய் வியாபாரம் செய்வோர், பலசரக்குத் தொழில் வியா பாரம் செய்வோர் லாபம் அடைவர். குடும்பத்தில் அமைதி ஏற்படும். பொருளாதாரம் சீராக இருக்கும். புதிய வீடு, நிலம், கார் போன்றவை வாங்குவீர்கள். நண்பர்கள் மற்றும் பங்காளிகளால் ஆதாயம் உண்டாகும். திருமணமாகாத வர்களுக்கு மணமாகின்ற காலமாகும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பதில் பணம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இது ஒரு நற்பலன் தரக்கூடிய வாரமாகும்.
**இராசியான எண்:-** 6
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** தென்கிழக்கு, மேற்கு
**பரிகாரம்:-** மஹாலஷ்மி வழிபாடு செய்து மொச்சை தானம் செய்யவும்.

**கன்னி:-** கன்னிராசி அன்பர்களே, செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். இனிப்புப் பொருட்கள் வியாபாரம் நடத்துவோர்கள், கோயிலில் பணிபுரிவோர்கள், பேராசிரியர்களுக்கு நற்பலன் தரும் காலமாகும். கணவன் - மனைவி உறவு சுமாராக இருக்கும். வெளிவட்டாரப் பழக்கவழக்கங்களால் ஆதாயம் உண்டாகும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு உத்தியோக உயர்வு மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவு உண்டாகும். உடம்பில் உஷ்ண சம்பந்தப்பட்ட நோய்கள், நரம்பு சம்பந்தமான பிணிகள் வந்து நீங்கும்.இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.
இராசியான எண்:-9
இராசியான நிறம்:-சிகப்பு
இராசியான திசை:-தெற்கு
பரிகாரம்:-முருகன் வழிபாடு செய்து துவரை தானம் செய்யவும்.

**துலாம்:-** துலாராசி அன்பர்களே, சூரியன் நன்மை தரும் கிரகமாகும். உடம்பில் மேகம் மற்றும் உஷ்ண சம்பந்தமான பீடைகள் வந்து நீங்கும். கட்டிட சம்பந்த மான கல், மணல், சிமிண்ட், செங்கல் வியாபாரிகள் சினிமாத் துறையைச் சார்ந்தவர்கள், கார் போன்ற வாகனத் தொழில் செய்வோர்கள் லாபம் அடைவர். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். கட்டிட சம்பந்தமான பொருட்கள், காண்டிராக்ட் தொழில் செய்வோர்கள், அரசு ஊழியர்கள் லாபம் அடைவர். தெற்கு திசையிலிருந்து பெண்களால் நன்மை அடைவீர்கள். பங்காளிகளிடம் எச்சரிக்கையாக இருக்கவும்.இது ஒரு நற்பலன் தராத வாரமாகும்.
**இராசியான எண்:-** 1
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** கிழக்கு
**பரிகாரம்:-** சிவ வழிபாடு செய்து கோதுமை தானம் செய்யவும்.

**விருச்சிகம்:-** விருச்சிகராசி அன்பர்களே, சந்திரன் நன்மை தரும் கிரகமாகும். இரசாயனத் தொழில், வட்டித் தொழில், கண்ஸ்டிரக்ஸன்ஸ் ,காண்டிராக்ட் கமிஷன் தொழில் செய்வோர்கள், மீன், முட்டை, மாமிச உணவு வியாபாரிகள் லாபமடைவர். குடும்பத்தில் பிரச்சினைகள் வந்து நீங்கும். உடம்பில் மூளை, நரம்பு, முதுகு சம்பந்தமான உபாதைகள் வந்து நீங்கும். கூல்டிரிங்ஸ், தண்ணீர் சம்பந்தமான பொருட்கள் வியாபாரம் செய்வோர்களும் பூசை சாதனங்கள், பொதுத் தொண்டு நிறுவனத்தோர்கள் மருத்துவர்கள், மருத்துவமனை நடத்துவோர்களும் நல்ல லாபம் பெறக்கூடிய காலமாகும். இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
**இராசியான எண்:-** 2
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** மேற்கு
**பரிகாரம்:-** அம்மன் வழிபாடு செய்து பச்சரிசி தானம் செய்யவும்.


**தனுசு:-** தனுசுராசி அன்பர்களே, புதன் நன்மை தரும் கிரகமாகும். பிள்ளை களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத் தில் வீண் சலசலப்புகள் வந்து நீங்கும். எதிர்பார்த்த கடன்கள் கிடைக்கும். அர சுத்துறையின் மூலம் உதவிகள் கிடைக்கும். நீண்டதூரயாத் திரைகள் மூலம் நற்பலன் ஏற்படும். சுபகாரிய நிகழ்ச்சிகள் குடும்பத்தில் ஏற்படும். பொருளாதாரம் நன்றாக இருக்கும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளால் வீண் செலவுகள் ஏற்பட்டலும் அவர்களால் ஆதாயம் உண்டாகும். கண்டங்கள் வந்து நீங்கும். திருமணமாகாதவர்களுக்கு திரு மண காரியம் நிறை வேறும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
**இராசியான எண்:-** 5
**இராசியான நிறம்:-** பச்சை
**இராசியான திசை:-** வடக்கு
**பரிகாரம்:-** மஹாவிஷ்ணு வழிபாடு செய்து பாசிப்பயிறு தானம் செய்யவும்.

**மகரம்:-** மகரராசி அன்பர்களே, சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். உடம்பில் கண், பல் சம்பந்தமான வியா திகள், நரம்புத் தளர்ச்சி, மனோவியா திகள் வர வாய்ப்பு உள்ளது. நீண்ட தூரப் பயணங்கள் வெற்றியளிக்காது. காதல் விஷயங்களில் கவனம் தேவை. மனைவிக்கு நோய் வாய்ப்படும். மாணவர்கள், கலைத்துறை யினர் எச்சரிக்கையுடன் இருக்கவும். பணப்புழக்கம் சிறிது நெருக்கடி வந்து விலகும். வீடு, நிலம் போன்றவைகளில் மாற்றம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பிள்ளைகளுக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். கோர்ட் வழக்கு விவகாரங்களில் வெற்றியடைவீர்கள். உடம்பில் சுவாச சம்பந்தமான கோளாறுகள், அலர்ஜி போன்ற நோய்கள், சளித் தொல்லைகள் ஏற்படும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.
**இராசியான எண்:-** 6
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** தென்கிழக்கு
**பரிகாரம்:-** மஹாலஷ்மி வழிபாடு செய்து மொச்சை தானம் செய்யவும்.

**கும்பம்:-** கும்பராசி அன்பர்களே, வியாழன் நன்மை தரும் கிரகமாகும். நண்பர்களாலும், உறவினர் களாலும் ஆதாயம் உண்டு. புதிய ஆடை அணிக லன்கள் வாங்குவீர்கள். புதிய வீடு கட்டக் கூடிய காலமாகும். குடும்பத்தில் பிரச்சினைகள் வர வாய்ப்பு உள்ளது. பொருளாதார நெருக்கடி ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் பரிசுகள் கிடைக்கும். புதிய வீடு மாற்றம் ஏற்படும். செய்தொழிலில் கவனம் தேவை. யாத்திரை விலக்கவும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு உத்தியோக உயர்வு மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவு உண்டாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
**இராசியான எண்:-** 9
**இராசியான நிறம்:-** சிகப்பு
**இராசியான திசை:-** தெற்கு
**பரிகாரம்:-** முருகன் வழிபாடு செய்து துவரை தானம் செய்யவும்.

**மீனம்:-** மீனராசி அன்பர்களே, செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். பிள்ளைகளால் சிற்சில பொருட் செலவுகள் உண்டாகும். உடம்பில் உஷ்ண சம்பந்தமான பிணிகள், இதய நோய் வந்து விலகும். நெருப்பு சம்பந்தப்பட்ட தொழில், ஹோ ட்டல் தொழில்கள், மின் சாரப் பணி செய்பவர்கள், தீயணைப்புத் துறையினர் ஆகியோர்கள் லாபம் அடைவர். செய்தொழிலில் நல்ல லாபம் தரும் காலமாகும். காதல் வெற்றியளிக்கும். நித்திரை பங்கம் ஏற்படும். நீண்ட தூரப் பயணங்களைத் தள்ளிப் போடவும். உடம்பில் எலும்பு இரத்தம் சம்பந்தமான பிணிகள் வர வாய்ப்பு உள்ளது. இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.
**இராசியான எண்:-** 2
**இராசியான நிறம்:-** மஞ்சள்
**இராசியான திசை:-** வடகிழக்கு
**பரிகாரம்:-** சிவ வழிபாடு செய்து அரிசி தானம் செய்யவும்.

Regd. as a News Paper at the G.P.O.(QD/66/NEWS/2007)



## திரை

உலகிலேயே மிகப் பெரிய திரவ பளிங்குத்திரை தென் கொரியாவிலுள்ள பாயு என்ற இடத்தில் கடந்த வருடம் மார்ச் மாதம் உருவாக்கப்பட்டது. தென் கொரியாவைச் சேர்ந்த L.G. பிலிப்ஸ் என்ற நிறுவனத்தின் பங்குதாரரான L.G.யும் நெதர்லாந்தைச் சேர்ந்த பிலிப்ஸ் என்ற நிறுவனமும் இணைந்து இப்பெரிய திரையை உருவாக்கின. 7 அடி 2 அங்குலம் அகலமும், 3 அடி 11 அங்குலம் உயரமும் கொண்டது இத் திரையென்பது குறிப்பிடத்தக்கது. இன்று கையடக்கத் தொலைபேசிகளிலேயே பெரியளவிலான திரைகளில் காட்சிகளைப் பார்கின்ற வசதி சர்வ சாதாரணமாகி விட்டது. தொலைக்காட்சிப் பிரியர்களின் ஆவலைத்தூண்டும் விதமாகவும், கவர்ச்சிகரமாகவும் தட்டை வடிவ திரையமைப்பு கொண்ட தொலைக்காட்சிகள் பாவனைக்கு வந்து விட்டன. இனித் திரையரங்குகளுக்குச் செல்லுபவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படுமென்கின்றனர். திரையரங்கு உரிமையாளர்கள்.

## பயிற்சி





அல்பெட் ஜன்கின்ஸன் என்றால் விஞ்ஞானியின் பெயரென்று நினைத்து விடுவீர்கள் இல்லவேயில்லை. மூன்று வயது நிரம்பிய வர்ண மீனொன்றின் பெயர் இது. அமெரிக்காவைச் சேர்ந்த மீன் பொமர் லியூ என்பவர் வளர்த்து வரும் இந்த மீன் சாகச விளையாட்டுக்களைக் காட்டி வருகிறதாம். உதைபந்தாட்டம் உட்பட 6 விதமான சாகசங்களில் இந்த மீன் ஈடுபடக்கூடியதென்று கூறப் படுகிறது. அமெரிக்காவின் பெனிசில்வேனியா மாநிலத்திலுள்ள கிப்சேனியா என்ற இடத்தில் இருக்கும் "மீன் பாட சாலை" யில் இந்த மீன் வளர்ந்து வருகிறது.


## பிரச்சாரம்




விலங்குகளை உணவுக்காக கொல்வது பாவம்என்று அதை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதை ஏற்கனவே அறிந்திருப்பீர்கள். இது முட்டை உண்பதை எதிர்த்து நடந்த போராட்டம். இந்தப் போராட்டத்தை இந்தியாவின் திருவனந்தபுரம் மாவட்டத்தில் மாணவிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

**பிரேஸிலைச்** சேர்ந்த ரொனால்டோ, உலகப் பிரசித்தி பெற்ற உதைபந்தாட்ட வீரர் லுஸ் நாசாரியோ டி லிமா ரொனால்டோ என்பது இவரது முழுப் பெயர். சர்வதேச உதைபந்தாட்டச் சங்கம் நடத்திய உலக உதைபந்தாட்டப் போட்டிகளில் 3 வருடங்கள் சிறந்த உதைபந்தாட்ட பட்டத்தை தட்டிச் சென்றுள்ளார். 1996, 1997, 2002 ஆம் ஆண்டுகளில் இந்த விசேட விருது இவருக்குக் கிடைத்தது. இவரைப் போன்று பிரான்ஸைச் சேர்ந்த உதைபந்தாட்ட வீரரான சினேடைன் சிடானேன் என்பவரும் மூன்று தடவைகள் இந்த விசேட விருதைப் பெற்றுள்ளார். 1998, 2000, 2003 ஆகிய ஆண்டுகளில் இந்த விருதை அவர் பெற்றுக் கொண்டார்.

## தாய்மை



**ஐம்பது** வயதைத் தாண்டினால் பெண்கள் கர்ப்பம் தரிப்பது அபூர்வமென்று கூறப்படுகின்றது. ஆனால் 66 வயதிலேயே குழந்தையொன்றைப் பிரசவித்து சாதனை யொன்றினை நிலை நாட்டியுள்ளார் ரோமானியப் பெண்மணி ஒருவர். அட்ரியானா எமிலியா இலஸ்கூ என்ற பெயரைக் கொண்ட இந்தப் பெண்மணி 1938 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி பிறந்தவராவர். 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16ஆம் திகதி ரோமானியாவின் தலைநகரமான புச்சாரெஸ்டிலுள்ள பெண் நோய், மகப்பேற்று மருத்துவமனையில் பெண் குழந் தையொன்றினைப் பிரசவித்தார். அப்போது இவருக்கு வயது 66 வருடங்களைத் தாண்டி 230 நாட்கள் கடந்து விட்டிருந்தது. பிரசவத்தில் சிக்கல் ஏற்பட்டதால் சீசேரியன் அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தை வெளியே எடுக்கப்பட்டது.



## விருது





மிகிந்து செவன
வீட்டுக்கடன்

EXPRESS SERVICE HOUSING LOANS WITHIN 24 BUSINESS HOURS
துரித வீட்டுக்கடன்

NSB
நகை அடகுவைக்கும் சேவை

வெளிநாட்டில் தொழில் புரிவோருக்கான வீட்டுக்கடன்

அலங்கார

PERSONAL LOAN SCHEME
தனிப்பட்ட கடன்திட்டம்

இன்னுமொரு மைல் கல்லை அடைகின்றோம்
தேசிய சேமிப்பு வங்கி **கடன்வழங்கும் நோக்கத்திற்காக மட்டுமே** ஜா-எலயில் ஒரு காரியாலயத்தை திறந்துள்ளது
**தேசிய சேமிப்பு வங்கியின் கடன் நிலையம்...**
விரைவான, பிரச்சனைகள் அற்ற, உரிய நேரத்திலான சேவைகளுக்கு

NSB LOAN CENTRE

# ஜா-எல

134, நீர்கொழும்பு வீதி, ஜா-எல
தொலைபேசி / பக்ஸ்: 2229305
உடனடி அழைப்பிற்கு: 5667881

காலை 10.30 முதல் இரவு 7.00 மணிவரை திறந்திருக்கும்

www.nsb.lk

தேசிய சேமிப்பு வங்கி NSB